3

363

சக்தி

மாத வெளியீடு

தாரண ஹூ
ஐப்பசி மீ

-/8

12 NOV 1944
MAD...

கதை

சாமிதர்சனம்
களங்கம் -
மறைந்தது
சே[illegible]மசன்மா

கட்டுரை

பழந்தமிழர் -
வாழ்க்கை
தளபதி டிகால்

வரலாறு

ஸர் ஸி. வி. ராமன்
புதிய சீனு

பாடல்

காற்று

குறிப்பு

மற்றோர் -
உபவாசமா !
புத்தக உலகம்
காலச் சுழல்

இன்றே பாருங்கள்
சின்னப்பா
கண்ணாம்பா
கிருஷ்ணன்..
மதுரம்...........
சரோஜா........
மீனலோசனி
JUPITER PICTURES
மஹா
மாயா
S.I.P
ரிலீஸ்
S.I
PUBLICITIES
டைரக்ஷன்: T.R.ரகுநாத் & இளங்கோவன் • ஸ்டுடியோ: நியூடோன்

88848

22 NOV 1944
MADRAS

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில்
நிகரற்றது

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர் :

டி. எஸ். ஆர். & கோ

கும்பகோணம்

ஸ்டாகிஸ்ட் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி, மதராஸ்

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

தாரண
மலர் 11

சக்தி

ஐப்பசி
இதழ் 1

**அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!**

மற்றோர் உபவாசமா!

புருஷாயுசு நூறு என்பார்கள். அதில் முக்கால் நூறை மகாத்மா காந்தி எட்டிவிட்டார். அவரது உள்ள வலிமை என்றும் குன்றா இளமை வாய்ந்ததுதான். ஆனால், வயதின் நிறைவால் உடலின் முதுமை, தளர்வும் அசதியும் அடையவே செய்யும். சமீபத்தில்தான் கடும் நோய் காரணமாக வெளிவந்தார். அதிலிருந்து குணமடைந்து இன்னும் பல காலம் ஆகிவிடவில்லை. சில வாரங்களுக்கு முன்புதான், அவரது எழுபத்தாறுவது ஜயந்தி எங்கும் கொண்டாடப்பட்டது. இந்த நிலையில் மற்றோர் 'உபவாசம் எனக்குக் காத்திருக்கிறது' என்கிறார் மகாத்மா. இந்தச் சேதியைக் கேட்டு, தேசம் மனங்கலங்கவே செய்யும்.



காந்திஜி இன்னும் அந்த விஷயத்தில் முடிவான தீர்மானம் ஒன்றும் செய்யவில்லை என்ற அளவில் நாம் சிறிது நிம்மதி யடையலாம். ஆனால், ஒரு கருத்து, மகாத்மாவின் மனதிலே பட்டுவிட்டால், முடிவு வரையில் அதைத் தொடர்ந்து, சோதித்து, திட்டமான செயல் காணாமல் விட மாட்டார். பிரிட்டிஷ் சர்க்கார் வகுப்புத்தீர்ப்பு வழங்குமுன், சிறையிலிருந்து அவர்களுக்கு மகாத்மா ஒரு கடிதத்தில், 'இந்து சமூகத்திலிருந்து, ஹரிஜனங்களைப் பிரிப்பதை உயிரைக் கொடுத்தும் எதிர்ப்பேன்' என்று எழுதினார். ஏதோ ஒரு கடிதத்தினிடையே தம் அபிப்பிராயத்தை வலியுறுத்தும் ஒரு வாக்கியம் இது. இதையே கடவுள் ஆக்ஞையாக அவர் மதித்துவிட்டார். இதுவே புனா உபவாசத்தின் வித்தாக அமைந்துவிட்டது.

இன்று மகாத்மாஜி சொல்லுகிறார் 'கட்டுப்பாடான பலாத்காரம் என்னைச் சூழ்ந்திருக்கிறது' என்று. வகுப்பு ஒற்றுமையையோ, வேறெந்தக் குறிப்பிட்ட பலனையோ நோக்கத்தில் கொண்டு, தாம் உபவாசம் ஆரம்பிக்கப்போவதில்லை என்று அவர் கூறுகிறார். ஆத்ம பரிசுத்தத்துக்காகவே உபவாசத்தை உத்தேசிப்பதாகச் சொல்லுவதால், கால வரம்பு கொண்டதாகவே, அது இருக்கும். ஆனால் எந்தக் குறிப்பிட்ட காரணங்

களுக்காக என்பதை அவர் வியக்த மாகச் சொல்லவில்லை. 'பொய்யும் பலாத்காரம்தான். சர்க்காரின் பலாத்காரத்தை மட்டில், நான் இங்கே குறிப்பிடவில்லை' என்று அவர் குறிக்கிறார். இந்தப் பலாத்காரத்தை எதிர்க்க, அஹிம்சா சக்தி தீவிரமாய்ச் செயல் புரிந்தாகவேண்டும் என்கிறார். அதற்காகவே, உபவாசம் என்று ஏற்படுகிறது.

தம்மைச் சூழ்ந்திருக்கும் பொய்யையும் புனைசுருட்டையும் கண்டு, மகாத்மாஜி உபவாசம் தொடங்க விரும்புகிறார் என்றால், யார் சொன்ன பொய்கள் அவை? தம்மை நெருங்கிய காங்கிரஸ்காரர்களையே தான் அவர் மனதில் கொண்டிருக்கிறாரோ ஒருவேளை? சகல கேடுகளினின்றும் விடுவிக்கும் சஞ்சீவி சத்தியமே என்பது மகாத்மாஜியின் நெடுங்கால நம்பிக்கை. சத்தியம் தவறுமிடத்திலே, அவரது தலைமை சாத்தியமில்லை. பிறரின் பொய்களுக்காக, அவர் காயக்கிலேசம் செய்வானேன்? அவர் வழிகள் நமக்கு விளங்கவேயில்லை. ஆனால், அவரை மறுத்துப் பேச, நாம் யார்? ஆத்ம சக்தி என்றால், நமக்கு என்ன என்றே புரியவில்லை. ஆயினும், ஆத்ம சக்தியைப் பற்றி அந்த உத்தமன் குறிப்பிடும்போது, அது கண்டிப்பாய் இருக்கவே வேண்டும் என்று நாம் நம்பத்தான் தோன்றுகிறது.

எது என்னவாயினும், தாம் மற்றோர் உபவாசம் புரியக்கூடும் என்று அவர் கூறும்போதுமட்டும் நமதுள்ளம் பதறுகிறது. அவர் அநேக உபவாசங்கள் புரிந்தவர். யாவற்றையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர். ஒவ்வோர் உபவாச காலத்திலும், தேசமே மனங்கலங்கி நின்றது. ஒவ்வோர் உபவாச முடிவிலும், அது பெருமகிழ்ச்சியும் எய்தியது. ஆயினும், இந்தப் பழுத்த பருவத்தில் இன்னுமோர் உபவாசம் என்றால், மீண்டும் நமக்கு மனக் கலக்கந்தான் உண்டாகிறது. மகாத்மாஜியின் உபவாசம் நிகழாமலிருக்க வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை. நிகழ்ந்தால், எந்த விபரீதமும் நேராமல் காப்பாற்றுவது தெய்வத்தின் பொறுப்பு. உத்தமர்களைத் தெய்வம் ஒருநாளும் கைவிடாது. ஏனெனில், அவர்களைக் கொண்டுதான், தெய்வம் மனித உள்ளத்திலே நிலைபெற்று வாழவேண்டும்.

✲

பயம் எதற்கு?

மார்க் ட்வெய்ன் ஒரு பெரிய அமெரிக்க எழுத்தாளர். ஒரு முறை விஸ்லர் என்ற ஒரு சித்திரக்காரர் அவரைத் தம் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், தாம் எழுதி முடித்த ஒரு படத்தை அவருக்குக் காட்டினார். ட்வெயின் கொஞ்ச நேரம் வரையில் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார். ஓவியர், படத்தின் ஒரு மூலையில் சில மேகங்களையும் வரைந்திருந்தார்.

ட்வெயின் விஸ்லரைப் பார்த்து, "நானுயிருந்தால் இந்த மேகங்களை எழுதியிருக்க மாட்டேன்" என்றார். விஸ்லர் பேசாமலிருந்தார்.

ட்வெய்ன் அலட்சியமாகத் தம் கை விரலை அந்தப் படத்தின் நாலா மூலையிலும் கொண்டுபோனார். அவர் விரலைக் கொண்டுபோன விதத்தைப் பார்த்தால், அந்த மேகக் காட்சியையே அவர் அழித்துவிடுவார் போல் தோன்றியது.

விஸ்லருக்குப் பயம் உண்டாயிற்று. அவர் ட்வெய்னை நோக்கி, "சார், சார், கொஞ்சம் ஜாக்கிரதையாய்ப் பாருங்கள். வர்ணம் இன்னும் உலரவில்லை" என்றார்.

"பரவாயில்லை; நான் கையில் உறை போட்டிருக்கிறேன்" என்றார் ட்வெய்ன்!

காலச்சுழல்

காங்கிரஸின் புத்துயிர்: "சட்ட மறுப்பு இப்போதில்லை; சாதாரணமான நிர்மாணத் திட்டங்களை, காங்கிரஸ்காரர் நடத்தலாம்" என்று மகாத்மா காந்தி அறிக்கை செய்துவிட்டார். ஆகையால், பம்பாய், ஐக்கிய மாகாணம், பீஹார், வங்காளம் ஆகிய மகாணங்களைப் போலவே, சென்னையிலும் ஸ்ரீ முத்துரங்க முதலியாரின் தலைமையில் 60 - காங்கிரஸ்காரர்கள் கூடி, ஒரு காங்கிரஸ் சங்கம் ஸ்தாபிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். சங்கம் காங்கிரஸ் கமிட்டியே ஆகிவிடாது; காங்கிரஸ் அலுவல்களை நடத்த, காங்கிரஸ்காரர்களையே கொண்ட ஒரு புதிய ஸ்தாபனம்தான் ஆகும். இதன் அமைப்பு, ஆரம்பத்திலேயே ஒரு விவாதத்தைக் கிளப்பி யிருக்கிறது. காங்கிரஸின் 1942-ஆகஸ்ட் தீர்மானத்தை எதிர்த்த அல்லது எதிர்க்கும் பொதுவுடைமை வாதிகள், ராயிஸ்டுகள் முதலிய எவரும் தங்கள் சங்கத்தில் சேர யோக்கியதை உள்ளவர்கள் அல்ல என்று இச் சங்க அமைப்பாளர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். நெருக்கடியில் காங்கிரஸுக்கு ஊறு செய்தவர்கள் மீது, தீவிரக் காங்கிரஸ் வாதிகளுக்குக் கோபம் வருவது முற்றிலும் இயற்கைதான். ஆயினும், இந்தத் தீர்மானம் நடைமுறையில் உசிதமானதல்ல. கருமமே கண்ணாயிருப்பவர்கள், 'எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளல்' ஆகாது. 'சேர வாரும் ஜகத்தீரே!' என்ற முறையில் தான், எந்த நிலையிலும் சுதந்தர இயக்கத்தை - அதுவும் காந்தியின் தலைமையிலே - நடத்த முடியும். காங்கிரஸின் வேலைக்கு, எந்த வேளையில், யார், எவ்வளவு தூரம் ஒத்துழைக்க முன்வந்தாலும் அதை மனமுவந்து ஏற்பது அவசியமாகும். நாட்டிலே காங்கிரஸுக்குப் புத்துயிர் அளிக்கும் சென்னைக் காங்கிரஸ் சங்கம், தனது தீர்மானத்தைப் புனராலோசனை செய்து, உசிதமான வகையில் மாற்றும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம். இல்லையானால் வங்காளத்தைப்போல, போட்டா போட்டிக் காங்கிரஸ் அமைப்புகள் தோன்றி, வீண் மனஸ்தாபங்களைக் கிளப்பி, தமிழ்நாட்டில் தேசீய இயக்கத்தைச் சீரழிக்கக் கூடும். இதற்கு இடங்கொடுக்கலாமா?

காகிதக் கட்டுப்பாட்டு விபரீதம்: இந்தியாவுக்காக ஏராளமான நியூஸ் பிரிண்ட் காகிதத்தை நான்கு கப்பல்களில் அமெரிக்காவில் ஏற்றப் போனார்களாம். "வேண்டாம். ஏற்றாதே" என்று இந்திய வர்த்தகர்கள் அந்தச் சமயத்தில் தந்தி கொடுத்துவிட்டார்களாம். புறப்படும் சமயத்தில் தந்தி கிடைத்ததால் வேறு சரக்கும் ஏற்ற முடியாமல் இந்த இடம் காலியாகவே, அந்தக் கப்பல்கள் வந்து கொண்டிருக்கின்றனவாம். இப்படி ஒரு வதந்தி உலவுகிறது. இது உண்மையானால், இதன் காரணம் என்ன? ஏற்கெனவே வியாபாரிகளிடம் மிதமிஞ்சிய நியூஸ் பிரிண்ட் காகிதம் விற்பனையின்றிக் கிடக்கிறதாம். இன்னும் காகிதம் வந்து அழியாமல் மக்குவதில் என்ன பயன் என்று அவர்கள் நினைக்கிறார்களாம். இந்த நிலைமை, சர்க்காரின் நியூஸ் பிரிண்ட் கண்ட்ரோல் எவ்வளவு விபரீதமாய் நடக்கிறது என்பதையே காட்டுகிறது. கிளேஸ் காகிதத்தில் நடக்கும் பத்திரிகைகள் நியூஸ் பிரிண்ட் கேட்டால், சர்க்கார் கண்டிப்பாய் மறுக்கிறார்கள். புதுப் பத்திரிகைகள் போடவும் இடங்கொடுக்கவில்லை. உள்ள பத்திரிகைகளுக்கும் கருமித்தனமாகவே, நியூஸ்பிரிண்ட் காகித லைசென்ஸ் தருகிறார்கள். புத்தகம் முதலியவையோ, நியூஸ்பிரிண்டில் போடக்கூடாதென்கிறார்கள். ஆனால், இன்னொரு பக்கத்திலே, ஏராளமான நியூஸ் பிரிண்ட் காகிதம் விற்பனையின்றிச் சந்தி சிரிக்கிறதாம். வரும் காகிதம்கூட வராமல் நின்றுவிடுகிறதாம். இந்த விபரீதத்தை யாரிடம் போய் முறையிடுவது!

ஸர் ஸி. வி. ராமன்

வருணன்

மாங்குடி என்ற பெயரைக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அதுதான் ஸி. வி. ராமனுடைய பிதுரார்ஜித கிராமம். இது தஞ்சாவூர் ஜில்லா, பாபநாசம் தாலூக்காவிலுள்ளது.

இந்தக் கிராமத்தை விட்டு வெளியூருக்குச் சென்றவர்களில் சந்திரசேகர ஐயர் என்பவர் ஒருவர். இவர் திரிசிராப்பள்ளிக்குச் சென்று, அங்கே பி. ஏ. வகுப்பு வரையில் படித்தார்.

திரிசிராப் பள்ளியில் அக்காலத்தில் பிரபல வக்கிலாயிருந்த ஒருவருடைய பெண்ணை - பார்வதி என்று பெயர் - சந்திர சேகர ஐயருக்கு விவாகஞ் செய்து கொடுத்தார்கள். அந்த ஊரிலேயே படித்தார்; அந்த ஊரிலேயே விவாகஞ் செய்துகொண்டார்; அந்த ஊரிலேயே உத்தியோகமும் பார்த்துக் கொள்ள வேண்டியது தானே? திரிசிராப் பள்ளியிலேயே ஒரு பள்ளிக்கூடத்தில் ஓர் ஆசிரியராக இவருக்கு உத்தியோகம் கிடைத்தது. இப்படிச் சில வருஷங்கள் சென்றன. இந்தக் காலத்தில்தான் சந்திர சேகர-பார்வதி தம்பதிகளுக்கு வேங்கடராமன் பிறந்தார். இவர் பிறந்தது 1888-ஆம் வருஷம் நவம்பர் மாதம் ஏழாந்தேதி.

ஆந்திர நாட்டிலுள்ள விசாகப் பட்டணத்தில் மிஸஸ் ஏ. வி. என். காலேஜ் என்ற முதல்தரக் கல்லூரி ஒன்று உண்டு. 1891-ஆம் வருஷத்தில் இந்தக் காலேஜுக்கு பி. டி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் என்கிற ஒரு சரித்திர ஆராய்ச்சி நிபுணர், பிரின்ஸ்பாலாக நியமிக்கப்பட்டார். இவர் தமது நிருவாக காலத்தில் காலேஜ் நல்ல பெயருடன் விளங்க வேண்டுமென்று பெரிதும் பாடுபட்டார். இவரும் சந்திரசேகரரும் பாலிய சிநேகிதர்கள். அதனால் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் தம் நண்பரான சந்திர சேகரரை, மேற்படி காலேஜில் பொருளாதார சாஸ்திர போதகாசிரியராக நியமித்தார். அந்த வேலையைச் சந்திர சேகரரும் ஒப்புக் கொண்டு, தம் குடும்ப சகிதம் விசாகப் பட்டணத்திற்குப் பிரயாணமானார். அப்பொழுது குழந்தை ராமனுக்கு நான்கு வயது. திரிசிராப் பள்ளி ஏறக்குறையத் தென்கோடி; விசாகப் பட்டணம் ஏறக்குறைய வடகோடி. அந்தக் காலத்தில், இப்பொழுதுள்ளது போல் ரயில் வசதிகளும் கிடையாது. இதனால் சந்திர சேகரர் தம் குடும்ப சகிதம் சுமார் இருபத்திரண்டு நாட்களுக்குமேல் பிரயாணஞ் செய்ய வேண்டியிருந்ததாம்.

சந்திர சேகரர் விசாகப் பட்டணம் சென்று ஆசிரியர் பதவி ஏற்றுக் கொண்டு, பிள்ளைகளுக்குச் சிரத்தையோடு பாடஞ் சொல்லிக் கொடுத்தார். ராமன் ஐந்து வயதடைந்ததும் படிக்க வைக்கப்பட்டார். தகப்பனார் படிப்பித்து வந்த பள்ளிக்கூடத்தில் இவர் படித்து வந்தார்.

ராமன், ஒவ்வொரு வகுப்பிலும் முதல்வராக இருந்து, மற்றப் பிள்ளைகள் இவரிடத்திலிருந்து பாடங்கற்றுக் கொள்ளக்கூடிய மாதிரி படித்து வந்தார். பார்வைக்குக் குள்ளமாக இருப்பார். வயதிலும் சிறியவர். வயது வந்த பெரிய பிள்ளைகளைவிட இவர் துடியாக இருந்தது, ஆசிரியர்களுக்கு இவரிடத்தில் ஒரு விசேஷப் பிரீதியை உண்டு பண்ணியது. வகுப்புப் பாடங்களில் இவர் கவனஞ்செலுத்திப் படித்தாரேயானாலும், தமக்குப் பாடமில்லாத பல நூல்களையும் இவர் படித்து வந்தார். இவை பிற்காலத்தில் இவருக்கு நிரம்பப் பயன்பட்டன. இங்ங

உலகத்தின் மிகச் சில சயின்ஸ் மேதைகளில் ஒருவர் ஸர். ஸி. வி. ராமன். அவர் கண்டு பிடித்த ஒளியின் தத்துவம் ஒன்றுக்கு அவர் நாமத்தைக்கொண்டே 'ராமன் சித்தி' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். அவருடைய வாழ்க்கை வரலாறு அறிவும் குணமும் செறிந்ததாகும்.

னம் வரிசைக் கிரமமாகப் படித்து 'மெட்ரிகுலேஷன்' பரீட்சையிலும் எப். ஏ. பரீட்சையிலும் தேறினர்.

பின்பு, சென்னைக்கு வந்து பிரசிடென்சி காலேஜில் சேர்ந்து படித்து, பி. ஏ. பரீட்சையில் முதல்வராகத் தேறினர். இதற்காக இவர் பெற்ற பொற்பதக்கங்களும், பாராட்டுதல்களும் பல. இவருக்கு அப்பொழுது பதினறு வயதுதான். தமது பிரசிடென்சி காலேஜ் வாழ்க்கையைப் பற்றி இப்பொழுது இவர் பேசுகிற போது, ஒரு பெருமையாகப் பேசுவார். ஏனென்றல், அந்தக் காலத்தில் இவருக்கு ஆசிரியர்களா யிருந்த எலியட், ஜோன்ஸ் முதலிய ஆங்கில நிபுணர்கள் இவரிடத்தில் அதிக விசுவாசங் காட்டினர்கள். இவருடைய கூர்மையான அறிவை வியந்து பாராட்டி இவருக்கு மேன்மேலும் உற்சாகம் அளித்து வந்தார்கள்.

பின்னர் விஞ்ஞானத்தை முக்கியப் பாடமாக எடுத்துக்கொண்டு, ராமன் எம். ஏ. பரீட்சைக்குப் படித்தார். அது சம்பந்தமாக இவர் அடிக்கடி காலேஜின் பரிசோதனைச் சாலைக்குச் சென்று, ஆராய்ச்சி செய்து வந்தார். தமது பாடத்தில் வரும் விஷயங்களைப் பற்றி மட்டும் ஆராய்ச்சி செய்வதோடு இவர் திருப்தி யடையவில்லை. தாமே சுயமாகவும் சில ஆராய்ச்சிகள் செய்ய வேண்டு மென்பதற்காக, காலேஜ் அதிகாரிகளை அநுமதி கேட்டார். இவருக்குமட்டும் எப்படி விசேஷ அநுமதி கொடுக்க முடியும்? ஆனல் ஒரு சமயம் ராமன், பரிசோதனைச்சாலையில் வெளிச்சம் சம்பந்தமாக ஓர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது, சில புதுமைகள் கண்டார். ஒரு சிறு சந்தின் வழியாக வெளிச்சத்தின் கதிர்கள் வெளியே வருகிறபோது, நிறம் முதலியவைகளில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. இதைப் பற்றி மேலும் மேலும் இவர் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். முதலில் காலேஜ் பரிசோதனைச் சாலையில் விசேஷ அநுமதி மறுத்த அதிகாரிகள், இப்பொழுது இவருக்கு உற்சாக மூட்டி வந்தனர்.

ஒளி சம்பந்தமாகத் தாம் செய்து வரும் ஆராய்ச்சிகளைப்பற்றி ராமன் மேனட்டு விஞ்ஞானப் பத்திரிகைகளுக்குப் பல கட்டுரைகள் எழுதியனுப்பினர். அவை, மேற்படி பத்திரிகைகளில் வெளிவந்ததைக் கண்டு இவருடைய ஆசிரியர்கள் கூடக் கொஞ்சம் பொருமைப் பட்டார்கள் என்று சொல்லவேண்டும். மேனடுகளில் இவருடைய புகழ் பரவ ஆரம்பித்ததற்கு இதுதான் ஆரம்பம்.

ராமன், இந்தக் காலத்தில் ஒளி ஆராய்ச்சியோடு நிற்கவில்லை. ஒலியைப் பற்றியும் ஆராய்ச்சி செய்யலானர். சங்கீத வாத்தியங்களில் ஏற்படும் ஒலி பேதங்களின் தன்மையையும் அளவையும் பற்றி இவர் பிற்காலத்தில் விரிவான ஆராய்ச்சிகள் நடத்தியதற்கு, பிரசிடென்சி காலேஜில் இவருடன் படித்து வந்த ஒரு சகோதர மாணக்கருடைய சந்தேகந் தான் தூண்டு கோலாயிருந்தது. அந்தச் சகோதர மாணக்கர், ஒருநாள் காலேஜ் பரிசோதனைச் சாலையில் ஒலியைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தபோது அவருக்குச் சில புதுமைகள் தோன்றின. இதன் காரணம் என்ன என்று, அவர், தமது விஞ்ஞான ஆசிரியரைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஆசிரியருக்கும் ஒன்றும் புரிய வில்லை. சிறிதுநேரம் யோசித்துக்கொண் டிருந்தார். அச்சமயம் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ராமன், இந்த மாறுதலின் காரணத்தை விளக்கிக் கூறினர். இது பற்றி ஒரு கட்டுரை எழுதி, மேனட்டு விஞ்ஞானப் பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பினர். இது முதல், இவருடைய ஆசிரியர்களுக்கு இவரிடத்தில் விசுவாசத்தோடு மதிப்பும் ஏற்பட்டது.

இந்திய அரசாங்கத்துப் பொக்கிஷ இலாக்காவின் உயர்தர உத்தியோகங்களுக்கு அவ்வப்பொழுது போட்டிப் பரீட்சைகள் நடத்தி, அவற்றில் தேறுவோர்க்கு வரிசைக் கிரமமாக உத்தியோகங்கள் அளிப்பது வழக்கம். இந்த வழக்கம் இப்பொழுதும் அநுஷ்டானத்தில் இருக்கிறது. இத்தகைய போட்டிப் பரீட்சையொன்று, ராமன் எம். ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது நடைபெற்றது. இந்தப் பரீட்சைக்குப் படிக்கத் தீர்மானித்தார்

ராமன். இவருடைய பந்துக்களும், இவர் இப்படிப்பட்ட போட்டிப் பரீட்சையில் தேறி உயர்ந்த உத்தியோகத்தில் அமரவேண்டு மென்பதில்தான் ஆவலுடையவர்களாக இருந்தனர்.

எம். ஏ. பரீட்சைக்கும், அரசாங்கப் போட்டிப் பரீட்சைக்கும் ராமன் ஒரே சமயத்தில் படிக்கவேண்டிய தாயிற்று. அதற்காக இவர் சிறிது கூடச் சலிப்புக் கொள்ளவில்லை. இரண்டு பரீட்சைகளுக்கு மிடையே ஆறுமாதகால அவகாசமே இருந்தது. இந்தக் காலத்தில் இவர் எவ்வளவு உழைத்திருக்க வேண்டும்? இரண்டு பரீட்சைகளிலும் முதல்வராகத் தேறினார்.

இதே வருஷத்தில் ராமனுக்கு விவாகமும் நடைபெற்றது. மதுரை ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயருடைய மகள் ஸ்ரீ லோகசுந்தராம்பாள், இவருக்குத் தர்ம பத்தினியாக வாய்த்தார்.

போட்டிப் பரீட்சையில் தேறிய பிறகு, ராமன் 1907-ஆம் வருஷம் கல்கத்தாவில் அசிஸ்டெண்ட் அக்கவுண்டண்ட்-ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அப்பொழுது இவருக்கு வயது 19. மாதச் சம்பளம் முந்நூறு ரூபாய். வயதிலே மிகச் சிறியவரான இவர், பெரிய உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டது பலருக்கும் ஒரு பிரமிப்பையே உண்டுபண்ணியது. அசிஸ்டெண்ட்-அக்கவுண்டண்ட் ஜெனரலாகச் சிறிது காலம் வேலை பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, இவர் கரன்ஸி ஆபீஸராகவும் நியமனம் பெற்றார். சுமார் இரண்டு வருஷ காலம் இந்த வேலையைப் பார்த்தார். இந்தக் காலத்தில்தான் இவருடைய பிற்காலப் பெருமைக்கு விதை ஊன்றப்பட்டது.

டாக்டர் மஹேந்திரலால் சர்க்கார் என்ற ஓர் அறிஞர், கல்கத்தாவில் சாஸ்திர ஆராய்ச்சிச்சாலையொன்றை நிறுவினார். விஞ்ஞான சாஸ்திரத்தை அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கம். இங்கே தனிப்பட்ட நபர்கள், அவரவர்களுக்குரிய தன்மையில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய வசதிகள் அளிக்கப்பட்டிருந்தன. இதற்கு அரசாங்கத்தாருடைய ஆதரவும் நிறைய இருந்தது. மகேந்திரலால் சர்க்கார் இறந்துவிட்ட பிறகு, அவருடைய மகன் அமிருதலால் சர்க்கார் என்பவர், இந்த ஸ்தாபனத்தின் காரியதரிசியாயிருந்தார். இவருடைய காலத்தில் ராமனுக்கும் இந்த ஸ்தாபனத்துக்கும் தொடர்பு ஏற்பட்டது. இந்த ஸ்தாபனத்தில் தினசரி உத்தியோக காலம் தவிர மற்ற நேரங்களில் ராமன் தமது ஆராய்ச்சியை நடத்தி வந்தார். இதற்கான வசதிகளையும் அமிருதலால் சர்க்கார் இவருக்குச் செய்து கொடுத்தார். ராமன், தம்முடைய ஆராய்ச்சிகளையெல்லாம் கட்டுரைகளாக எழுதி மேனாட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்பினார். அவை, மிக மகிழ்ச்சியுடன் வெளியிட்டன. மேனாட்டுப் பத்திரிகைகள், ராமனுடைய ஆராய்ச்சியைப் பாராட்டிய பிறகுதான், இந்தியாவிலுள்ள அறிஞர்கள் இவரைப் பற்றித் தெரிந்து கொள்ள விழைந்தார்கள்.

கல்கத்தாவில், அரசாங்க அலுவலோடு விஞ்ஞான ஆராய்ச்சியையும் செய்துகொண்டிருக்கிற சமயத்தில்தான், ராமனுக்கு ஸர் குருதாஸ் பானர்ஜி, ஸர் அஷுடோஷ் முகர்ஜி, ஸர் ராஷ் விஹாரி கோஷ் முதலிய அறிஞர்களுடைய பழக்கம் உண்டாயிற்று. இவரை எவ்வகையிலும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதில் அவர்கள் மிகவும் சிரத்தையுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள், தமக்குச் செய்த உதவிக்கு ராமன் பலமுறை நன்றி கூறியிருக்கிறார்.

ராமன், கல்கத்தாவிலிருந்து ரங்கூனுக்குக் கரன்ஸி ஆபீஸராக 1909-ஆம் வருஷம் மாற்றப் பட்டார். இதனால் இவருடைய ஆராய்ச்சிகள் எங்கே நின்று விடுமோ என்று, இவருடைய முன்னேற்றத்திலே நல்லெண்ணங் கொண்டிருந்த பலரும் சஞ்சலமடைந்தனர். ஆனால், ராமன் இதைப்பற்றியெல்லாம் கவலையே கொள்ளவில்லை. எங்கே சென்ற போதிலும், தமது ஆராய்ச்சி தம்மை விடாதென்பது இவருக்குத் தெரியும். ரங்கூனில் கரன்ஸி ஆபீசுக்கு மேலேயே இவருடைய ஜாகையும் இருந்தது. தமது இருப்பிடத்திலேயே ஓர் அறையைப்

பரிசோதனைச் சாலையாக இவர் ஒதுக்கிக் கொண்டார். தம் உத்தியோக அலுவல்களைக் கவனித்த பிறகு, பரிசோதனை அறையில்தான் இவரைப் பார்க்கலாம். அந்த அறைக்குள் சென்றுவிட்டால், வெளியுலகச் சிந்தனையே இவருக்கு இராது. ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்கிற சமயத்தில் இவருடைய தர்ம பத்தினியார் கூட அறைக்குள் செல்ல அஞ்சுவார். மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் உள்ளவர்கள்தானே உண்மையைக் காண முடியும்?

இவ்விதம் இவர் ரங்கூனில் வேலை பார்த்துவந்த சமயத்தில், இவருடைய தகப்பனார் சிவலோகப்ராப்தி அடைந்து விட்டார். அதற்காக இவர் ரஜா எடுத்துக்கொண்டு சென்னைக்குச் சென்று, உத்தரக்கிரியைகளை முடித்தார். ரஜா முடிந்ததும், மீண்டும் கல்கத்தாவுக்கே இவர் மாற்றப்பட்டார். சென்னையில், ரஜா நாட்களை, இவர் சும்மா கழிக்கவில்லை. தாம் படித்த பழைய இடமாகிய பிரசிடென்சி காலேஜுக்குச் சென்று, அங்குள்ள விஞ்ஞான பரிசோதனைச் சாலையில் ஆராய்ச்சிகள் நடத்த ஆரம்பித்து விட்டார். ஞானிகளுக்கு உலகமெல்லாம் ஒரு சோதனைச்சாலை யன்றோ!

ரஜா முடிந்து கல்கத்தா சென்ற பிறகு, உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டதோடு பழைய இந்திய ஆராய்ச்சிச்சாலையில் ஆராய்ச்சி செய்வதையும் தொடங்கினர். இப்படி இருக்கிறபோது, முன்னே கூறிய ஸர் அஷுடோஷ் முகர்ஜியின் பெரு முயற்சியால் கல்கத்தா சர்வகலாசாலையைச் சேர்ந்தாற்போல், விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிக் கென்று தனியாக ஒரு காலேஜ் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு 'யுனிவர்சிட்டி காலேஜ் ஆப் சயன்ஸ்' என்று பெயர். இந்தக் காலேஜுக்கு, ஸர் தாரகநாத் பாலிட் என்பவர், நன்கொடையாக ஒரு பெருந்தொகை கொடுத்திருந்தார். இந்தத் தொகையிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஒரு பேராசிரியர் நியமிக்கப்பட வேண்டு மென்றும், அவர் மூலம் விஞ்ஞான ஆராய்ச்சி அபிவிருத்தியடைய வேண்டுமென்றும் மேற்படி பாலிட்டின் நோக்கம். இதற்காகச் சில நிபந்தனைகளையும் எழுதி வைத்திருந்தார்.

பாலிட் பேராசிரியர் பதவிக்கு யாரை நியமிப்பது? இந்தப் பிரச்னை சர்வகலாசாலை அதிகாரிகளிடையே எழுந்தது. ஸர் அஷுடோஷ் முகர்ஜிக்கு, சி. வி. ராமனை நியமிக்க வேண்டுமென்ற விருப்பம். ஆனால் மேனாட்டுக்குச் சென்று படித்து உயர்தரப் பட்டம் பெற்றவர்களைத் தான், மேற்படி பாலிட் பேராசிரியராக நியமிக்கலாம் என்று ஒரு நிபந்தனை இருந்தது. அந்த நிபந்தனையை ராமன் பூர்த்தி செய்யக்கூடியவராக இல்லை. எனவே, அஷுடோஷ் முகர்ஜி முதலியோருடைய விருப்பத்துக்கிணங்க, மேனாட்டுக்குச் செல்ல ராமன் சம்மதித்தார். ஆனால் பின்னல் ஸர் குருதாஸ் பானர்ஜி முதலிய அறிஞர்கள், ராமன் விஷயத்தில், ஐரோப்பியப் பயிற்சி விதியை விலக்கி வைப்பதென்று தீர்மானித்து, அப்படியே பாலிட் பேராசிரியர் பதவியை ராமனுக்கு வழங்கினர்கள். ராமனுடைய மனமும் இப்பொழுது திருப்தியடைந்தது. ஏனென்றால், மேனாடு சென்று பயின்றவர்கள் தான் அறிஞர்கள் என்ற எண்ணத்தை இவர் அடியோடு வெறுத்து வந்தார் அல்லவா? ராமனுக்கென்று, பொதுவான ஒரு நிபந்தனையை ரத்துசெய்து, அவரைப் பேராசிரியராக நியமித்த சர்வகலாசாலை அதிகாரிகள், அவரிடத்தில் எவ்வளவு மதிப்பு வைத்திருக்க வேண்டுமென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

அஷுடோஷ் முகர்ஜியின் விருப்பத்துக்கிணங்க, ராமன், அரசாங்கப் பதவியை உடனே ராஜிநாமாச் செய்துவிட்டு, பாலிட் பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார். தியாகம் என்கிற படியிலே ஏறித்தான் புகழ் என்கிற சிகரத்தை அடையவேண்டியிருக்கிறது. ராமன், ஆயிரக்கணக்கில் வருமானம் வரக்கூடிய உயர்தர உத்தியோகத்தைத் தியாகம் செய்தார். ஆனல் உலக அறிஞர்களிலே ஒருவர் என்ற புகழ் எய்தினர்.

ராமன் இவ்வாறு கல்கத்தா சர்வகலாசாலையில் விஞ்ஞான சாஸ்திரத்

துக்கு பாலிட் பேராசிரியராக நிய மனம் பெற்றது 1917ஆம் வருஷம். அப்பொழுது இவருக்கு வயது 29.

1924ஆம் வருஷம், ராமன் மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் பலருடைய அழைப்புக்கிணங்க இங்கிலாந்து சென்றார். அங்கே ராயல் சொஸைட்டியிலும், இன்னும் அநேகம் அறிஞர் கூட்டங்களிலும் பல அரிய உபந்நியாசங்கள் செய்தார். இவருடைய இங்கிலாந்து வரவை அறிந்த அமெரிக்க அறிஞர்கள், இவரை அமெரிக்காவுக்கு வருமாறு அழைத்து உபசரித்தார்கள். பிரபல சர்வகலாசாலைகளில் இவருடைய உபந்நியாசங்கள் நடைபெற்றன. அங்கிருந்து ஐரோப்பாக்கண்டத்திலுள்ள பிரான்ஸ், ஜெர்மனி, ருஷ்யா முதலிய நாடுகளுக்கும் சென்று பேரும் புகழுமாக இந்தியா திரும்பி வந்தார். திரும்பி வந்த அடுத்த வருஷம், விஞ்ஞானத்துறையில் அதுவரையில்-அதாவது 1926-ஆம் வருஷம் வரையில்-எவ்வளவு தூரம் ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட ஜெர்மனியில் ஒரு முயற்சி நடைபெற்றது. அந்தத் தொகுதியில், ஒலி சம்பந்தமாக நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகளைத் தொகுத்தெழுதித் தருமாறு ராமன் கேட்டுக் கொள்ளப்பட்டார். ராமனும் அப்படியே எழுதியனுப்பினார். ஓர் இந்தியருக்கு இந்தக் கௌரவம் கிடைத்தது இதுதான் முதல் தடவை.

இதன் பிறகுதான், 1928-ஆம் வருஷம் **ராமன் சித்தி (Raman Effect)** என்ற பெரிய விஞ்ஞான உண்மையை இவர் கண்டுபிடித்தது. இந்த முக்கியமான ஆராய்ச்சிதான் இவருக்கு 1930-ஆம் வருஷம் நோபெல் பரிசை வாங்கிக் கொடுத்தது. இந்தப் பரிசை நேரில் பெறும்பொருட்டு, ராமன், தம் தர்மபத்தினி சகிதம் ஸ்வீடன் தேசத்துத் தலைநகரமாகிய ஸ்டாக்ஹோமுக்குச் சென்றார். அங்கே இவர், மன்னர் தம்பதிகள் முதல் பிரமுகர்கள் அனைவராலும் வரவேற்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டார். எந்தப் பெரியாருடைய பெயரினால் இந்தப் பரிசு வழங்கப்படுகிறதோ, அந்த நோபெல் வமிசத்தைச் சேர்ந்த முக்கியஸ்தரே, இவரைத் தம் விருந்தினராக ஏற்று உபசரித்தார்; பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தார். அந்தச் சந்தர்ப்பங்களில் ராமன் நடந்துகொண்ட மாதிரியும், பேசிய பேச்சுக்களும், இந்தியாவின் பெருமையை ஒரு படி உயர்த்தியே காட்டின.

ராமன், நோபெல் பரிசுபெற்றுக் கொண்டு இந்தியா திரும்பியதும், கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களினால் வரவேற்று உபசரிக்கப்பட்டார். இவர் நோபெல் வெகுமதி பெறுவதற்கு முன்னர், இவருடைய ஆராய்ச்சித் திறனை வியந்து பாராட்டி, இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளும், மேனாடுகளிலுள்ள சர்வ கலாசாலைகளும் இவருக்குப் பல பட்டங்கள் வழங்கின. அறிவுத் துறையிலே ஈடுபட்டுழைக்கிற சங்கங்கள், இவரைத் தங்கள் சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்த்துக் கொண்டன. இங்கே ஒரு விஷயம் குறிப்பிட வேண்டியிருக்கிறது. பட்டங்களும் பதவிகளும் இவரை நாடி ஓடிவந்தன. ஓடி வந்து இவரை அலங்கரித்துத் தாங்களும் பெருமையடைந்தன. இவர், அவற்றை நாடிச் செல்லவேயில்லை. இதுவன்றோ உயர்வின் லட்சணம்?

நோபெல் பரிசு பெற்றுத் திரும்பி வந்த பிறகு, ராமனுடைய கல்கத்தா வாழ்க்கைக் கப்பலானது, ஒரு சிலரால் எழுப்பப்பட்ட பொறாமைப் புயல் காற்றினால் கொஞ்சம் அசைந்து கொடுத்தது என்று சொல்லவேண்டும். இதைப்பற்றி விரித்துக்கூற நாம் விரும்பவில்லை. 1933-ஆம் வருஷம் கல்கத்தா சர்வகலாசாலையில் வகித்து வந்த பாலிட் பேராசிரியர் பதவியினின்று விலகிக்கொண்டார் என்று சுருக்கமாகக் கூறிவிடுவோம். இந்தச் சமயத்தில், சாஸ்திர அபிவிருத்திக்காகப் பெங்களூரில் ஏற்பட்டிருக்கும் 'சயன்ஸ் இன்ஸ்டிட்யூட்' **(Science Institute)** டுக்கு, தலைவர் பதவி இவருக்கு வழங்கப்பட்டது. இது வரையில் ஆங்கிலேயர்களே இந்தப் பதவியில் அமர்த்தப்பட்டு வந்தார்கள். ராமன்தான், முதன்முதலாக

நியமிக்கப்பட்ட இந்திய அத்தியட்சகர். இவருடைய நிருவாகத்தின்கீழ், சுமார் நான்கு வருஷ காலம், இந்த ஸ்தாபனம் பல முன்னேற்றங்களை அடைந்தது. இவருக்குக் கீழே பல இளைஞர்கள் அருமையான ஆராய்ச்சிகள் செய்து வந்தார்கள். ஆனால் இந்த ஸ்தாபனத்திலும் இவர் நான்கு வருஷங்களுக்கு மேல் வேலை செய்ய முடியவில்லை. 1937-ஆம் வருஷம், இந்த ஸ்தாபனத்தின் தலைவர் பதவியை இவர் ராஜினாமாச் செய்யும்படியாயிற்று. ராமன், எப்பொழுதும் ஒழுங்கிலே கண்டிப்பானவர். கடமையைப் பிறரிடமிருந்து எதிர்பார்ப்பதில் தயா- தாட்சண்யம் காட்டமாட்டார். இவர் அரசாங்க அலுவலிலே இருந்தபோதும், பின்னர் கல்கத்தா சர்வ கலாசாலையில் வேலை பார்த்த போதும், பெங்களூர் டாட்டா சயன்ஸ் இன்ஸ்டிட்யூட்டிலும், ஒழுங்கு முறையிலே இவர் அதிக கவனஞ் செலுத்தினார். இது இவரிடத்தில் வேலை பார்த்த சிலருக்குப் பிடிக்காமலிருந்தது விநோதமில்லையல்லவா?

ராமன், பெங்களூர் சயன்ஸ் இன்ஸ்டிட்யூட்டின் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்ட போதிலும் அதிலேயே விஞ்ஞான போதகாசிரியராக இருந்து வேலை பார்த்து வருகிறார். இது தவிர, தனிப்பட்ட ஹோதாவிலும் ஆராய்ச்சி செய்துகொண்டு வருகிறார்.

ராமன், நல்ல திடகாத்திரசாலி. பாலியத்தில் சிறிது உடல்நலங் குன்றியிருந்தாலும், வயது ஆக ஆக, உடல் நலம் பண்பட்டே வந்தது. வசீகரமான தோற்றமுடையவர். இவருடைய பார்வையில் ஒரு தனிப் பிரகாசம் உண்டு. இருதயசுத்த முடையவர்களிடத்தில் இந்தப் பிரகாசத்தைப் பார்க்கலாம். எல்லாரிடத்திலும் இனிமையாகப் பேசுவார். ஆனால் அதில் ஒரு நிர்த்தாரண சக்தி இருக்கும். தமக்கு அவ்வப்பொழுது பலரும் செய்து வந்த நன்றியைச் சிறிதும் மறக்கமாட்டார். அவர்களை அடிக்கடி பாராட்டிப் பேசுவார். தாம் ஏறி வந்த ஏணியை உதைத்துத் தள்ளுகிற சுபாவம் இவரிடத்தில் கிடையாது. தமக்குக் கீழிருந்து வேலை செய்வோருக்கு ஊக்கமளிப்பார். தாம், அவர்களைவிடத் திறமைசாலி என்ற எண்ணமில்லாமல் அவர்களிடத்தில் பேசுவார்.

ராமனுக்குச் சங்கீதக் கலையில் நிரம்ப ஆர்வமுண்டு. இது பரம்பரை வாசனை. இவருடைய தகப்பனார் சந்திரசேகர ஐயர், ஓர் இசைப் புலவர். இதனால்தான், ராமனுடைய ஆரம்ப ஆராய்ச்சிகள் சங்கீதக் கருவிகளினின்று எழும் நாதத்தைப் பற்றியவையாக இருந்தன போலும்.

ராமன், ஒரு சிறந்த தேசியவாதி. வேறு எவ்விதமாக இருக்கமுடியும்? உண்மையான புலவர்கள், தத்துவ ஞானிகள் முதலியோர் சிறந்த தேசபக்தர்களாகத்தான் இருக்க முடியும். ராமனுக்கு, நம்முடைய பழைய இலக்கியங்களில் ஆர்வமுண்டு; புலமையுமுண்டு. அதே மாதிரி, நமது புராதனப் பெருமையை நிலை நிறுத்த யாரார் பாடுபடுகிறார்களோ அவர்களிடத்திலே பக்தி சிரத்தையுண்டு. மகாத்மா காந்தி அப்படிப்பட்ட மகான்களில் ஒருவர் அல்லவா? உலக மகா புருஷர்களில் ஒருவர் அவர் என்பது ராமனின் நம்பிக்கை. ராமன் நல்ல பேச்சாளர். எப்படிப்பட்ட சிக்கலான விஷயங்களையும் எளிதிலே புரிந்துகொள்ளும்படியாகப் பேசும் ஆற்றலுடையவர்.

ராமனின் தர்மபத்தினியார் ஸ்ரீலோக சுந்தராம்பாள், நன்றாகப் படித்தவர். இங்கிலீஷ் நன்றாகத் தெரியும். தம் கணவருடைய ஆராய்ச்சிப் போக்குக்கு எவ்வித இடைஞ்சல்களும் ஏற்படாமலிருக்க, குடும்ப பிரமணத்தையும் தாமே ஏற்று நடத்தி வருகிறார். தவிர, மிகவும் அடக்கமான சுபாவமுடையவர். ஆடம்பரத்தை வெறுக்கிறவர்.

இந்தத் தம்பதிகள் நீடூழி வாழ்க! இவர்கள் மூலமாக இந்தியாவின் புகழ் — தமிழ் நாட்டின் பெயர் — ஓங்குக!

வேலையணைந்தே சீறியெழுந்து,
வெற்றி முழக்கிடுவேன்.
சோலை நுழைந்து, சோதி திளைந்து,
சொர்ண நகை புரிவேன்.

குலவையிடு பழங்கொள்கையனைத்தும்
கொன்று மிதித்திடுவேன்.
நிலவி வருமுயிர் நலிவை யழித்தே
‘நித்தியம்’ ஆக்கிடுவேன்.

நொந்திடு முள்ள நோவையழித்தே
நொய்மை தவிர்த்திடுவேன்.
பொந்திலிருந்தே பொய்மை விரிக்கும்
போலி குலைத்திடுவேன்.

ஏங்கி வளைந்து மூங்கிலணைந்தே
இன்னிசை ஏற்றிடுவேன்.
தூங்கி வழிந்து தொழிலை மறந்தார்
தோணி கவிழ்த்திடுவேன்.

உற்றன குறையைத் தெற்றென அன்றே
ஊதி முழக்கிடுவோம்.
கற்றனர் என்றவர் கசடுமொழிந்தால்
காறி யுமிழ்ந்திடுவோம்.

அலைதரு முள்ளத் தாட்டமொழித்தே
ஆண்மை குவித்திடுவோம்.
தொலைதரு பாவச் சிதையை எரித்தே
தோளிணை கொட்டிடு வோம்.

— துறைவன்

தளபதி டிகால்

வெண்டல் வில்கீ

நான் தளபதி டிகாலைப் பார்க்கச் சென்ற சம்பவத்தை, ஒருகாலும் மறக்கமாட்டேன். வர்ண யூனிபாரம் உடுப்பணிந்த காவலர்களும் பாண்டு வாத்தியக்காரர்களும், பீரட் விமான நிலையத்துக்கு வந்து, என்னைச் சந்தித்து வரவேற்றார்கள். பாண்டு வாத்தியத்தை முழங்கிக்கொண்டே, பல மைல் தூரம் என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கேதான் தளபதி வசிக்கும் வீடு இருக்கிறது. வெண்மையான பெருங் கட்டிடம். சுற்றிலும் விஸ்தாரமான பூந் தோட்டம். அந்தத் தோட்டத்திலே எந்தப் பக்கம் திரும்பினாலும், காவல் வீரர்கள் நின்றுகொண்டு ராணுவ சலாம் போட்டார்கள். தளபதியின் ஏகாந்த அறையில், நாங்கள் பலமணி நேரம் சம்பாஷித்தோம். அங்கே ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு சுவரிலும், நெப்போலியனின் சிலைகளும் சித்திரங்களும் அலங்கரித்துக் கொண்டிருந்தன. நட்சத்திர ஒளி வீசும் அழகிய பசும்புல் வெளியில் அமர்ந்த வண்ணம், வைபவமான விருந்துச் சாப்பாட்டுக்கு நடுவே, இரவு வெகு நேரம் வரையில் நாங்கள் பேசிக்கொண் டிருந்தோம்.

ஸிரியா, லெபனன் இரண்டிலும் யார் ஆதிக்கம் செலுத்துவது? தாமா, பிரிட்டிஷாரா என்பதுபற்றித் தமக்கும் பிரிட்டிஷாருக்கும் நடந்துவரும் போராட்டத்தைப் பற்றி, தளபதி விளக்கிச் சொன்னார். அப்போது இடை யிடையே, அடிக் கொரு தரம், அபிநயங்களோடு, "நான் என் கொள்கைகளைத் தியாகம் செய்யவோ விட்டுக்கொடுக்கவோ முடியாது" என்று அவர் கூவினார். "ஜோன் அவ் ஆர்க் மாதிரி" என்று அதற்கு முத்தாய்ப்பு வைத்தார் தளபதியின் மெய்காப்பாளர். "போராடும் பிரஞ்சுக்காரர் இயக்கம் இருக்கிறதே அது" என்று, நான் ஏதோ சொல்லத் தொடங்கினேன். "போராடும் பிரஞ்சுக்காரர் நடத்துவது, ஏதோ ஓர் இயக்கமல்ல. போராடும் பிரஞ்சுக்காரர்தான் பிரான்ஸ் நாடு. அகில பிரான்ஸுக்கும் அதன் சகல சொத்துக்களுக்கும், நாங்களே அனந்தர வார்சுகளாவோம்" என்று, அவர் என்னைக் கூர்மையாய்த் திருத்தினார். ஆனால், ஸிரியா சர்வதேசச் சங்க அதிகாரத்துக்கு உட்பட்ட மாண்டேட் நாடாயிற்றே என்று, நான் அவருக்கு ஞாபகப்படுத்தினேன். "ஆம்; அது எனக்குத் தெரியும். ஸிரியாவைத் தர்ம சொத்தாகவே என் கையில் வைத்திருக்கிறேன். சர்வ தேசச் சங்கம் அளித்துள்ள மாண்டேட் அதிகாரத்தை, நான் முடித்துவிட மாட்டேன்; யாரும் முடித்துவிட இடங் கொடுக்கவும் மாட்டேன். பிரான்ஸில் மீண்டும் ஒரு சர்க்கார் ஏற்பட்ட பிறகுதான், அந்த மாண்டேட் அதிகாரத்தை முடித்துவிட முடியும். இந்த உலகத்தின் எந்த இடத்திலும், பிரஞ்சுக்காரரின் எந்த ஒரே ஓர் உரிமையையும்கூட, நான் விட்டுக்கொடுக்க முடியாது. ஆனால், பிரான்ஸில் ஆதிக்கம் செலுத்துவதிலிருந்து ஜெர்மானியரையும் அவர்களின் கூட்டாளிகளையும் விரட்டிவிடவேண்டும். அதற்கு வசதியாக, பிரஞ்சு உரிமைகளையும் பிரஞ்சு நிலங்களையும் தற்காலிகமாக மட்டில் யாரும் உபயோ

காலம் சென்ற வெண்டல் வில்கி, தமது பிரசித்தமான 'ஒரே உலகம்' என்ற நூலில், தளபதி டிகாலைப்பற்றித் தந்துள்ள சித்திரம் இது. திருச்சி புத்தக நிலையத்தாருக்காக, கி.ஜ.ர. தமிழில் மொழிபெயர்த்து **வரும் 'ஒரே உலகம்' புத்தகத்திலிருந்து இதை இங்கே எடுத்துத் தந்திருக்கிறோம்.**

கித்துக் கொள்ளலாம். அவைகளை அப்படி உபயோகிப்பதற்கு என்ன வழிகள், என்ன சாதனங்கள் என் பதை ஆலோசிப்பதற்கு வேண்டுமா னால், வின்ஸ்டன் சர்ச்சில், ரூஸ்வெல்ட் இருவரோடும் உட்கார்ந்து பேச, நான் முற்றிலும் சம்மதமா யிருக்கிறேன்'' என்று அவர் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது: "மிஸ் டர் வில்கி! நானும் என் தோழர்களும் பிரான்ஸின் பிரதிநிதிகள் என்ப தையே, சில ஜனங்கள் மறந்து விடு கிறார்களே! பிரான்ஸின் கீர்த்திமிகுந்த சரித்திரத்தை, அவர்கள் நினைவில் வைக்கவில்லை என்றே தோன்றுகிறது. என்னவோ இன்றைக்கு நேர்ந்திருக் கும் கிரகணத்தை மனதில் வைத்துக் கொண்டே, அவர்கள் பேசுகிறார்கள்.''

பின்னால், லெபனானின் உயர்தர அதிகாரி ஒருவரோடு நான் பேசிக் கொண்டிருந்தேன். ஸிரியா, மத்தியக் கிழக்கு இரண்டிலும் ஆதிக்கத்தைக் கைக்கொள்ள, பிரிட்டிஷ்காரருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் இடையே அப் போது நடந்துகொண்டிருந்த போராட் டத்தைப் பற்றிச் சம்பாஷித்தேன். "எந்தப் பக்கம் உங்கள் அனுதாபம் இருக்கிறது?'' என்று, அவரை நான் கேட்டேன். "இரண்டு பேருமே நாச மாய்ப்போகவேண்டும்'' என்றுதான் அவர் பதிலளித்தார். ஆதிக்கம் செலுத்தும் வல்லரசு எதுவா யிருந் தாலும் சரிதான்; மாண்டேட் ஆட்சி யிலோ, காலனிமுறையிலோ, மத்தியக் கிழக்கிலுள்ள அறிவாளிகளுக் கெல் லாம் துளியும் நம்பிக்கையில்லை.

✲

பாரதியும் நெப்போலியனும்

நெப்போலியன் சக்ரவர்த்தி, ஆப்பிரிக்காவில் போய் இறங்கினான். இறங்கும் சமயத்தில் கால் வழுக்கி விழுந்துவிட்டான். தவறி விழுந்தால், அதுவும் ஓர் அந்தர் என்று நிலைநாட்ட வேண்டாமா? எதிரே நிற்பவர் சிரிக்காதிருப்பதற்காக, ஒரு யுக்தி செய்தான். "ஏ அருமை ஆப்பிரிக் காவே! இந்த விதமாக உன்னை நான் கைப்பற்றுகிறேன்'' என்று சொல்லி, மண்ணைக் குனிந்து முத்த மிட்டுக்கொண்டான்! பழங் கதைகளைத் தொகுத்துள்ள ப்ரூவர் என்பவரின் அகராதியில் காணப்படு கிறது இந்தக் கதை.

இதே கதையைக் கொஞ்சம் மாற்றி, பாரதியார் மீதும் சிலர் இப் போது ஆரோபித்திருக்கிறார்கள். 'பிறநாட்டு நல்லறிஞர் சரித்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்றவர் இல்லையா பாரதியார்? பிறநாட்டுக் கதைகளைச் சுவீகாரம் செய்வோர், பாரதியார் மீதும் சில வற்றை ஆரோபணம் செய்வதே சாலப் பொருத்தமாகும் என்று நினைக் கிறார்கள் போலிருக்கிறது! அட கடவுளே!

பூனைக்கு வீடு தேவை

இந்த யுத்தத்தினால், உலகத்திலுள்ள சகல நகரங்களிலுமே ஜன நெருக்கம் ஏற்பட்டு விட்டது. ஆகையால், குடியிருப்பு வசதி, எங்குமே மகா கஷ்டமாயிருக்கிறது. அதை விளக்கும் பல கதைகளில் ஒன்று இது:

சீமைப் பத்திரிகையான 'நியூ ஸ்டேட்ஸ்மென்' என்பதில், காணும் ஒரு விளம்பரம் வருமாறு: "இரு முறை குண்டுபட்ட ஓரு பூனைக்கு ஜாகை தேவை. முற்போக்கான பூனை. அருமையான குணங்கள் உள் ளது. சில அறைகளோ, ஒரு சிறு வீடு முழுதுமோ பூனைக்குத் தேவை. தானும் தன் எஜமான்கள் இரண்டு பேருமாய், அது வசிக்க வசதியாய் இருக்க வேண்டும். வாடகை விபரம் தெரிவிக்கவும். தபால் பெட்டி நிர். 4698.''

சாமி தரிசனம்

பெ. தூரன்

இடுப்பிலே கௌபீனம், கையிலே ஒரு நீண்ட கொக்கித்தடி, தலையைச் சுற்றி ஓர் அழுக்கடைந்த பழங் கந்தை — இப்படி அதிகாலையிலே பண்ணைக்காரர் முத்துசாமிக் கவுண்டருடைய மாட்டுப் பட்டியிலே வீரன் காட்சி அளிப்பான்.

அவனுக்கு வயது எட்டுக்கூடப் பூர்த்தியாக வில்லை. அதற்குள்ளே அவன் தனது வயிற்றுப் பிழைப்புக்காக, வேலை செய்யவேண்டியதாகி விட்டது. அவன் தாய் தகப்பன் எல்லோருமே கூலிவேலை செய்கிறார்கள். இருந்தாலும் குடும்பத்துக்கு அவர்களுடைய சம்பாதனை கட்டிவர வில்லை. அதனால், வீரன் எருமை ஒன்றை மேய்ப்பதற்கு ஆளாகச் சேர்ந்தான்.

காலையில் பழையது குடித்து விட்டுப் போனால், இருட்டான பிறகு தான் அவன் வீடு திரும்புவான். பகலெல்லாம் எருமை மேய்ப்பான். மத்தியானம் பண்ணைக்காரர் வீட்டிலேயே சோளக் கூழ் ஊற்றுவார்கள்.

வீரன் எருமை மேய்ப்பதற்காக மாதம் இரண்டு வள்ளம் ராகி கூலி கிடைத்தது; ஒரு வேளை உணவும் கிடைத்தது. அந்த ஏழைக் குடும்பத்துக்கு அதுவே பெரிய வருவாய்.

எருமை மேய்ப்பதென்றால் சிறுவனுக்கு ஒரு விளையாட்டு. காட்டுப் பாளையத்துக்குப் பக்கத்திலேயே, சிறிய ஓடை ஒன்று செல்கிறது. அதில் வருஷம் 360 நாளும் தண்ணீர் குறுகுறு வென்று ஓடிக்கொண்டிருக்கும். அதனால் அதன் இரு மருங்கிலும் பசேலென்று பசும்புல் அடர்ந்து வளரும். அங்கே எருமையை ஓட்டிக் கொண்டுபோய் மேய விட்டு விட்டு, வீரன் ஒரு மரத்தடியி லிருப்பான். இவனைப்போலவே இன்னும் சில பையன்களும் அங்கே கூடுவார்கள். பனங்கொட்டை ஆட்டம், குண்டுப் பம்பரம் முதலிய விளையாட்டுக்களிலே, அவர்களின் பொழுது போகும்.

வீரனுக்கு அவன் தகப்பன் ஒரு தப்பட்டை கட்டிக்கொடுத்திருந்தான். அவனுக்கு இப்போதே எல்லா விதமான கொட்டு முழக்கும் தெரியும். பெரியவனாகிறபோது, அப்பனைவிட இவன் தப்பட்டை அடிப்பதில் கெட்டிக்காரனாவான் என்று சேரியில் பெருமையாய்ப் பேசிக்கொள்வார்கள்.

மேலே சொன்ன விளையாட்டுக்களில் சலிப்பு எற்பட்ட சமயத்தில், வீரன் தனது தப்பட்டையை எடுத்து முழக்குவான். மற்றச் சிறுவர்கள் ஒரு கம்பம் நட்டு அதைச் சுற்றி ஆடுவார்கள். இப்படிப் போது இன்பமாகவே கழியும்.

வீரன் வேலைக்குச் சேர்ந்த நாலாவது மாதத்தில் முத்துசாமிக் கவுண்டர் ஓர் இளஞ் செம்மறிக் கடாவை வாங்கினார், அடுத்த ஆடியிலே காட்டுக் கறுப்பண்ண சுவாமிக்குப் பலியிடுவதற்காக.

வீரன்தான் அதையும் மேய்த்து வந்தான். நாளாக நாளாக அவனுக்கு அந்தக் குட்டியின்மேல் அளவு கடந்த பிரியம் உண்டாகிவிட்டது. விளையாட்டையெல்லாம் விட்டுவிட்டு, அவன் அதற்குப் புல் தேடிக் கொடுப்பதிலேயே, இப்போது காலத்தைப் போக்கலானான். அந்த வாயில்லாப் பிராணியும், வீரனுடைய அன்பை உணர்ந்துகொண்டதுபோல் தோன்றியது. அது அவனுடனேயே எந்நேரமும் சுற்றிக்கொண்டிருக்கும்.

ஆறு மாதங்களில் அது நன்றாய்க் கொழுத்துப் பருத்துவிட்டது. இரண்டு கொம்புகள் திருகிக்கொண்டு, பயங்

கடவுள் வாய் திறந்து பேசவில்லை. அதற்காக, அந்தச் சிறுவன் கடவுளையே எதிர்க்கத் துணிகிறான். கடவுளும், அவன் செய்த அவமானத்தைப் பார்த்துக்கொண்டே மௌனமாயிருந்தார். அப்படி அவனுக்கு என்ன துயரம்? குழந்தை உள்ளம் என்பது சரியாக அல்லவா இருக்கிறது!

கர்மாக அதன் தலையிலிருந்து வெளிக் கிளம்பின. மேலெல்லாம் அடர்ந்து சுருண்ட செம்பட்டை மயிர்.

வீரன் அதற்குத் 'திருகு கொம்புச் செம்பட்டை' என்று பெயர் கொடுத்தான். 'ஏ செம்பட்டை' என்று அவன் கூவினல், அது குதித்தோடிக் கொண்டு அவனிடம் வரும். யாராவது விளையாட்டாக அவனை அடிக்க வந்தாலும், இந்தக் கடா அவரை முட்டப்போய்விடும்.

இப்படியாக, வீரனும் திருகு கொம்புச் செம்பட்டையும் நெருங்கிய தோழர்களாக வளர்ந்துவந்தார்கள். வீரனின் பேச்சு அதற்குத் தெரியும்; அதன் உள்ளத்தை, அதன் பார்வையிலிருந்தும் கத்தலிலிருந்தும் அவனும் தெரிந்துகொள்ளுவான். அது தலையை நிமிர்ந்து ஏறிட்டுப் பார்த்தால், அதன் பொருளை உடனே வீரன் கண்டு கொள்ளுவான். வார்த்தைகள் அவ்வளவு அழகாக உள்ளுணர்ச்சிகளை அவனுக்கு வெளிப்படுத்த முடியாது.

திருகு கொம்பன் வயிறு நிறையப் புல் மேயவில்லை என்றல், அன்று வீரனுக்குக் கஞ்சி குடிக்கவே மனமிருக்காது. தன்னை வீரன் மேய்க்க வில்லையென்றல், அந்தக் கடாவும் வாயில் புல்லைத் தொடாது.

ஒரு நாள் வீரன் காலையில் கொஞ்சம் அதிக நேரம் தூங்கிவிட்டான். அதனல் வழக்கமாக எருமையை அவிழ்த்துவிடும் நேரத்துக்கு வரமுடியவில்லை. பண்ணைக்காரருக்குக் கோபம் வந்து இரண்டடி போட்டுவிட்டார். வீரன் இரண்டு நாள் வேலைக்கு வர முடியாதென்று பிணங்கிக் கொண்டான்.

திருகு கொம்பன் அந்த இரண்டு நாளும் புல்லை வாயில் வைக்கவே இல்லை; தண்ணீரும் குடிக்கவில்லை. அப்படியே படுத்திருந்தது. சாமிக்கு விட்ட கடா இப்படிக் கிடக்கிறதே என்று, முத்துசாமிக் கவுண்டர் ஆள் விட்டு வீரனைக் கூட்டிவந்து அவனிடம் நாலு பிரிய வார்த்தைகளைச் சொல்லி, மறுபடியும் வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். கூலியும் இரண்டு படி அதிகப்பட்டது.

வீரன் வேலைக்கு வராமலிருந்த போதிலும், அவன் மனதெல்லாம் திருகு கொம்பன்மேலேயே இருந்தது. அதனல், பண்ணைக்காரர் கூப்பிட்டு வார்த்தை சொல்லியதும், சந்தோஷமாக வேலைக்கு வந்துவிட்டான். பழையபடி அவன் தனது அருமைக் கடாவுடன் இன்பமாக நாளைக் கழித்தான்.

ஆடி மாதம் வந்தது.

திருகு கொம்புச் செம்பட்டையைக் காட்டுக் கறுப்பண்ணனுக்குப் பலி கொடுத்து விட்டார்கள். அது இறக்கும்போது, வீறிட்டு அலறியதை, வீரன் ஓர் ஓரத்தில் நின்று கேட்டு விம்மி விம்மி அழலானன்.

"டே, சாமிக்குக் கடா வெட்டறப்போ அளுவப்படாது" என்று அவன் தகப்பன் சமாதானம் சொன்னன்.

ஆனலும், வீரன் அழுகையை நிறுத்தவில்லை. "செம்பட்டையை உயிரோடு சாமிக்கு விட்டிருந்தா, அவர் ஏறிக்கிட்டுச் சவாரி பண்ணலாமே; செத்த கடாவை அவர் என்ன செய்வாரு?" என்று சொல்லித் தேம்பினன்.

"சும்மா இங்கே விட்டா, நரி கிரி கொண்டு போயிடாதா?" என்றன் தகப்பன்.

"சாமிக்கு அதைத் தடுக்க முடியாதா? அதென்ன சாமி, அப்படிச் செயல் இல்லாத சாமி?"

"டே அப்படிச் சொல்லாதே. பண்ணைக்காரர் காதிலே கேட்டா அடிப்பாரு."

"அடிச்சா அடிக்கட்டுமே - திருகு கொம்பனை வெட்டி விட்டாங்களே. ஐயோ அது எப்படித் துடிச்சுதோ?"

"துடிச்சா என்ன? அந்தக் கடா, சாமிக்கு வெட்டினதுனலே மோச்சத்துக்குப் போகும். அதுக்காக நீ அளுவப் படாது."

அவனுக்கு என்ன சமாதானம் சொன்னலும், செம்மறிக் கடா இறக்கும்போது போட்ட பரிதாபக் குரலை வீரனல் மறக்கவே முடியவில்லை.

அன்று மத்தியானம் வீரனுக்கும் அவன் வீட்டாருக்கும் பண்ணைக் காரரின் வீட்டிலிருந்து கறிக் குழம் புடன் சோறு கிடைத்தது. ஆனால், வீரன் அதில் ஒரு பருக்கை கூடத் தொட மறுத்துவிட்டான். இரவிலும் பசியில்லை என்று படுத்துக் கொண் டான்.

அவனுக்குத் தூக்கம் வரவே இல்லை. திருகு கொம்பனின் கடைசிக் குரலே அவன் காதில் சதா ஒலித்துக் கொண் டிருந்தது.

"திருகுகொம்பன் மோச்சத்துக் குப் போயிருக்குமா? அதை அங்கே யாரு மேய்ப்பா? அங்கே புல் நிறைய இருக்குமா?" என்று இப்படித் தன்னைத் தானே கேட்டுக் கொண்டு படுத்திருந்தான். அவனுக்கு ஒரு பதி லும் கிடைக்கவில்லை.

இரவு பன்னிரண்டு மணி ஆகிவிட் டது. இன்னும் அவன் கேள்விகளுக்கு விடையைக் காணோம். அந்தக் கறுப் பண்ணசாமியையே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று கடைசியாக அவன் முடிவு செய்து கொண்டு எழுந்து கோயிலுக்குப்புறப்பட்டான்.

கோயில் ஒரு புன்செய் நிலத்திலே ஆலமரத்தடியில் கட்டப்பட்டிருக் கிறது. சிறிய கோயில். கதவில்லாத ஒரு காரைச் சுவர் மண்டபம். மூன்று பக்கம் சுவரும் ஒரு பக்கம் திறந்து மிருக்கும். அவ்வளவுதான். வருஷத் துக்கு ஒருமுறை ஆடி மாதத்திலே சுற்றுப் பக்கத்து நிலச் சொந்தக்காரர் கள் பொங்கலிட்டு ஆடு பலி கொடுப் பார்கள். மற்ற நாட்களில் கறுப் பண்ணசாமிக்குப் பூஜைகூடக் கிடை யாது. இந்தச் சாமி தங்களுடைய நிலத்தையும் ஆடு மாடுகளையும் காவல் புரிவதாக, எல்லோரும் நம்பு கிறார்கள்.

வீரன் கோயிலுக்கு வெளியே நின்று சாமியை எட்டிப் பார்த்தான். உள்ளே போக அவன் கால் கூசிற்று. தான் உயிருக்குயிராக நேசித்த கடா வைப் பற்றிச் சாமியிடம் கேட்க எவ் வளவு ஆவலிருந்தாலும், ஒரு சக்கி லிப் பையன் கோயிலுக்குள் நுழைய முடியுமா?

வீரனின் நெஞ்சு பட பட என்று அடித்துக் கொண்டது. சுற்று முற்றும் பார்த்தான். எங்கும் ஒரே இருட்டு. நிலத்தில் தோய்ந்து கிடந்த ரத்தத்தில் மொய்த்துக் கொண்டிருந்த எறும்பு கள் அவன் காலைக் கடித்தன.

அவன் கறுப்பண்ண சாமியை ஆசையோடு கேட்டான்: "சாமி, திருகுகொம்புச் செம்பட்டை, மோச் சத்துக்கா போயிடிச்சு? அங்கே அதை நல்லா மேய்ப்பாங்களா?"

இதே கேள்வியை அவன் பல தடவை திருப்பித் திருப்பிக் கேட் டான். ஒரு பதிலும் கிடைக்கவில்லை. நிலத்தில் விழுந்து கும்பிட்டுக் கொண்டே, கெஞ்சிக் கேட்டான். பதில் வரவில்லை. அழுது விம்மிக் கொண்டு கேட்டான். பதில் வரவே யில்லை.

"சாமி, நீ சொல்லா விட்டால் இந்த இடத்தை விட்டுப் போகவே மாட் டேன். இல்லாதபோனால், என்னையும் அது இருக்கும் இடத்துக்குக் கூட்டிக் கிட்டுப் போ. நான் அதை மேய்க் கிறேன்" என்று, கடைசியாகச் சாமிக்கு முன்னால் சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டுப் படுத்து விட்டான். பதில் வரவேயில்லை. எறும்புகள் தான் மேலெல்லாம் கடிக்க ஆரம்பித் தன.

கிழக்கு வெளுத்துப் போதும் விடிந் தது. இன்னும் பதில் வரவில்லை. வீரன் மனமுடைந்துவிட்டான். கறுப் பண்ணசாமி மேல் அவனுக்கு ஒரே வெறுப்புண்டாயிற்று. "சாமியைப் பாரு, சாமியை. சாமியா யிருந்தால், பேசுமோ இல்லையோ? கல்லை நட்டு வெச்சுக்கிட்டு, செல்லமா வளர்த்த கடாவையெல்லாம் வெட்டறாங்களே" என்று கத்திக் கொண்டே, கோயிலுக் குள் நுழைந்தான். கறுப்பண்ணசாமி யைப் பிடுங்கி வெளியில் கொண்டு வந்து வீசி யெறிந்தான்.

அந்தச் சமயம் முத்துசாமிக் கவுண் டர் தம் நிலங்களைப் பார்வையிட்டுக் கொண்டு அங்கே வந்தார். கோயிலில் உண்டான சத்தங்கேட்டு, "என்னடா, வீரா; அங்கே இந்நேரத்திலே என்ன பண்ணறே?" என்று கேட்டார்.

"இந்தக்கல்லை பிடுங்கி எறிஞ்சிட்டேனுங்க. இது சாமி இல்லை-வெறுங் கல்லு" என்று நிஷ்களங்கமாகப் பதில் சொன்னன்.

பண்ணைக்காரருக்குத் தலைகால் தெரியாமல் கோபம் பிறந்துவிட்டது. "கோயிலுக்குள்ளே நீ எப்படிப் போகலாமடா; போனது மில்லாமெ, சாமியைப் பிடுங்கி விட்டாயா?" என்று உறுமி, அவனை அடி அடி யென்று அடித்து நொறுக்கி விட்டார்.

வீரன் கோயிலுக்கு முன்னலே மயங்கி உணர்வற்று விழுந்தான். அப்படியே அவன் வெகு நேரம் கிடந்தான்.

தகப்பனுக்குச் சேதி கிடைத்த வுடன் வந்து, இவனைத் தூக்கிக் கொண்டு போய்க் குடிசையில் போட்டான்.

வீரன் கண் விழித்தபோது, உச்சி வேளையாகிவிட்டது. அவனல் அசையக்கூட முடியவில்லை. உடம்பெல்லாம் ஒரே வலி. விலா எலும்பு இரண்டு ஒடிந்திருந்தது.

யாரும் அவனுக்கு ஆறுதல் கூறுவாரில்லை. தகப்பனும் தாயுங்கூட அவனை வாய்க்குவந்தபடி வைது பேசிக்கொண் டிருந்தார்கள்.

வீரன் தனது அருமைக் கடாவை நினைத்துக்கொண்டே படுத்திருந்தான். சாயங்காலம் ஆக ஆக, அவன் உடம்பு கொதிக்க ஆரம்பித்தது. மிகக் கடுமையான காய்ச்சல். இரவெல்லாம் அவன் என்னென்னவோ உளறினன். காய்ச்சலின் வேகம் அவ்வளவு. தலை சுழல்கிறது; மூளை கலங்குகிறது. ஆனல் திருகு கொம்பனைப் பற்றிய நினைவுமட்டும் அவனுக்கு மாறவில்லை. "செம்பட்டை, ஐயோ! அலருதே, அலருதே! உன்னை வெட்டிவிட்டாங்களா? நீ மோச்சத்திலே இருக்கியா? கறுப்பண்ணசாமி பேசவே மாட்டேங்குதே. அது சாமி இல்லை. கல்லு; வெறுங் கல்லு" என்று என்னென்னவோ பிதற்றிக் கொண்டே இருந்தான்.

மறுநாட் காலையில், இந்தக் கதறல் மாறிவிட்டது. வீரனின் முகத்திலே ஒரு தெளிவு பிறந்தது. அவனுடைய ஆசை நிறைவேறிவிட்டது போல் தோன்றிற்று. அவன் ஆனந்தமாகச் சிரித்தான். எதையோ பார்த்துப் பரவசமடைந்தான். "சாமி, எனக்குத் தரிசனங் கொடுத்தியா? எனக்கும் மோச்சங் கொடு" என்று தழுதழுத்த குரலில், அவன் கெஞ்சினன். திருகு கொம்புச் செம்பட்டை அவனுக்குக் காட்சி அளித்தது. அதன் முகம் ஒரே ஜோதி வட்டமாயிருந்தது. சாகும்போது, அதன் கண்ணிலிருந்த பயங்கரப் பார்வைபோய், இப்போது சாந்தி பொங்கிற்று. அது அன்போடு தெய்வீகக் குரலில் தன்னை அழைப்பதாக, வீரன் உணர்ந்தான். "நீதான் சாமி; அந்தக் கல்லு சாமியில்லை-நீதான் எனக்கு மோச்சங் கொடுக்கும் சாமி" என்று அவன் உதடுகள் அசைந்தன.

அவன் ஆவி பிரிந்தது.

✲

கேடு சொன்ன சோதிடர்

கி. பி. 1527-ஆம் வருஷம் சிகரி என்னும் இடத்தில் மொகலாய மன்னன் பாபருக்கும் ராஜபுத்திரர்களுக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. ஒரு சோதிடர் பாபருடைய ஜாதகத்தைப் பார்த்து, "உங்கள் கிரகம் சரியா யில்லை. இப்போது யுத்தம் வேண்டாம். நிறுத்துங்கள். யுத்தம் நடந்தால் நீங்கள் தோற்றுப் போவீர்கள்" என்றார். பாபர் அதைப் பொருட்படுத்த வில்லை. யுத்தம் நடந்தது. ஆனல், சோதிடர் வாக்குப் பலிக்கவில்லை. பாபரே வெற்றியடைந்தார். பாபர் அந்தச் சோதிடரை அழைத்து அவருக்கு ஏராளமான வெகுமதிகள் அளித்து, "நீர் இந்த ராஜ்யத்தில் இருக்கக்கூடாது. வேறு எங்கேயாவது போய்விடும்" என்று சொல்லி வெளியேற்றிவிட்டார்.

புதிய சீனா

வெ. சாமிநாத சர்மா

இந்த யுத்தமானது, சீன சமுதாயத்தின் எண்ணப் போக்கு, செயலாற்றும் முறை முதலிய அனைத்திலும் ஆச்சரியமான ஒரு மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கிறது. கால வெள்ளத்தின் கரையிலே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சீனா, இப்பொழுது அந்த வெள்ளத்திலே லாகவமாக நீந்திச் செல்கிறது. அதனை இகழ்ந்து வந்தவர்கள் இப்பொழுது புகழ்ந்து பேசுகிறார்கள்; அதன் குரல்வளையைப் பிடித்து நெருக்கிக் கொண்டிருந்தவர்கள், இப்பொழுது அதன் முதுகைத் தடவிக் கொடுக்கிறார்கள். எல்லாம் ஐந்தாறு வருஷத்திற்குள் ஏற்பட்ட மாறுதல் தான்! உறங்கிக் கொண்டிருக்கிற ஒரு தேசம் விழித்தெழுவதற்கு எத்தனையோ சகாப்தங்கள் பிடிக்கும் என்று சொல்லி, ஒருகாரியமும் செய்யாமல் சும்மாயிருக்கும் பெயர் வழிகளுக்கு, இன்றைய சீனா சிறந்த படிப்பினையாயிருக்கிறது.

சீனாவில் முந்தி, யுத்தத்தைப்பற்றிப் பொதுவாக ஒரு வெறுப்பு இருந்து வந்தது. போர்வீரன், சமுதாய அந்தஸ்திலே மிகவும் தாழ்ந்தவனென்று எண்ணப்பட்டான். ஆனால், இன்றைய சீனாவில், ஜனங்கள், யுத்தச் செய்திகளை எவ்வளவு ஆவலுடன் படிக்கிறார்கள்! பணக்காரக் குடும்பத்துப் பிள்ளைகளும், படித்த இளைஞர்களும் ராணுவத்தில் சேர எவ்வளவு உற்சாகத்துடன் முன் வருகிறார்கள்! யுத்தத்தை ஆதரித்து எழுந்துள்ள கவிதைகளும், நாடகங்களும், பிற நூல்களுந்தான் எத்தனை! போர் வீரனுக்கு, அவன் சென்ற இடமெல்லாம் எவ்வளவு சிறப்பு நடைபெறுகிறது! "யுத்தம் ஏன் செய்ய வேண்டும்?" என்று இன்றைய சீனாவில் யாரும் கேட்பதில்லை; "யுத்தம் எப்படிச் செய்யவேண்டும்?" என்றே எல்லோரும் கேட்கிறார்கள். ஜப்பானியர்களை எதிர்த்துப் போராட வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருப்பதோடு ஜனங்கள் நின்று விடவில்லை. போராடி வெற்றிகாண வேண்டுமென்று உறுதியும் பூண்டிருக்கிறார்கள்; வெற்றி காண்போம் என்ற நம்பிக்கையும் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜாதிக்குத் தோல்வி ஏற்படுமா?

இந்த யுத்தமானது, சீனாவில் என்றுமில்லாத ஓர் ஒற்றுமையை உண்டு பண்ணி யிருக்கிறது. முந்தி, மாகாணத்திற்கு மாகாணம் வித்தியாசமுண்டு. ஒரு மாகாணத்தான் மற்றொரு மாகாணத்தானை அந்நியன்போலவே கருதி வந்தான். இப்பொழுது இவையெல்லாம் மறைந்து விட்டன. இந்த யுத்தத்தினால் பல மாகாணத்தவரும் நெருங்கிப் பழகவேண்டி யிருக்கிறது. ஒருவரையொருவர் தெரிந்து கொள்கிறார்கள். எல்லோரும் சீனர் என்ற உணர்ச்சி பெற்றிருக்கிறார்கள். பாஷை ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. பரம்பரையாக அனுசரித்து வந்த அநேகம் பழக்க வழக்கங்கள் மாறியிருக்கின்றன. சமூகநலன், வகுப்பு நலன் ஆகிய அனைத்தும் தேசநலன் என்பதில் ஐக்கியமாகி யிருக்கின்

மதிப்பரிய புராதன நாகரிகம் படைத்தது சீனா. அதன் சரித்திரம் வியப்புக்குரியது. இன்று அது வாழ்வதா, சாவதா என்று போராடுகிறது. இந்த யுத்தத்தால் பிரமாத மாறுதலும், அடைந்திருக்கிறது. சீனாவின் பழமையான சரித்திரத்தையும், புது வாழ்வையும், மிக விரிவாக, சர்மாஜி எழுதியுள்ள **புதிய சீனா** என்ற நூல், சக்தி பிரசுரமாக வெளிவந்துள்ளது. அதிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறு பகுதி இந்தக் கட்டுரை.

றன. பணக்காரன் – ஏழை, கிராம வாசி – நகரவாசி, படித்தவன் – பாமரன் முதலிய வித்தியாசங்களெல்லாம் இப்பொழுது மிகவும் குறைந்திருக்கின்றன.

இங்ஙனம் சமுதாய ஒற்றுமை ஏற்பட்டிருப்பதோடுகூட, சீனவில் பல அரசியல் கட்சிகள் இருந்தன அல்லவா; அந்தப் பொதுவுடைமைக் கட்சி, தேசிய அபேதவாதக் கட்சி, அபேதவாத ஜனநாயகக் கட்சி, இளைஞர் கட்சி முதலிய கட்சிகளெல்லாம் இப்பொழுது, தற்காலிகமாகவாவது, தங்களைக் கோமிண்டாங் கட்சியில் ஐக்கியப்படுத்திக்கொண் டிருக்கின்றன.

"ஸன்யாட் ஸெனின் ஸான் மின் ஜூயி கொள்கைகளை இந்த அரசியல் கட்சிகள் யாவும் அங்கீகரித்துக்கொண் டிருக்கின்றன. ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி, சீனவின் தனி உரிமையைக் காப்பாற்றவேண்டு மென்ற ஒரே லட்சியந்தான் இந்த எல்லாக் கட்சிகளுக்கும் இருக்கிறது. அப்படியிருக்க இவைகளுக்குள் இந்த யுத்தகாலத்தில் பிளவு ஏன்?" என்று ஒவ்வொரு சீன அரசியல் வாதியும் இப்பொழுது கேட்கிறுன். "நாம் ஒன்றுபட்டிருந்தோமானல், இரும்புச் சங்கிலிக்கோ, துன்பத்துக்கோ பயப்படவேண்டிய தில்லை. ஒன்று சேர்ந்து முன்னேறுங்கள். நாம் செய்கிற யுத்தம் எல்லோருக்கும் பொதுவானது. சுதந்திரப் பாதையில் நாம் ஒன்று சேர்ந்தே செல்வோம்" என்பது ஒரு சீன தேசியப் பாட்டு.

அரசாங்க மென்று சொன்னல், வரி வசூலிக்கும் இயந்திர மென்றும், காவல் செய்யும் போலீஸ்கார னென்றும் ஜனங்கள் கருதி வந்தார்கள் முந்திய சீனவில். அரசாங்கத்தைக் கண்டு ஒருவித அச்சம் ஏற்பட்டிருந்தது ஜனங்களுக்கு. அரசாங்க உத்தியோகஸ்தர்களும், தங்களை ஆளும் அதிகாரிகளாக நினைத்துக் கொண்டிருந்தார்களே தவிர, தாங்கள் ஜனங்களுக்கு நன்மை செய்யக் கடமைப் பட்டவர்கள் என்பதை மறந்திருந்தார்கள்.

இப்பொழுது இவையெல்லாம் அடியோடு மாறியிருக்கின்றன. ஜனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் அதிகமான ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது.

யுத்தங் காரணமாக நிலவரி ஏறக்குறைய ஒன்றுக் [illegible] அதிகப் பட்டிருக்கிறது; விலைவாசிகள் ஏறியிருக்கின்றன; பேச்சுரிமை, எழுத்துரிமை முதலியன ஓரளவு கட்டுப் படுத்தப்பட்டிருக்கின்றன. பொதுவாக, அன்றுட வாழ்க்கை யென்பது இப்பொழுது ஒரு கடின சாதனையாக இருக்கிறது. ஆனல் ஜனங்கள் இவைகளைப் பொருட்படுத்தவில்லை; தாங்களே வலிய இந்த நிர்ப்பந்தங்களையெல்லாம் விதித்துக் கொண்டிருப்பதாகக் கருதி நடந்து கொள்கிருர்கள். அரசாங்கம் தங்களுடைய தென்ற உணர்ச்சி இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த உணர்ச்சியை மதித்து அரசாங்கமும் நடந்து கொள்கிறது.

சுருக்கமாக, இந்த யுத்தமானது சீனர்களை ஒரே ஜாதியின ராக்கியிருக்கிறது. அங்குப் பேசுவது ஒரே தலைவன்; இயங்குவது ஒரே அரசாங்கம்; அந்த அரசாங்கத்தை இயக்குவது ஒரே அரசியல் கட்சி – கோமிண்டாங் கட்சி.

என்ன போட்டி?

ஜெயில் விசிட்டர்: "என்ன காரணத்தினலப்பா நீ ஜெயிலுக்கு வந்தாய்?"

கைதி: "போட்டி போட்டது தான் காரணம், தாயே."

விசிட்டர்: "போட்டியா! ஏதாவது பெரிய வியாபாரமோ?"

கைதி: "ஆம், தாயே! ஒரு வகையில் பெரிய வியாபாரம் தான். நான் போடுகிற பத்து ரூபாய் நோட்டுகள் மாதிரியே, சர்க்காரும் போட்டு வந்தார்கள். இதுதான் போட்டி."

"பரதேசிப் பாடகனைப்போல், தர்பாருக்குத் தர்பார் நான் அலைந்து கொண்டிருக்கிறேன். ஆனால், பாடுவதெல்லாம் அதே பாட்டு அல்லது பாட்டுக்கள் தான்" என்கிறார் சர்ச்சில். இரண்டொரு வாரத்துக்கு முன், மாஸ்கோவில் ஸ்டாலினும் சர்ச்சிலும் சந்தித்துப் பேசினார்கள். இங்கே அமெரிக்க ஜனாதிபதி வரவில்லை. அவர் பிரதிநிதிதான் வந்தார். முன்னே க்விபெக்கில் ரூஸ்வெல்ட்-சர்ச்சில் சந்திப்பு நடந்தபோது, அங்கே ஸ்டாலின் செல்லவில்லை. என்றாலும், மூன்று தலைவர்களுக்கும் மகா ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாக, சர்ச்சில் கூறுகிறார்.



மேலே ;

சீனப் பெருஞ்சுவரின்
நுழைவாயில்

கீழே :

மலைக்குகையில் பொதுவுடைமை
வாதிகள் நடத்தும் ஒரு
சர்வகலாசாலை







சீனாவில் பெண்களும் விவசாயம் செய்கிறார்கள்.
மேலே: விவசாயப் பெண்கள் : : :
கீழே: அவர்கள் வசிக்கும் வீட்டின் முன்புறம்.

'ஒரே உலகம்' என்ற புத்தகத்தை எழுதி, உலகெங்கும் பிரபலமடைந்த வெண்டல் வில்கீ காலமாகிவிட்டார். ஜனாதிபதி பதவிக்குப் போனதடவை ரூஸ்வெல்டுடன் பலமாய்ப் போட்டியிட்ட வில்கீ, வரப்போகும் தேர்தலுக்கு இல்லாமல் மறைந்துவிட்டார். உலகெங்கும் சாம்ராஜ்யப் பித்தம் தொலையவேண்டும் என்ற கொள்கையுள்ளவர் வில்கீ. இந்தியாவுக்கும், சுதந்தரமிழந்த பிற நாடுகள் அனைத்துக்குமே உற்ற நண்பர் வில்கீ

ஜனனம்: 18-1-1892 — மரணம்: 8-10-1944

களங்கம் மறைந்தது

காங்கேயன்

மூன்று வருஷத்துக்கு முன் பார்த்தான். ஆம் பார்த்தான், பெயரளவில். பின்பு பலமுறை பார்க்கச் சமயம் வாய்க்கும் என்று நினைத்தான். ஆனால், அது நிறைவேறவில்லை. இனி என்று நிறைவேறுமோ, அல்லது நிறைவேறாமலே போகுமோ தெரியவில்லை.

அண்ணாவுக்குப் பெண் முடிவானதாகச் சொன்னார்கள். புதிய பெண்ணின் அழகையும் குணங்களையும் பற்றிப் பலர் புகழ்ந்தார்கள். ஆனந்தமும் அச்சமும் கலந்த ஒருவகை உணர்ச்சி உண்டாயிற்று, ரகுராமனுக்கு.

அதுவரை, அவன் வீட்டில் சர்வ சுதந்திரனாய் இருந்துவந்தான். அவனது விருப்பத்துக்கு மாறாக யாரும் ஏதுவும் செய்ததில்லை. இன்று, எங்கிருந்தோ அவனுக்கு முன்பின் பழக்கமில்லாத ஒருபெண் திடீரென்று வரப்போகிறாள். இரத்த உறவோ வேறு உறவோ அவளுக்கு வேண்டியதில்லை. கழுத்தில் ஒரு மாங்கல்யம் ஏறியதும், இல்லாத உறவெல்லாம் வந்துவிடுகிறது. இருபது வருஷமாக, தன்னைத் தவிர வேறு யாருக்கும் அண்ணா உரியவர் அல்ல என்று அவன் கருதிவந்தான். இன்று நிலைமை முற்றிலும் மாறப்போகிறது. அமைதியாக நடந்து வந்த அவனுடைய வாழ்க்கையிலே ஒரு பெரும் புயல் தோன்றும் போலிருந்தது.

அவளுக்கும் ரகுராமனுடைய குடும்பத்தாருக்கும் யாதொரு விதமான தொடர்பும் இல்லை. கல்யாணத்துக்குப் பதினைந்து நாளைக்குமுன்புவரை, அவர்கள் அவளைப் பார்த்ததில்லை. அந்த ஊர்ப்பக்கம் தலையெடுத்து வைத்ததுகூட இல்லை. ஐந்து மைல்களுக்கு அப்பால் இருக்கிறது அவளுடைய ஊர். திடீரென்று ஒரு நாள் கல்யாணம் முடிவாயிற்று. இரு குடும்பங்களும் ஒன்றாயின. அவர்கள் ஒருவரை ஒருவர் விழுந்து விழுந்து உபசரிக்கத் தொடங்கினர். உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் அனாமதேயமாக வாழ்ந்துவந்த அவளுடைய கழுத்தில் ரகுராமனின் அண்ணனாகிய ராஜகோபாலன் மாலையிட வேண்டுமென்று இருந்தது விதியின் விசித்திரமல்லவா?

முன்பின் தெரியாத ஒரு பெண் திடீரென்று வருகிறாள். அவளுடன் எப்படிப் பழகுவதென்றே அவனுக்கு விளங்கவில்லை. அவனுடைய மனதிலே ஒரு பெரும் புயல் தோன்றுகிறது. அந்தப் புயலையும், பொறாமையையும், களங்கத்தையும் இரண்டே வார்த்தைகள் மூலம் அவள் போக்குவது விந்தையல்லவா?

ஐந்தாறு வருஷங்களுக் முன்பு வரை, ரகுராமன் எதிலும் அவசரப்படுவான். வீட்டுக்குள் நுழைந்து கையலம்பியதும், இலையில் சாதம் தயாரா யிருக்க வேண்டும். இல்லாவிடில், கோபித்துக்கொண்டு வெளியே போய் விடுவான். அப்போதெல்லாம் அம்மா சிரித்துக்கொண்டே, "உன் குணத்துக்கும் போக்குக்கும் ஏற்ற பெண் எந்த ஊரில், எந்த தேசத்தில் பிறந்து வளர்ந்து வருகிறாளோ?" என்பாள். இப்போது அதை நினைத்துப் பார்த்தால், அதில் எவ்வளவோ உண்மை அடங்கியிருப்பதாகத் தெரிகிறது. அவள், அந்தப் பெண், அவன் மனைவி, இப்போது அவன் கண்ணுக்குத் தோன்றப் போவதில்லை. திடீரென்று ஒருநாள் அவள் மாயமாய் வந்து குதிப்பாள். அவள் மர்மமானவள் என்பதில் என்ன சந்தேகம்?

* * *

இப்போது நினைத்துப் பார்த்தால் அதெல்லாம் ஒரு கனவில் நிகழ்ந்தது போல இருக்கிறது.

பக்கத்து ஊரில் ஒரு கல்யாணம். அதற்கு அவனுடைய அண்ணா ராஜகோபாலனும் நண்பர்கள் சிலரும் போயிருந்தார்கள். இரவு பன்னிரண்டு மணிக்கு முகூர்த்தம். மூன்று நான்கு மணிவரை கண் விழித்துக் கொண்டேயிருந்த பிறகு, கொஞ்ச

நேரம் படுத்துத் தூங்கினர்கள். ராஜகோபாலன் ஏதாவது ஓர் ஊருக்குப் போனால், போய்ச் சேர்ந்த நிமிஷத்திலேயே திரும்பவேண்டும் என்று பிடிவாதம் செய்வார். எப்போது விடியும் என்று காத்திருந்தார். இருள் கொஞ்சம் விலகத் தொடங்கியதும், அவர் மற்றவர்களை எழுப்பினர். "நேரமாகிறது, போவோம்" என்றார். எல்லோரும் ஒவ்வொருவராகக் கண்ணைத் துடைத்துக்கொண்டு எழுந்தார்கள். இருள் இன்னும் பூரணமாக நீங்கவில்லை. ஒரு நண்பர் ராஜகோபாலனைப் பார்த்து, "அடுத்த தெருவில் ஒரு பெண் இருக்கிறள். பார்த்துவிட்டுப் போகலாமா?" என்றார்கள். ராஜகோபாலன் அதைக் கேலியாக நினைத்துக்கொண்டு சரியென்றார்.

எல்லோரும் அங்கே போனர்கள். வீடு இன்னும் கொஞ்ச தூரத்துக்கு அப்பால் இருந்தது. வாசலுக்கு முன்னால் ஒரு பெண் கோலமிட்டுக் கொண்டிருந்தாள். வைகறையின் மங்கிய ஒளியிலும் அவளுடைய உருவம் பூரணமாக விளங்கியது. நண்பர்கள் எல்லோரும் திடீரென்று நின்றார்கள். ராஜகோபாலன் அந்தத் திசையை உற்று நோக்கினர். அடுத்த நிமிஷம் உலகத்தின் பத்தாவது அதிசயம் நிகழ்ந்தது. அவர் புதிய மனிதனை மாறினர். "இன்று இங்கே இருந்துவிட்டுப் போவோம்" என்றார்.

பதினைந்தாம் நாள் கல்யாணம்.

கல்யாணமாயிற்று. பெண், வீட்டுக்கு வந்தாள். அப்புறந்தான் வாழ்க்கையில் சிரமமான கட்டம் ஆரம்பமாயிற்று. வாழ்க்கையே புதிதாக மாறியதுபோலிருந்தது. ஒரு புதிய உலகத்தில் வசிப்பது போலிருந்தது ரகுராமனுக்கு. அண்ணவும் சுற்றத்தார்களும் மாறிவிட்டவர்கள் போலத் தோன்றினர்கள். ரகுராமன் ஓய்வு பெற்று ஊருக்கு வரும்போதெல்லாம், பெரும்பாலும் வீட்டிலேயே தங்கியிருப்பான். வாசலருகே கட்டிலைப் போட்டு, வெள்ளை வெளேரென்றிருக்கும் தூய தலையணைகளையும் படுக்கைகளையும் அதில் விரித்து, கையில் ஒரு புத்தகத்தையும் வைத்துக்கொண்டு படுக்கையில் சாய்ந்தால், பொழுது போவதே தெரியாது. அம்மா அவன் தலையருகே உட்கார்ந்து, அவன் சொல்லுவதை எல்லாம் கேட்டுக்கொண்டே இருப்பாள். காலை மத்தியானமாகும். மத்தியானம் மாலையாகும். அவன் அந்த வராந்தாவையும் கட்டிலையும் சுற்றிக்கொண்டே உட்கார்ந்திருப்பான்.

இப்பொழுதோ?

வீட்டை நோக்கிச் செல்லும்போது கால்கள் பின்னுகின்றன. கண்கள் நிலத்தை நோக்குகின்றன. பேச்சை நிறுத்து நிறுத்துப் பேசவேண்டியதாயிருக்கிறது. இதுவரை சுதந்தர புருஷனை யிருந்தான். இப்போது மனத்தைக் கட்டுப்படுத்தவும் செய்கைகளைத் தணிக்கை செய்யவும் நேருகிறது. சாப்பிட உட்கார்ந்தால், கண்கள் இலையைத் தவிர வேறு எதையும் பார்ப்பதில்லை. கை சாதத்தைப் பிசையும். ஆனல் வாயருகே கொண்டு போகக் கூசும். வாயருகே கொண்டு போனாலும், வாய் திறக்க அஞ்சும். தொண்டை விக்கும். ஆனல் தண்ணீரைப் பருக மனம் பின்வாங்கும்.

அவன் வீட்டுக்குள் நுழைந்ததும், அவளையும் அவனுடைய செய்கைகளையும் அவள் சதா பார்த்துக்கொண்டிருப்பதாகக் கற்பனைசெய்து கொள்வான். சில சமயம் ஞாபகமறதியாக யோசனையில் ஆழ்ந்திருப்பான். அப்போது வளையல்கள் குலுங்கும். அவன் பதைபதைத்துப் போவான். முன்போலத் தாயாருடன் பேச முடியவில்லை. வீட்டில் தங்க முடியவில்லை. உலகத்துக்கே அவன் புதியவன் போலவும், யாருமே அவனுக்கு உறவினர்கள் இல்லை போலவும் அவனுக்குத் தோன்றியது.

* * *

இருபது நாட்கள் கழிந்தன. ஓய்வு காலம் முடிந்தது. ரகுராமன் மீண்டும் சென்னைக்குச் செல்லவேண்டும்.

அன்று காலை முழுவதும், மூட்டை கட்டுவதிலும், அவசியமான சாமான்களைப் பெட்டியிலிருந்து நீக்குவதிலும் ஈடுபட்டிருந்தான். அவ

னுடைய சாமான்கள் சிலவே. நினைத்தவுடன் புறப்பட்டு விடலாம். ஆனால், ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போவது - அதிலும் சென்னைக்குப் போவது, திருவல்லிக்கேணியிலிருந்து மயிலாப்பூர் போவது போல அவ்வளவு இலகுவா? நண்பர்கள் உறவினர்கள் எல்லோரிடமும் சொல்லிக் கொள்வதற்கே அரை நாளாகும்.

ஒவ்வொரு வீடாகச் சுற்றியலைந்து அவன் கால்கள் சோர்ந்தன. எல்லாவற்றையும் ஒழுங்காய் எடுத்து வைத்துப் பெட்டியைப் பூட்டினான். படுக்கையைக் கட்டினான். கண்ணாடி எடுத்துத் தற்செயலாக முகத்தைப் பார்த்தான். அங்கொன்றும் இங்கொன்றுமாக மயிர் வளர்ந்திருந்தது. அதை அவன் கவனிக்கவில்லை. அவசர அவசரமாய் உட்கார்ந்து சிங்காரம் பண்ணிக் கொண்டான்.

கைகளும் கால்களும் இயந்திரம் போல ஏதோ வேலை செய்துகொண்டிருந்தபோதிலும், அவனுடைய மனம் மாத்திரம் உற்சாக மிழந்து சோம்பி நின்றது. கல்யாணம் முடிந்து சில நாட்களே ஆகின்றன. எல்லோரும் சந்தோஷமாய் இருக்கிறார்கள். எங்கும் இன்பம் பொங்கித் ததும்புவதுபோல் இருக்கிறது. அவன் மாத்திரம் தன்னந் தனியாக, தீவாந்தர சிட்சை யடைந்தவனைப்போல, வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள சென்னைக்குப் போய் இருண்ட அறையையும், மோட்டாரையும் டிராமையும் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும். இன்றுபோகிறான். இனித் திரும்ப எப்போது வருவானோ? ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ? ஒருவேளை திரும்ப வராமலே போகிறானோ என்னவோ? மனித வாழ்வு சதமா என்ன? நாம் சாக விரும்பாவிட்டாலும் நம்மைச் சாகவைப்பதற்கு நாகரிக உலகம் எத்தனையோ வழிகளைக் கண்டு பிடித்திருக்கிறதே! உள்ளே, மனம் குழந்தைபோல அழுதது. அவன் அதற்கு ஆறுதல் கூறி ஒருவாறு தேற்றினான்.

மணி பத்து. பதினோரு மணிக்கு ரயில்வே ஸ்டேஷனுக்கும் ஊருக்கும் அரை மைல் தூரம் இருக்கும். சற்று முன்னால்போவதே நலம். விடை பெறுவதற்காக அண்ணாவின் காரியாலயத்துக்குச் சென்றான். "எல்லோரிடமும் சொல்லிக் கொண்டாயா?" என்று கேட்டார் ராஜகோபாலன். "ஆம்" என்பதற்கு அறிகுறியாக ரகுராமன் தலையசைத்தான். ராஜகோபாலன் சிரித்துக்கொண்டே, "உன் மதனியிடம் சொல்லிக் கொண்டாயா?" என்றார். வெட்கத்தால் ரகுராமனுடைய முகம் சிவந்தது. "சொல்லவில்லை" என்றான். "சொல்லிக் கொள்ளுகிறதுதானே, வா போகலாம்" என்றார். இருவரும் வீட்டுக்குச் சென்றார்கள்.

அபாயம்! எந்த ஆபத்துக்காக அவன் பயந்தானோ அந்த ஆபத்து இப்போது அவனை எதிர் நோக்கி நிற்கிறது. இனித் தப்புவதற்கு வழி இல்லை. அவளை எப்படி அழைப்பது? அவளுக்கு முன்னால் எவ்வாறு நிற்பது? மனத்தில் கவலையும் திகிலும் திகைப்பும் மாறி மாறித் தோன்றின. உயிரோ, உணர்ச்சியோ இல்லை! உணர்வற்ற சதைக் குவியல்-பிணம்-தற்செயலாக நடக்கும் சக்திபெற்று எழுந்துபோவது போலச் சென்றான். வீட்டுக்குள் நுழைந்தான். கிலீரென்று வளையல் குலுங்கும் ஓசை தோன்றி மறைந்தது. அவன் மிரண்ட கண்களுடன் நெஞ்சிலே கையை வைத்துக்கொண்டு, வாசலில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த அம்மாவின் பக்கத்திலே போய் உட்கார்ந்தான். அவனைப் பார்த்ததும் அவனுடைய தாயாருக்கு அதிசயம் உண்டாயிற்று. சற்று நேரத்துக்கு முன்பே, அம்மாவை வணங்கி அவளுடைய ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டான். அதற்குள் மீண்டும் வந்து மௌனமாய் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும், "என்ன, எதையாவது மறந்து விட்டாயா?" என்றாள். ரகுராமனுக்குச் சிரிப்பு வந்தது. "ஒன்றும் இல்லை" என்றான். சற்று நேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தான். என்ன பேசினான் என்பது அவனுக்கே ஞாபகம் இல்லை. அவன் தன்னுடைய லட்சியத்திலேயே கண்ணாயிருந்தான்.

பத்து நிமிஷம் கழிந்திருக்கும். உள்ளே எழுந்து போனான். நிலத்தைப் பார்த்துக் கொண்டே ஒரு திசையில் நடந்தான். கண்ணைச் சற்று உயர்த்திப் பார்த்தான். மூலையில், புத்தக அலமாரியருகே அவள் நின்றுகொண்டிருப்பது போல இருந்தது. அருகே சென்றான். வாயைத் திறக்க முயன்றான். நாக்கு வறண்டது. வார்த்தைகள் வெளிவர வில்லை. "மதனி! போய் வருகிறேன்" என்ற வார்த்தைகள் அரையுங் குறையுமாக வெளிவந்தவை. பதிலுக்காக, தலையைச் சற்று உயர்த்தி முன்னாலே பார்க்க முயன்றான். அவள் புடவைத் தலைப்பை இழுத்துச் சரி பண்ணிக்கொண்டு, சற்று முன்னே வந்து இரு கைகளையும் குவித்து, "போய் வாருங்கள்" என்றாள், கோமளமான குரலிலே.

அந்த இரண்டு வார்த்தைகளிலே, இந்து தர்மத்தில் பெண்களுக்கு விதித்திருக்கும் நல் லிலக்கணங்களையும் பெண் குலத்தின் சிறப்பையும் கருணையையும் கண்டான். மறு நிமிஷம் அவன் விழித்துக்கொண்டான். அவன் புதிய மனிதனானான். அவன் மனத்திலிருந்த வெட்கத்தையும் களங்கத்தையும் பொறாமையையும் அந்த இரண்டு வார்த்தைகள் கரைத்துப் போக்கின. அவன் புனிதமடைந்தான். அவள் வெறும் பெண்ணாகவோ, மதனியாகவோ அவனுக்குத் தோன்றவில்லை. பெண்ணுருவில் வந்த தெய்வம் போலத் தோன்றினாள். அவன் கைகள் அவனையுமறியாமல் குவிந்தன. தலை குனிந்து வணங்கினான், சிஷ்யன் குருவை வணங்குவது போல நிஷ்களங்கமாக, மௌனமாக.

"நேரமாகிறது!" என்றார் அண்ணா.

✲

புதுமாதிரி தர்மம்

பெஞ்சமின் பிராங்க்ளின் என்ற பிரபல அமெரிக்க அறிஞர், ஒரு நண்பருக்கு எழுதிய கடிதம்:

"அன்பார்ந்த ஐயா, உங்கள் நிலைமையைப் பார்த்து எனக்கு வருத்தமா யிருக்கிறது. இத்துடன் பத்து டாலர் நோட்டு ஒன்றை அனுப்பியிருக்கிறேன். இவ்வளவு தொகையையும் உங்களுக்கு இனமாகக் கொடுப்பதாக நான் நடிக்கவில்லை. இதை நான் உங்களுக்குக் கடனாகவே கொடுக்கிறேன். நீங்கள் உங்கள் தேசத்துக்குப் போனதும், எல்லாக் கடனையும் ஒழிக்கத்தக்க முறையில் ஏதாவது ஒரு தொழில் செய்யாமல் சும்மா இராதீர்கள். அப்படி ஒரு தொழில் செய்துகொண் டிருக்கும்போது, வேறொரு நாணயமான மனிதர், நீங்கள் இப்போதிருப்பது போன்ற கஷ்டமான நிலைமையில் இருப்பதைப் பார்த்தீர்களானால், நான் கொடுத்த பணத்தை அவருக்குக் கொடுத்துவிடுங்கள். அப்படிக் கொடுத்தீர்களானால், அதை நீங்கள் எனக்கே கொடுத்ததுபோல மதிப்பேன். நீங்கள் பணத்தை அவரிடம் கொடுக்கும்போது, அவரைப்போல் கஷ்டமான நிலைமையில் வேறு யாராவது இருந்தால் அவருக்கு அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுங்கள். இந்த மாதிரியாக இது பலர் கைக்கு மாறட்டும். சிறிதளவு பணத்தின் மூலம் பெரும் நன்மை செய்வதற்காக, நான் கண்டுபிடித்த தந்திரம் இது. நல்ல காரியங்களில் பெரும் பணத்தைச் செலவழிக்கத் தக்க முறையில் என்னிடம் பணம் இல்லை. ஆகையால்தான், மிக்க சாதுரியமான இந்த வழியைக் கடைப்பிடிக்கிறேன். உங்கள் எதிர்கால நன்மையைக் கோரும் உங்கள் சேவகன்.

—பிராங்க்ளின்"

சோமசன்மா

லா. ச. ராமாமிருதம்

சோமசன்மா என்னும் 'பிரம்மன்', பாறைமீது கால்களை அழுந்த ஊன்றிக் கொண்டு, இளந்தாடி காற்றில் அலைய, கீழே பசிய மரஞ் செடிகள் அடர்ந்திருக்கும் பிரதேசத்தைக் கண்டு அதிசயித்து நின்றான்.

குருகுல வாசத்தி லில்லாது, நேரே யோக சித்தியினின்று விழித்தெழுந்த பால சன்யாசியாதலின், அவன் மண்டையிலும் முகத்திலும் உடலிலும் மயிர் வெட்டாது அடர்ந்து வளர்ந்திருந்தது. மண்டையில் ஊறியிருக்கும் ஞான வெறியோ என்னவோ! சற்று மஞ்சள் பூத்த அவன் கண்கள், வீக்ஷண்யமாய்ப் பிரகாசித்தன. சமாதியினின்று திடுக்கென்று விழித்தெழுந்ததாலோ என்னவோ, சதா அழிந்துகொண்டும் மறுபடி மலர்ந்துகொண்டுமிருக்கும் இந்தப் பூவுலகின் அழகு, அவனை அப்பொழுதுதான் வயிற்றிலிருந்து விழுந்த குழந்தை போல் பிரமிக்க அடித்தது.

பூமாதேவி, இளவேனிலில் குளித்து, குளித்த சுறுக்கில் பச்சைப் பட்டாடையை உடல்மேல் போர்த்திக் கொண்டிருந்தாள். அவளுடைய அவயவங்களின் வளத்தை எடுத்துக் காட்டி, மரமும் செடியும் கொடியும் பூவும் புதரும் அங்கங்கே பொங்கிப் புளகித்துப் பூத்திருந்தன. வெள்ளிச் சரிகைபோல் ஓர் அருவி பாறைகளினின்று சரிந்து காட்டினுள் ஊடுருவிச் சென்றது. ஜலத்தடியில் வெள்ளைக் கூழாங் கற்களும் மணலும் பூமாதேவியின் அடிவயிறும் பிரகாசித்தன. எவ்வளவு தின்றும் குன்றா வான வெளியின் நீலத்தை, வெண் மேகங்கள் நிதானமாய் மேய்ந்து கொண்டு சென்றன. புள்ளினங்கள் காலையிலெழுந்து, குதூகலத்துடன் ஒன்றையொன்று கூப்பிட்டுக் குசலம் விசாரித்துக்கொண் டிருந்தன.

சோமசன்மா கீழேயிறங்கிக் காட்டினுள் புகுந்தான். தாவரங்கள் தலை குனிந்து, அந்தப் பிராம்மணோத்தமனை வரவேற்றன. காயும் பழமும் இலையும், கைக்குமாத்திரம் அல்ல, நேரே வாய்க்கே எட்டும் உயரத்தில் கனத்துத் தொங்கின. தரையில் ஜமக்காளம் விரித்ததுபோல் பச்சைப் புல். அகத்துள் வீற்றிருக்கும் பெம்மானை அர்ச்சிக்கும் பூக்கள், பக்குவ மலர்ச்சியில் பறிக்கத்தான் காத்துக் கொண்டிருந்தன. தவத்துக்கும் சிந்தனைக்கும் இதைவிடச் சௌக்கியமான இடம் ஏது?

இவ்வெண்ணம் மனத்தில் பாய்கையிலேயே, பின்னால் 'வீல்' என்று ஓர் அலறல்! சோமசன்மா திடுக்கிட்டுத் திரும்பினான். இரு புதர்களினிடையில் ஒரு பெண்ணின் உருவம் கரிமின்னல் போல் கண்ணில்பட்டு மறைந்தது. பின்னாலேயே அதைத் துரத்திக் கொண்டு ஒரு ஜந்து ஓடி வந்து, சோமசன்மனைப் பார்த்ததும் திகைத்து நின்றது.

சிக்குப்பிடித்துச் சடை சடையாய்த் தொங்கும் மயிர். அதைச் சுற்றிலும் குடலைக் குழப்பும் ஒரு துர்நாற்றம். தடித்துத் தொங்கும் உதடு. அதைத் தள்ளிக் கொண்டு கோரவாய் இளிக்கும் பற்கள். தீராத வேட்கையின் மங்கிய சுடர் விட்டெரியும் கண்கள். மூச்சில் உலையனல் வீசியது. அதன் முற்றிய மூர்க்கத்தின் அடையாளமாய், நெற்றியில் இரு கொம்புகள் கொடிமுடிச்சாய் முறுக்கிக் கொண்டிருந்தன. இதென்ன, மிருகமா அல்லது மிருக வேஷமெடுத்த அரக்கனா?—

அவன் விழ்ச்சி யடைந்த ஒரு தவசி. விழ்ச்சியின் சூழ்ச்சியை அறியாத அகங்காரி, பலமிழந்த மதிமயக்கக்காரன், தன் மயக்கம் தீர்ந்து, உண்மை தெளியும்போது, என்ன பயங்கரம்! என்ன அதோகதி!

தவத்தைக் கலைக்க இம்மாதிரி ராக்ஷசர்கள் வருவது வழக்கமாயிற்றே! நல்ல காரியத்துக்கு இடையூறு சர்வ சகஜமாயிற்றே! சோமசன்மனுக்குக் கோபத்தில் கண்கள் செவந்தன. ஹுங்காரம் பண்ணிக்கொண்டு அவ்வரக்கன்மீது பாய்ந்தான். ஊளையிட்டுக்கொண்டு, அந்த மிருகம் புறமுதுகிட்டு ஓடியது. 'பிராம்மணன்' கோபத்தின் முன், எதுதான் நிற்கமுடியும்?...

அந்தப் பெண் அடர்ந்து வளர்ந்த புதர்களினின்று வெளிப்பட்டு, அவனை வணங்கிய பொழுதுதான், அவனுக்கு அவள் நினைவு வந்தது, தாழ்ந்த குலத்தினள் தான். கன்னங்கறுத்த மேனி. ஆயினும், என்ன வனப்பு! — அப்பெரும் விழிகளில் எவ்வளவு மருட்சி! மேனி பட்டுப் போல் மின்னியது. அச்சாய் அமைந்த அவயவங்களின் கவர்ச்சியும் மனத்தில் எழுந்த ஆசையும், கண்ணை மறைத்தன.

'பெண்ணே நீ யார்?' என்னும் கேள்வி, தொண்டையில் எழுந்ததேயன்றி வாயில் கிளம்பவில்லை. ஆம், வாய்ச் சொல்லில் என்ன பயன்? அவள் நிற்கும் நிலையும் பார்க்கும் பார்வையும், அவள் மனத்தில் உள்ளதை வெட்ட வெளிச்சமாய்த் திறந்து காண்பித்தன. அவள் யாராயிருந்தால் என்ன? இவளை ஏற்றுக் கொண்டால் என்ன? கசியபப் பிரம்மா, மாயையைக் கூடவில்லையா? பராசரர், மச்சகந்தியை இச்சிக்கவில்லையா? சுப்பிரமணியன், வள்ளியைக் கொள்ள வில்லையா? பகவன் என்னும் பிராம்மணன், ஆதியென்னும் பறைச்சியை அங்கீகரிக்க வில்லையா?... முற்றிலும் கடந்தவனுக்குக் குலமேது, கோத்திரமேது, வரம்பு ஏது?...

அவள் கண்களால் சிரித்துக் கொண்டே, ஊடலாய்ப் பின்னிடைந்து ஓட ஆரம்பித்தாள். அவன் பின் தொடர்ந்தான். பாறைக்குப் பாறை மேட்டுக்கு மேடு தாவி, குன்றின் உச்சியை நாடி அவள் ஓடுகையில், அவள் உடல் கட்டின் விறுவிறுப்பும், சந்தனக் கட்டைபோல் வழுவழுத்த வளமான தொடைகளின் மிடுக்கான ஒடிப்பும், அவனைத் திணற அடித்து மூளையில் வெறி உண்டாக்கியது. வெகு வேகமாய்க் குன்றைச் சுற்றிக் கொண்டுபோய், உச்சியில் திடீரென்று அவள் எதிரில் தோன்றினான்.

அவள் தப்பியோட வழியில்லை. முன்னும்பின்னும் பக்கங்களிலும், பாறைகள் சுவர்கள்போல் எழும்பித் தடுத்தன. விலக்கமுடியா விதியை ஏற்கும் விரக்தியுடன், பயத்தின் குளிர் விட்டு, அவனது ஆண்மையின் சிறலை எதிர்பார்த்துக் கொண்டு அவள் நிற்பதை, அவன் கண்டான். அவன் கண்களில்

ஜ்வாலைகள் கிளம்பின. பிடறி விசிறி போல் சிலிர்த்தது. அவனே ஆகாயத்தில் பறப்பதுபோ லிருந்தது.

*   *   *

இளவேனில் கோடையாய் முதிர்ந்தது. நாளடைவில், வேகமும் விறுவிறுப்பும் குறைந்து, நடை தளர்ந்து, உடல் கனத்து, பாதம் பூமியில் பதிவதைக் கண்டான். ஆயினும், இந்த அயர்ச்சியிலும் ஒரு கவர்ச்சி; இந்தக் கனத்திலும் ஒரு மினு மினுப்பு; இந்த மெதுவிலும் ஒரு திமிர். அவனை அவள் இப்பொழுது நாடவு மில்லை, விரும்பவு மில்லை. தன்னில் தானே திருப்தியா யிருந்தாள். அவனை வேண்டுமென்றே ஒதுக்கியும் நின்றாள்.

பிறகு, ஒரு நாள் மாலை அலைந்து திரிந்துவிட்டு வாழுமிடம் திரும்புகையில், அவள் மடியில் ஒரு சிசு பால் குடிப்பதை அவன் கண்டான். அவன் நெஞ்சு நைந்தது. என்னதான் உயர் குலமாயினும் பெற்ற மனந்தானே! ஆனால், அவளுடைய மூர்க்கம் புரியவில்லை. குழந்தையினிடமிருந்து விடுவித்துக்கொண்டு ஓடிவந்து, அவனை முட்டியுதைத்து வீழ்த்தினாள். எதிர்பாராத வேளையில் அவள் தாக்கிய வேகத்தில், அவன் கால் சறுக்கிப் பாறையின் உயரத்தினின்று உருண்டு புரண்டு விழுந்தடித்துக் கொண்டு கீழே வந்து சேர்ந்தான். எழுந்ததும் உடல் மண்ணைத் தட்டிக் கொண்டு, வந்த கோபாவேசத்தில் அவளைச் சம்ஹாரம் பண்ணி விடுவதென்றே புறப்பட்டான். ஆயினும், அறிவு வந்து சமயத்தில் தடுத்தது.

—சீ, கேவலம் பெண் புத்தியைக் காண்பித்து விட்டாள் - அதிலும் ஈன ஜாதி - நம் வைராக்கியத்தை மறந்தது நம்மேல் அல்லவா தப்பு - விசுவாமித்திரன் மாதிரி ஏமாந்துவிட்டோம். இது நமக்கு நல்ல பாடம்—உன்னையே நீ எண்ணிப்பார்-. அவ்விடத்து மண்ணை உதறிவிட்டு, அப்பால் அகன்றான்.

*   *   *

தாவரங்கள் சில மலர்ந்தன. சில வாடிக் காய்ந்து கருகியழிந்தன. நீர் இருந்த இடம் வறண்டு உலர்ந்து வெடித்தது. வெடித்த இடம் சுரந்தது. பூத்திருந்தது செத்தது, செத்தது மறுபடியும் வித்து வைத்தது. வாழ்ந்தது அழிந்தது. அழிந்தது பிறந்தது.

காலம் பல கோலமாய்ச் சென்றது. அவன் திகம்பரனாய், தன்னைத் தவிர வேறெதையும் சிந்தியாது, காய் கனி இலை சருகுகளைத் தின்று அலைந்தான். அவனது தனித் தவத்தின் விந்தை யாதெனில், மேனி இளைக்கவில்லை. மயிர் சடைத்ததால், உடம்பில் உரம் ஏறி, ஆள் உருவாய் விளங்கினான். நினைத்தபோது ஆகாரம். கண்டவிடத்தில் படுக்கை. தாடி முழங்கால்வரை தொங்கியது. அதிலிருந்தே அவன் எவ்வளவு பெரிய தவசி என்று அவனுக்கே தெரிந்தது. அவனை அண்ட எதுவும் அஞ்சியது. அவ்வளவு நெருப்பாய் இருந்தான் அவன்.

பிறகு, ஒரு நாள் காலை—வில்வ இலைகளை உட்கொண்டு, உள்ளத்தில் வீற்றிருக்கும் பெம்மானை அர்ச்சித்துக்கொண்டிருக்கையில், திடீரென்று அவன் உடல் இருப்புக் கொள்ளாமல் பரபரத்தது. யாரோ, புதர்களிடையேயிருந்து, தன்னைக் கூர்மையாய்க் கவனிப்பதுபோன்ற ஒரு சங்கடமான உணர்ச்சி. வாயில் அப்படியே ஒரு வில்வக்கொத்துத் தொங்கியது. அதை உள்ளே தள்ளி அதுக்குமுன், நாலு பேர் நாற்புறங்களினின்றும் பாய்ந்து வந்து, அவன் பாதங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்கள். அவனால் அசையக்கூட முடியவில்லை. திடீரென்று அவனை ஒருவன் தோளில் ஏற்றிக் கொண்டான். பின்னால் மற்ற மூவரும் கொக்கரித்துக் கொண்டும் குதித்துக் கொண்டும் ஏதோ புரியாத பாஷையில் பேசிக்கொண்டும் பின் தொடர்ந்தனர்.

எல்லோரும் காட்டோரத்தில் ஒரு கிராமத்தை அடைந்தனர். அது கிராமங்கூட அல்ல. சேரி மாதிரி இருந்தது. இன்னும் ஏழெட்டுப் பேர் குடிசைகளினின்று ஓடிவந்து, அவனைப் புரியாத பாஷையில் வரவேற்றனர். அவனை ஒரு குடிசைக்குள் கொண்டுபோய் இறக்கி, ஆகாராதிகளையும் ஜலத்தையும் அவன் முன் வைத்துவிட்டு, கதவை மூடிக்கொண்டு எல்லோரும் வெளியேறினர்.

அவர்களுடைய 'பிராம்மண பக்தி, அவனுக்குப் புரியவில்லை. வேளா வேளையிலும் வேண்டாத வேளை யிலும் வேண்டுமென்னும் ஆகாரம். ஆனல், வெளிக்கதவு மட்டில் எப் போதும் அடைப்பு. அவன் ஒன்றும் பேசவே யில்லை. மௌனத்தி லிருக் கும் சக்தி வேறெதற்கு உண்டு? எவ்வ ளவுக் கெவ்வளவு வாய் திறவா திருப் போமோ, அவ்வளவுக்கவ்வளவு இவர் கள் நம்மைக் கொண்டாடும் பெருமை யும் அதிகரிக்கும். தவிர, என்ன தான் நடக்கிறதென்று பார்ப்போமே!

பின்பு —

ஒருநாள் உதயத்தில், சூரியகோளம் தகதக என்று குன்றின் உச்சியை உதைத்துக் கொண்டு கிளம்புகையில், நாலு பேர் வந்து அவனை எழுப்பி, ஸ்நான கட்டத்துக்கு அழைத்துப் போய், ஆசையாய், உடம்பை நன் ருய்த்தேய்த்து, மயிரின் சடையையும் சிக்கையும் பிரித்து, உடல் பனிபோல் மின்னக் குளிப்பாட்டி, நெற்றியில் பதக்கம்போல் திலகமிட்டு, தலையில் பூச் சுற்றி, கழுத்திலே ஆரமிட்டு, கொட்டும் மேளமுமாய்க் கிராமத் தைச் சுற்றி வந்தார்கள்.

நம்முடைய மகத்துவம் இவர் களுக்கு எப்படித் தெரிந்தது? என்ன மரியாதை, என்ன பக்தி! ஏதேது, இவர்களுக்கு அடுத்த ஜன்மமே யிருக் காது போலிருக்கிறதே! அத்தனை பேருக்கும் நேரே ஒரே புஷ்பக விமா னந்தான்!

எங்கும் ஒரே புஷ்பமயம்—முன்னல் நாலு பேர், பின்னல் நாலு பேர், பக் கத்துக்குப் பத்துப்பேர் – உடுக்குப் பாட்டு, பஜனை, தேங்காய், பழம், வெற்றிலை, சந்தனம், விபூதி, எலுமிச் சம் பழம், சாம்பிராணி.

கிராமத்தைத் தாண்டிக் காட்டோர மாய் ஒரு கோயிலை அடைந்தனர். சூர்ய கதியில் கோபுரத்தின் பித்தளை ஸ்தூபி நெருப்புக் கொழுந்தாய் எரிந் தது.

கோயில் பூசாரி தொந்தியும் தொப்பையுமாய், கையில் ஒரு செம்பு ஜலத்துடன் வெளிவந்து பெருத்த விழிகளுடன், சிரித்த முகத்துடன், அவர்களுடைய மகத்தான விருந் தாளியை வரவேற்ருர். அம்மன் பிர சாதமாகிய அந்த ஜலத்தைக் கொஞ் சம் அவன் தலையில் தெளித்துவிட்டு உள்ளே சென்ருர்.

பணமும் மூளையும்

ஒரு நாள் இரவு சென்னை நகரச் சந்து ஒன்றில், ஒரு பிரபு பணப்பையோடு சென்றுகொண் டிருந்தார்.

திடீரென்று ஒரு கொள்ளைக் காரன் அவர் எதிரே தோன்றி ஞன். அவரது மூளையைக் குறி பார்த்து, தன் கைத்துப்பாக்கி யைப் பிடித்துக் கொண்டான். "கையிலுள்ள பணத்தைக் கொடு. இல்லையானல், உன் மூளை யைச் சுட்டுச் சிதறடித்துவிடு வேன்" என்ருன்.

"சுட்டுக்கொள். பணத்தைத் தரமுடியாது. மூளை யில்லாமல் இம்மாநகரில் வாழ முடியும்; பண மில்லாமல் வாழமுடியாது" என் ருர் பிரபு.

சோமசன்மா நின்ற இடம் துவஜ ஸ்தம்பத்துக் கடியில். அங்கே யிருந்து நேரே பார்த்தால், வாகன மண்டபத்தைத் தாண்டி, உள்ளே இரு ளடைந்த கர்ப்பக் கிருஹத்தில், அகல் விளக்குகள் எரிவது தெரிந்தது.

மறுபடியும் உள்ளே போன பூசாரி கன்னங் கறுத்த மேனியுடன் வெளி வருகையில் உள்ளிருளில் ஒரு பாகமே பிரிந்து வெளிவருவது போலி ருந்தது. கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலி. கைமணிக்கட்டில் காப்பிட்டது போல் ஒரு புஷ்பசரம். கையில் கத்தி. கத்திப் பிடியில் ஒரு சாமந்திக் கொத்து. பிறைச் சந்திரன்போல் வளைந்த அந்த அரிவாளின் கூர்மையில் காலை வெய் யில் பட்டதும், மின்னல்கள் பிறந்து ஒன்றுடன் ஒன்று கோத்துப் பின்னி விளையாடின. அவனை நோக்கி அவர் வந்தார்.

அப்பொழுதுதான் அவனுக்கு விஷ யம் புலனயிற்று – பனிப்படலங்கள்

சூழ்ந்த மலையுச்சியில் ஏறுகையில், திடீரென்று பனித்திரைகிழிந்து, தான் செங்குத்தான ஒரு பாறை யோரத்தில் கீழே அகண்ட பாதாளத்துக்கு நேராக அடியெடுத்து ஒரு காலை ஆகாயத்தில் தூக்கிய வண்ணம் நிற்பதைக் கண்டால் எப்படி யிருக்குமோ, அப்படி யிருந்தது அவனுக்கு!

தப்பியோடக் கூடத் தோன்ருமல், மனமும் உடலும் வெலவெலத்து விட்டன. அதற்குள் சேர்ந்தாற் போல் ஐம்பது கரங்கள் இரும்புப் பிடியாய் அவன்மேல் விழுந்தாற் போலி ருந்தது.

அவனையு மறியாமல், இத்தனை நாள் சாப்பிடுவதற்கன்றி வேறெதற்கும் திறவாத அவன் வாய் திறந்து, ஜகன்மாதாவின் காதுக் கெட்டவோ என்னவோ, தொண்டையைப் பிறிட்டுக் கொண்டு, ஓர் அலறல் அலறியது:

"–ம்–மே–ஹே–ஹே–"

* * *

இந்த உண்மையென்னும் உபயோக மற்ற தத்துவம் ஒன்றிருக்கிறதே – அது எப்பொழுதுமே பொய்யில்தான் புதைந்து கிடக்கிறது. அது வெளிப் படுவதற்கு வேளையோ நேரமோ கிடையாது. அதைக் கண்ட பலனை அனுபவிக்க முடியாத வேளையில்தான் அது புலனுகிறது.

இத்தனை நாளும், தான் சோம சன்மா எனும் பிராம்மணனு யிருந்த தெல்லாம் போய், கடைசியில் தான் கேவலம் பூர்வஜன்ம வாசனை இன்னும் முற்றிலும் விலகாத ஓர் ஆட்டு ஜன்மமே என்று அப்பொழுது தான் அவனுக்குத் தெரிந்தது.

அதே சமயத்தில் பலி வாளும் அவன் கழுத்தில் விழுந்துவிட்டது!

✲

உலகத்திலே பெரிய பணக்காரர்

ஹைதராபாத் நைஜாம் மிக்க சிக்கனமானவர். ஆடம்பரத்தில் அவர் மனம் செல்வதில்லை. பட்டத்துக்கு வந்த பிறகு யானைமேல் ஏறியதே இல்லையாம். உடைகள் நைந்து கிழிந்து போகும்வரை அணிந்து கொண்டிருப்பாராம். மாதம் இருபது டாலருக்கு மேல் அவர் செலவழிப்பதே இல்லையாம். நைஜாமின் சொந்த வருமானம் வருஷம் ஒன்றுக்கு 2 கோடியே 10 லட்ச ரூபாய் என்று கணக்கிடுகிருர்கள். ஹைதராபாத் நைஜாம் தான் இன்று உலகத்திலேயே பெரிய பணக்காரர். அவரிட மிருக்கும் நகைகளை மாத்திரம் ஏறக்குறைய 150 கோடி பவுனுக்கு மேலே மதிப்பிடுகிருர்கள். இதைத் தவிர விலையுயர்ந்த வைரங்களும் முத்துக்களும் தங்கப் பாத்திரங்களும் அவரிடம் இருக்கின்றன. இருக்கும் சொத்தை வைத்துக் கொள்ள அவருக்கு இடமே போதவில்லை.

ஒருமுறை, தங்கக் கட்டிகளடங்கிய ஒரு வண்டியை அரண்மனைக்கு வெளியே நிறுத்திவைக்க நேர்ந்தது. அவருடைய மொத்த சொத்தை 200 கோடி பவுனுக்குக் கணக்கிடுகிருர்கள்.

இதுதான் வம்பு

காதிலே கேட்ட வம்பு வதந்திகளையெல்லாம் பிரமாதப்படுத்திப் பேசுபவனை, ஓர் ஆங்கில ஆசிரியர் பின்வருமாறு கேட்கிருர்:

"என்ருவது நள்ளிரவில் அடுத்த வீட்டு நாய் குரைப்பது கேட்டு நீர் விழித்திருக்கிறீரா? சற்று நேரத்துக்கெல்லாம் உமது நாயும் குரைக்க ஆரம்பித்து விடுகிறது. அதன்மேல் அக்கம் பக்கத்தி லுள்ள பல நாய்கள், 'வெள் வெள்' என்று ஒரே ஆரவாரம் செய்யத் தொடங்கி விடுகின்றன. ஆயினும், ஒரே ஒரு நாய்க்குத் தான், தன் குரைப்பின் காரணம் தெரியும். அந்த நாய்கூட, அநாவசிய பீதியால் வீணே மிரண்டிருக்கவும் கூடும்!"

பழந்தமிழர் வாழ்க்கை

ராவ்ஸாஹெப்
எஸ். வையாபுரிப்பிள்ளை

பண்டைக் காலத்துத் தமிழக வாழ்க்கையைக் குறித்துப் பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அவைகளை நோக்கினால் காதல் நிகழ்ச்சிகளும் வீர நிகழ்ச்சிகளும் அக்காலத்தில் நம் நாட்டில் நிரம்பியிருந்தன என்று தோன்றும். இவை இரண்டும் மிகவும் சிறந்தன என்றும் கவிதைக்கு மிகவும் பொருத்தமாயுள்ளன என்றும் எளிதில் ஒப்புக்கொள்ளலாம். ஆனால், இவைகள், பொதுப்பட நோக்குமிடத்து, பண்டைத் தமிழ் மக்களுக்கு மட்டும் தனித்துரிய செய்திகள் அல்ல. பல தேசத்துச் சரித்திரங்களிலும் ஆதி காலத்தில் இவ் விருவகை நிகழ்ச்சிகளும் உள்ளனவே; இவற்றைப் பற்றிய கவிதைகள் பல தேசத்து மொழிகளிலும் ஆதிகாலத்தில் காணப்படுவனவே. மேலும், இவை இரண்டும் தினசரி வாழ்க்கையாக அமையவும் மாட்டா. குறித்த ஒரு பருவத்தில்தான் இவை நிகழக்கூடியவை. ஆகவே, இவை இரண்டையும் நீக்கி, பண்டைக் காலத்துத் தமிழ் மக்களுடைய தினசரி வாழ்க்கையை அவர்கள் இயற்றிய பாடல்களிலிருந்து ஊகிப்பதே தக்கதாகும்.

மக்களின் தினசரி வாழ்க்கை அவர்கள் நாட்டின் சீதோஷ்ண நிலைமையைப் பெரிதும் பொறுத்தது. தமிழ்நாட்டில் கார், வாடை, முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பெரும் பொழுதுகள் உண்டென்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவைகள் வடமொழியிற் பிற்கால வழக்காய் நிலைபெற்ற ஆறு ருதுக்களையும் முறையே பின்பற்றுகின்றன. இவ் இலக்கண மரபை நீக்கிவிட்டு பொதுவாகப் பார்த்தால் வெயிற்காலம், மழைக்காலம், பனிக்காலம், என்ற மூன்று பருவ காலங்கள் தான் தமிழகத்தில் உண்டு. வெயிற்காலம் மிக நீண்டது; ஏனைய இரண்டும் மிகச் சுருங்கியவை.

முதலாவதாக, இந்தச் சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடி, தமிழ் மக்களின் உடை அமைந்திருந்தது. அவர்கள் பொதுவாக உடுப்பது இரண்டு ஆடைகள். (புறம்-189) பெண்பாலார் நீண்ட ஒற்றையாடை உடுத்து வந்தனர் என்று கொள்ளலாம். இவ் ஆடைகள் அவர்களது செல்வ நிலைக்கும் தகுதிக்கும் தக்கபடி தரந்தரமாய் இருந்தன. வறுமையினால் வருந்திய ஒருவனது ஆடை

வேற்று இழை நுழைந்த வேர்நனை சிதாஅர் (புறம்-69)

என்று கூறப்படுகிறது. இதற்கு மாறாக, செல்வம் நிரம்பிய மன்னர் முதலியோருடைய உடை

போதுவிரி பகன்றைப் புதுமலர் அன்ன அகன்றுமடி கலிங்கம் (புறம்-393)

என்று கூறப்படுகிறது.

தொழிலாளர்கள் ஒற்றை ஆடையைத் தாங்கள் செய்து வந்த வேலைக்கு ஏற்க உடுத்து வந்தார்கள். இதனைத் 'தற்றுடுத்தல்' என முன் காலத்து வழங்கினர். 'தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்' என்பது குறள் (1023). வீரர்களாயுள்ளோர் மார்பிலே கவசம் அணிந்து வந்தனர் (புறம் - 13). தற்காலத்தில் வழங்கும் உடுப்பு முதலியவை பண்டைக் காலத்தவர் அறியாத உடைகள். தமிழ் நாட்டிற்கு வந்த யவனர் முதலி

'பழந் தமிழரின் அன்றாட வாழ்க்கை'யைக் குறித்து, திரு. பிள்ளையவர்கள் 2-10-44ல் சென்னை அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பியதை விரித்து எழுதியுள்ள இந்தக் கட்டுரை, பழந் தமிழரின் நாகரிக மாண்பை நன்கு விளக்குகிறது.

யோரே சட்டை அணிந்திருந்தனர். அவரது சட்டை வகையை 'மெய்ப்பை' என்று வழங்கினர் (முல்லைப் பாட்டு, 60). பாதத்திற்குச் செருப்பு அணிவதும் அக்காலத்து உண்டு.

செருப்பிடைச் சிறுபரல் அன்னன்
(புறம்-257)

என ஒரு வீரன் குறிப்பிடப்படுகிறான். இச் செருப்பு 'அடிபுதை அரணம்' (பெரும்பாண்-69) என்றும் வழங்கியது. மல்யுத்தம் முதலியவற்றில் கிரேக்கர்கள் நிர்வாணமாயிருந்தார்கள் என்பர். அவ்வாறு தமிழ் மக்கள் ஆடையின்றி இருந்ததாகத் தெரியவில்லை.

இரண்டாவதாக, வீடுகளின் அமைப்பும் சீதோஷ்ண நிலையைப் பொறுத்ததேயாகும். மலைப் பிரதேசங்களில் புல் வேய்ந்த குடிசைகள் (புறம் 120) இருந்தன. சிலவற்றின் முற்றத்தில் பந்தர்களுமிடப்பட்டிருந்தன. அங்கே, யானைக்கன்று, மான் கன்று, முதலியவை சிற்சில சமயத்து வந்து அங்குள்ள சிறு குழந்தைகளோடு விளையாடுதலும் இனியதோர் காட்சியாக இருந்தது (குறுந்-394). மிகஎளியவர்களுடைய குடில்களை வளிமறை (புறம்-196) அதாவது காற்றை மறைப்பதற்குரிய இடம் என்று ஒரு செய்யுள் குறிப்பிடுகிறது. இச்சிற்றில்களுக்கும் தூண்கள் விடப்பட்டிருந்தன (புறம்-86). செல்வர்களுடைய மனை உயர்நிலை மாடமாய் முன் வாயில், புறக்கடை முதலிய உறுப்புக்கள் அமைந்ததாய் விளங்கியது. வாயிலில் இக் காலத்துப் போலப் பூத்தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன (புறம்-105). அரசரின் இருக்கை கம்பீரமான தோற்றத்தோடு அமைக்கப்பட்டிருந்தது. இதனைக் கோயிலெனச் சிறப்பாக வழங்கிவந்தனர். இக் கோயிலைப் பற்றிய பல விவரங்கள் நெடுநல்வாடையில் அழகுறக் கூறப்பட்டுள்ளன. மாடம் முதலியன சுடுமண்ணினால் தொழில் - திறன் விளங்க நன்ருகக் கட்டப்பட்டிருந்தன (புறம் - 14; பெரும்பாண்-405).

பேரில்லங்களில் தற்காலத்துப் போல நாற்காலி முதலியன இருந்ததாகத் தெரியவில்லை; கட்டில்கள் உண்டு. அவற்றில் 'நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை' (புறம்-50) அதாவது பூம்பள்ளி அமைக்கப்பட்டிருந்தது. எளியோர்கள் வீட்டில் தோலும் பாயுமே படுக்கையாக அமைந்தன (புறம்-317). குளிர்காலத்தில் தீக்கடை கோலினல் நெருப்பு உண்டு பண்ணிக் குளிர்காய்தலும் மலைப் பிரதேச முதலியவற்றில் உண்டு.

மூன்ருவதாக, வீட்டிற்குப் புறத்தேயுள்ள இடங்களிலும் தட்டுத்தடையின்றி மக்கள் பழகி வருதற்குச் சீதோஷ்ண நிலை அனுகூலமாயிருந்தது. தற்காலத்தில் பட்டண வாசிகள் தங்கள் பக்கத்தில் வசிக்கும் அயலார்களையே தெரிந்துகொள்வதில்லை. முற்காலத்திலே, அரசரும் குறுநில மன்னரும் மற்றைய மக்களும் தாராளமாக நெருங்கிப் பழகுவதற்குச் சௌகரியம் வாய்த்திருந்தது. ஊர்ப் புறத்தே பொது இடங்கள் இருந்தன. இப் பொதுஇடங்களில் அறம் உரைக்கும் மன்றம் கூடுதல் வழக்கம். மன்றம் என்னும் சொல்லுக்கே 'பொதுவிடம்,' 'நீதித் தலம்' என்ற இரண்டு பொருள்களும் உண்டு. இங்கே முதியோர்கள் சென்று சூது ஆடுதலும் (புறம் - 52), சிறுவர்கள் சென்று விளையாடுதலும், ஊர்க்குப் புதிதாய் வந்தோர்களும் இரவலர்களும் (புறம் - 375) தங்குதலும் சாதாரண நிகழ்ச்சிகள். அன்றியும் விழவு முதலியன கொண்டாடுதலும் இப் பொதுவிடத்தில் தான். பொதுவிடப் பழக்கத்தால் அரசர்களும் வள்ளல்களும் காட்சிக்கு எளியராயிருந்தனர். பரிசிலர்கள் அரசர் வாழுங் கோயில்களிலுங் கூடத் தாராளமாக உட்புகுந்து தங்கள் கவித்திறமை முதலியவற்றைக் காட்டி வந்தனர். இச் செய்தியைப் புறநானூற்றுப் பாடல்கள் பல உணர்த்துகின்றன. ஆனால், வாயில் காவலர் மூலமாக தமது வரவைத் தெரிவித்தல் வழக்கம். இதற்குத் தொல்காப்பியர் 'கடை நிலை' எனப் பெயரிட்டனர்.

இங்ஙனமாக, ஆடம்பரமின்றி எளிய வாழ்வு வாழ்ந்து வந்த பண்

டைத் தமிழர்கள் சூரியன் உதிக்கச் சில நாழிகைக்கு முன்பே அதிகாலையில் விழித்துவிடுவார்கள். இவ்வாறு விழிப்பதற்குக் கோழி கூவுதலும் பறவைகள் கத்துதலும் அனுகூலமாயிருந்தன.

ஒண்பொறிச் சேவல் எடுப்ப
ஏற்றெழுந்து (புறம்-383)

எனவும்

வெள்ளி தோன்றப் புள்ளுக்
குரலியம்பப், புலரிவிடியல்
(புறம்- 85)

எனவும் புறநானூற்றில் வந்துள்ளன. இக் கோழி முதலானவற்ருேடு போட்டியிட்டு அந்தணர்களும் அதிகாலையில் வேதத்தை ஓதி மக்களைத் துயிலுணர்த்தினர்.

நான்மறைக் கேள்வி நவில் குரலெடுப்ப
ஏம வின்றுயில் எழுதலல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும்போல
கோழியின் எழாதெம்பேரூர் துயிலே

இங்ஙனம் பரிபாடல் கூறுகிறது (மதுரை-2).

துயிலுணர்ந்தவுடன் நீராடுதல் இக்காலத்துக் கிராமாந்தரங்களிற் போலவே பண்டைக் காலத்தும் வழக்கமாயிருந்தது.

மணலினல் செய்த பாவைக்குப் பூக்களை அணிந்து, நீராடுகின்ற பெண்களோடு கைகோத்து, அவர்கள் சேர்ந்து நின்ற இடத்தே சேர்ந்து நின்று, அசைந்து நின்ற இடத்தே அசைந்து நின்று, கபடற்ற மனத்தராகிய அப் பெண்கள் கூட்டத்தோடு நீர்த்துறையிலே (நீரொடு நெருங்கித்) தாழ்ந்துள்ள மருதமரக் கிளைகளில் ஏறி, கரையிலுள்ளவர் திகைக்க, தண்ணீர் சிதர்ந்து பரவ, ஆழ்ந்த குளத்திலே ஒருவன் துடுமெனப் பாய்ந்து குளித்த செய்தியொன்று புறநானூற்றிலே (234) அழகாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது. பிற்காலத்தெழுந்த பாவை நோன்பு அதிகாலையில் நிகழ்ந்த இந்நீராட்டினை அடிப்படையாகக் கொண்டதே. நீராடும் பொழுது எண்ணெய் தேய்த்து நீராடுதலும் பண்டை வழக்கமே. கருவுயிர்த்த பெண்களுக்கு உரியதாகத் தொல்காப்பியர் கூறும் 'நெய்யணி மயக்கம்' இவ் வழக்கத்தை ஒட்டி எழுந்ததே.

நீராடுவதற்கு முன் நாம் காலையில் க்ஷவரம் செய்து கொள்ளுகிருேம். ஆனல், முன் காலத்தில் அதற்குரிய கருவிகள் அருகியே கிடைத்தன. என்ருலும் காட்டு மிராண்டியாக இருக்க முடியாதல்லவா? கத்திரியாகிய மயிர்குறை கருவியால் ஏகதேசமாக முகமயிர் முதலியவற்றைக் கத்தரித்துவந்தார்கள். பெரும்பாலும் மீசை தாடி வளர்க்க நேரிட்டது.

இதனை

குரூஉமயிர் மோவாய் (புறம்-257)
மையணற் காளை (புறம் 83)

முதலிய தொடர்கள் நன்கு புலப்படுத்தும். நீராடியபின் இளைஞர்களும் இளம் பெண்களும் இக்காலத்துப் போலவே முற்காலத்தும் தங்கள் தலைமுடியை மிகவும் பேணிவந்தார்கள். ஆண்கள் எண்ணை நீவிப் (புறம்-279) பதஞ்செய்தனர். அவர்கள் தங்கள் தலைமுடியைப் பூவினல் புனைந்துகொண்ட செய்தி புறநானூற்றில் பல பாடல்களிலே காணப்படுகிறது. பெண்கள் கூந்தலுக்குப் புகையூட்டி மயிர்ச் சாந்து பூசிக் கோதை புனைதல் மிகச் சாதாரணமான செய்தியேயாகும். ஆனல் நிலைக் கண்ணடி முன் நின்றுகொண்டு மணிக்கணக்காய்த் தலை முடியை அலங்கரித்தல் முற்காலத்தில் இல்லை.

பருவஞ் சிறிது மிக்கவர்கள், நீராடிய பின்னர், சிவாலயம் முதலிய இடங்களுக்குச்சென்று தெய்வங்களை வழி பட்டனர். 'முக்கட் செல்வன் நகர் வலஞ் செயற்கே' (புறம்-6) என்பது இவ்வகை வணக்கத்தை உணர்த்துகிறது. இதன்பின் சிலர் தங்கள் தங்கள் தொழில்மேல் சென்று வருவர். தொழில் இன்னதென்பது சாதியைப் பொறுத்தது. சாதியை விளக்கு மிடத்து அதைப்பற்றிச் சொல்லுகிறேன். சிலர் நாளங்காடியிலுள்ள கடைகளுக்குச் சென்று (மதுரைக் காஞ்சி - 430) வேண்டும் பண்டங்கள் வாங்கி வருவர்.

பின்னர், உச்சிப் பொழுதில் பகலுண்டி உண்ணுதல் வழக்கம். இதுதான் முக்கிய வுண்டி; தகுதிக்குத் தக்கபடி பலதரமாயிருந்தது. ஏழைகள் கூழ்சமைத்து வெந்தகீரை முதலியவற்றால் பசியாற்றி வந்தார்கள். செல்வர்கள் பாலை உலையாக ஏற்றி ஆக்கிய வெண் சோறும் நெய் முதலிய கலந்த சோறும் உண்டு மகிழ்ந்தனர். தாளிதத்தால் பக்குவம் செய்யப்பட்ட பலவகைக் கறிகளும் அவர்களுக்கு அருமையல்ல. நிணம் நிரம்பிய மாமிசத்தை அவர்கள் பெரிதும் விரும்பினார்கள். தாலத்திலே சோறு படைத்து அதனைச் சுற்றிப் பரப்பி வைத்த சிறு பொற்கலங்களிலே கறிகளைப் பெய்து உண்ணுதல் வழக்கம். ஈசலை மோரோடு கலந்து காய்ச்சிய புளிங்கறி ஓர் அரிய உணவுப்பொருள் (புறம்-117). முயல் முதலியவற்றைத் தீயிற் சுட்டும் அருந்தினர். இவைகளே யன்றி மதுவையும் அவர்கள் மிகுதியாகப் பானஞ் செய்தனர். இம் மதுவை மூங்கிற் குழாயிலே ஊற்றி வைத்துப் பக்குவப் படுத்தினர். இளம்பெண்கள் இதனைப் பொற்கலத்தில் வார்த்து ஏந்தி உண்பித்தனர். தங்கள் தேசத்திலிருந்து யவனர்கள் கப்பல் மூலமாகக் கொண்டுவந்த மது மிகவும் பாராட்டப்பட்டது.

யவனர் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி (56)

என்பது புறநானூறு. தற்காலத்தில் நாம் பெருமையுடன் குறிப்பிடுகிற சைவ உணவு என்பது பண்டைத் தமிழகத்தில் இல்லை. அந்தணரும் ஊன் உண்டும் மது நுகர்ந்தும் வந்தனர் (புறம்-113).

உண்டிக் காலத்தை அடுத்து மன்னர், வள்ளல்கள் முதலாயினோர் வீட்டு முற்றத்தில் பந்தரின் கீழ்ப் பாணன், புலவர் முதலியோர் பாடுதலும், விறலியர் முதலாயினோர் ஆடுதலும் நிகழ்ந்தன. அல்லீக் கூத்து முதலிய கூத்துக்களும் (புறம்-33) நாடகம் முதலிய (தொல், பொருள்) காட்சிகளும் நடைபெற்றன. பாணர் முதலியோரது திறமையை வியந்து அவர்களுக்குத் தக்க பரிசில் அளிப்பது வழக்கம். ஆனால், பாணர் முதலிய இரவலர்க்கு இன்ன பொழுது என்பதில்லை; எக்காலத்தும் சென்று வள்ளல் முதலியோரைக் கண்டு பரிசில் பெற்றனர். அதிகமான் நெடுமான் அஞ்சி என்ற வள்ளலை, 'பரிசிலர்க்கு அடையா வாயிலோயே' (புறம்-206) என ஒரு செய்யுள் அழைக்கின்றது. இவ் இரவலர்களுக்கு உணவு, கள், ஆடை முதலியவை அளிக்கப்பட்டன. அரசர் வீற்றிருக்கும் சபை நாளவை (புறம்-54) என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. அவர்கள் தங்கள் பெருந்தகுதிக்கு ஏற்க யானைகளும் ஆபரணங்களும் பரிசிலாக வழங்கினர். பொற்காசுகள் அளித்ததாகச் சங்கநூல்களில் ஓரிடத்தும் காணப்படவில்லை. அந்தணர்களும் இந்நாளவையிற் சென்று பொன் முதலியன பெற்றுவந்தனர்.

ஏற்ற பார்ப்பாருக்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச்
சொரிந்து (புறம்-367)

என்ற அடிகள் இதற்குச் சான்று.

முற்காலத்து மக்கள் குடும்ப வாழ்விலே பெரிதும் ஈடுபட்டிருந்தனர். கற்பு நெறியில் ஒழுகிய மனைவியையும் அவர்கள்பால் பெற்றெடுத்த புதல்வனையும் பெரிதும் பாராட்டினர். கற்புடைய மனைவியை 'மனைக்கு விளக்காகிய வாணுதல்' (புறம்-314) எனப் புகழ்ந்தனர்.

உயிரினும் சிறந்தன்று நாணே;
நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று

எனத் தொல்காப்பியரும் கூறினர்.

மயக்குறும் மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே
(புறம்-188)

என மக்கட் பெறுதலை இல்வாழ்க்கையின் பெருநோக்கமாகக் கூறினன் பாண்டியன் அறிவுடை நம்பி. வள்ளுவரும்,

மங்கலம் என்ப மனையாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள்-60)

என்றனர். ஆனால் 'ஒருவனுக்கு ஒரே மனைவி' என்ற கருத்துப் பொதுவாக

அக்காலத்து இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மனைவியர் பலர் இருந்தாலும் அவர் அனைவருடைய காதலுக்கும் கணவன் உரியவனாயிருந்தான். அவனும் தன் மனைவியரை அன்போடு பேணி வந்தனன். இருபுறமும் காதல் இல்லாத கலவி ஒரு கொடிய தீச்செயலாகவே கருதப்பட்டது.

மனைவியர் தம் கடமைகளை ஆர்வத்துடன் செய்து வந்தனர். கணவனுக்குத் தம் கைப்படச் சுவையாக உண்டியாக்கினர். இவ்வுண்டியை

ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால்
எமக்கென (தொல்-கற்பு-5)

கணவனும் நுகர்ந்து மகிழ்ந்தான். விருந்து போற்றுதலும் மனைவியின் சிறந்த கடமைகளுள் ஒன்று. வள்ளுவர் 'விருந்தோம்பல்' எனத் தனிப்பட ஓர் அதிகாரம் வகுத்துள்ளார். வீட்டில் கணவன் இல்லாத காலத்தும் மனைவியர் விருந்தினரை உபசரித்தனர் (புறம்-151).

கணவனைப் பிரிந்து இருந்தகாலத்துக் கூந்தலும் மேனியும் பேணுதபடி வாடி வதங்கி இருந்தனர் (புறம்-147). அவனுடைய வரவை எதிர்நோக்கிக் கலக்கமுற்ற செய்தியை ஒரு செய்யுள் கூறுகிறது (புறம்-41). இவ்வாறெல்லாம் அருமைப்பட்ட கற்பினை

கடவுள் சான்ற கற்பு (புறம்-183)
வடமீன் புரையுங் கற்பு (புறம்-122)

எனப் புகழ்ந்தனர். கணவனையன்றி வேறு தெய்வமில்லாத இக்கற்புடையாள் 'பெய்' என்றால், மழை பெய்யும்.

'தெய்வந் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை'
என்பது திருக்குறள்.

சிறப்பு வாய்ந்த இக் குடும்ப வாழ்க்கையில் புகுந்து மனைவியராக அமைவதற்கு முன்னே இளமைப்பருவத்திலே கழங்காடுதல் (36) முதலிய விளையாட்டுக்களில் பொழுதுபோக்கி வந்தனர். கன்னிப் பருவம் வந்ததும் காதல் அரும்பத் தொடங்கிற்று என்று கொள்ளலாம். அக் காலத்து வீரவாழ்வே பெரு வாழ்வெனக் கருதப்பட்டிருந்தமையால் இப் பெண்கள் வீரர்களையே பெரிதும் காதலித்து வந்தனர். பெருங்கோழி நாய்கன் என்ற கப்பல் வியாபாரியின் மகள் ஒருத்தி ஆமூர் மல்லன் என்ற வீரனைக் காதலித்த செய்தி புறநானூற்றில் (83) வருகிறது. ஒரு சார் குலத்திற் பிறந்த மகளிர் வீரத்தையே போற்றி வளர்த்து வந்தனர். இவர்களை மூதில் மகளிர் என்பர். தன் மகன் படைக்குச் சென்று புறங்கொடுத்தான் என்ற செய்தியைக் கேட்டு, அங்ஙனமாயின், அவனுக்குப் பால் சுரந்தளித்த என் நெஞ்சை அறுத்து எறிவேன் என்று கோபித்து, போர்க் களத்திற்குச் சென்று, அங்கே பிணங்களினிடையே உறுப்புகள் சிதைந்து கிடக்கின்ற தன் மகனைக் கண்டு, அவனை ஈன்றபொழுதினும் பெரிது மகிழ்ந்தாள் என்று இம் மூதில் மகளிருள் ஒருத்தியின் செய்தி கூறப்பட்டுள்ளது.

கணவன் இறந்ததும் சில பெண்கள் தீப்பாய்ந்து உயிர் துறந்தனர். சிலர் கைம்மை விரதத்தை மேற்கொண்டு உடலை வருத்தி உயிர் தாங்கி வந்தனர்; இவர் உட்கொள்ளும் உணவு வெந்த வேளைக் கீரையும் அல்லியரிசியும்தான். கூந்தலை மழித்துவிடும் வழக்கமும் அக்காலத்து உண்டு (புறம்-215). பெண்டிர்க்குப் பல்வகையான உரிமைகள் இருந்தபோதிலும் அவர்கள் கணவனுக்குரிய உடைமைப் பொருள்களுள் ஒன்றாகவே முற்காலத்தில் கருதப்பட்டு வந்தனர். இதற்கு விலக்காக உள்ளவர்கள் விறலி, பரத்தை முதலிய இனத்தவர்களே.

பண்டைக் காலத்து அடிமைகளும் இருந்தனர் என்று எண்ண இடமுண்டு. 'அடியேன் பாங்கினும் வினைவலர் பாங்கினும்' என்ற தொடரும் 'அடிமை' (தொல், சொல்-) என்ற சொல்லும் தொல்காப்பியத்தில் வந்துள்ளன. இவை, தக்க சான்றுகளே. எனினும் அடிமை என்பதற்குரிய

இயல்புகள் எல்லாம் அக் காலத்து இருந்தன என்று ஒருதலையாகத் துணியமுடியவில்லை.

தமிழர் சமுதாயத்தில் நால்வகைச் சாதிகளும் தொல்காப்பியர் காலத்திலேயே இடம்பெற்றுவிட்டன. அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்ற வருப்பினரை முறையே குறித்துத் தொல்காப்பியச் சூத்திரங்கள் உள்ளன. இம் முறையையும் சொற்களையும் நோக்குமிடத்து வேளாளர் என்ற சொல் தமிழ்ச் சொல் என்பதில் ஐயந் தோன்றுகிறது. 'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்' என்ற புறநானூற்றுப் பகுதியும் நால்வகை வருணத்தையே குறிக்கிறது. இவ் வருணங்கள் சமுதாயத்தின் அஸ்திவாரமென்று சொல்ல முடியாது. தொழிலாற் பெயர் பெற்ற பல சாதிகளும் முற்காலத்து இருந்தன. கொல்லன், குயவன், வேட்டுவன், இடையன், மல்லன், தச்சன், குறவன், பாணன், கடம்பன், துடியன், பறையன், புலையன் முதலிய சாதிப் பெயர்கள் புறநானூற்றுல் தெரிய வருகின்றன. இவர்களுள் புலையர்கள் அபரக் கிரியைகளை நடத்திவந்தனர் என்று சில செய்யுட்களால் அறிகிறோம் (புறம் 360).

நால்வகைச் சாதிகளில் அந்தணர் சிறப்பாகப் போற்றப்பட்டனர். அரசன் வணங்கியது இவர்களையே.

'பார்ப்பார்க்கு அல்லது பணிபு
அறியலையே'

என்பது பதிற்றுப் பத்து. இவர்கள் அரசர்க்கு வேண்டிய யாகங்களைச் செய்துவந்தனர் (புறம்-224). அரசன் பொருட்டுத் தூது சென்றவர்களும் இவர்களே (புறம்-305). சமயத்தையும் கல்வியையும் கற்றுப் பேணிவந்தவர்களும் இவர்களே. இவர்களுக்குத் துன்பு இழைத்தவர் பெரும் பாவிகளெனக்கருதப்பட்டனர் (புறம்-34). நாடுகள் முதலியன கொடுத்து அரசர்கள் இவர்களைப் பாதுகாத்தனர் (புறம்-122). இவர்களும் அரசு பாரந் தாங்கி ஆட்சி புரிந்தனர். 'அந்தணர்க்கு அரசு வரைவின்றே' என்பது தொல்காப்பியம். இவர்கள் இரவலராயிருப்பதும் முற்காலத்துத் தவறென்று கருதப்படவில்லை.

நாடு காவல் செய்யும் அரசர்களைக் குறித்துத் தொல்காப்பியமும் திருக்குறளும் பல செய்திகளைத் தெரிவிக்கின்றன. ஆனல் இவைகள் அரசனுக்கு இருக்கவேண்டும் உத்தம இலக்கணங்களென்றே கொள்ளத் தக்கன. புறநானூற்றில் வருவன தமிழ் அரசர்களுக்குத் தனித்து உரியன. ஒரு செய்யுளில் (புறம். 29) ஓர் அரசன் ஒவ்வொரு நாளும் செய்த செயல்கள் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. பாணர்களால் சூழப்பெற்ற நாளோலக்கத்து இருத்தல், பின்பு மகளிரோடு சிறுதுயில் கொள்ளுதல், முரசொலிக்கக் கொடியோர்களைத் தண்டித்து நல்லோர்களைப் பாதுகாத்து நீதி வழங்குதல், பின்னர் தமது படை மக்களுக்கு உதவியாற்றுதல்: இச்செயல்கள் முறையே நிகழ்ந்து வந்தன.

அக்காலத்து உத்தம வாழ்வு வாழ்ந்த ஒரு குறுநில மன்னன் செய்கைகளை ஒரு செய்யுள் விளக்கமாகத் தெரிவிக்கின்றது. அச்செய்யுள் வருமாறு:

தொடியுடைய தோள்மணந்தனன்
செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை உயர்பு கூறினன்
வலியர் என வழிமொழியலன்
மெலியர் என மீக்கூறலன்
பிறரைத் தான் இரப்பு அறியலன்
இரந்தோர்க்கு மறுப்பு அறியலன்
வேந்துடை அவையத்து ஓங்கு புகழ்
தோற்றினன்
வருபடை எதிர்தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்
பாணுவப்பப் பசிதீர்த்தனன், ஆங்குச்
செய்பவெல்லாம் செய்தனன்

(புறம். 239)

'காதலுக்குரிய இளம்பெண்ணை மணம் புரிந்தான். தன் பகைவர்களை வேரறுத்தான்; நண்பர்களை மேம்படுத்தான். தன்னைக் காட்டிலும் வலியவரென்று ஒருவர்க்கும் பின்மொழிந்து சென்றதில்லை; மெலியவரென்று தன் பெருமையைக் காட்டியதுமில்லை. பிறரை இரந்து ஒன்று

கேட்டதில்லை; தன்னிடம் இரந்து வந்தவர்க்கு மறுத்ததும் இல்லை. அரசவையிலே தன் புகழ் தோன்றச் செய்தான். படையை எதிர்த்துப் போர் புரிந்து புறங்காட்டி யோடச் செய்தான். தன்னிடம் வந்த பாணர்கள் மகிழும்படி பசி தீர்த்தான். இவ்வாறாக, செய்ய வேண்டுவன வெல்லாஞ் செய்தான்' என்றது அச் செய்யுளின் கருத்து.

உத்தம லட்சியங்களும், பெரு நோக்கங்களும், தத்துவ விசாரணைகளும் இதில் இல்லை. ஆனால், உண்மையிலேயே இது அழகிய வாழ்வு அல்லவா?

அரசர்களும் பிற வீரர்களும் போரிலன்றிப் பிறவாறு சாக நேரிடின் அவர்களைத் தருப்பையில் கிடத்தி வாளால் கீறி அடக்குதல் வழக்கம் (புறம்-93). போரிலே பட்டோர்களுக்குக் கல் நட்டுப் பெயரெழுதி அதனைப் பரவுதல் வழக்கமாக இருந்தது. புறநானூறும், தொல்காப்பியமும் திருக்குறளும் இதற்குச் சான்றுகளாம்.

'வைசிகன் பெறுமே வாணிக
வாழ்க்கை'

என்பது தொல்காப்பியம். நில வழியாகவும் நீர் வழியாகவும் இவர்கள் வாணிகம் நடத்திவந்தனர். நீர் வழியாக மரக் கலங்களில் அயல்நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பண்டங்களோடு திரும்பிய செய்திகள் புறநானூற்றிலே காணலாம். இவர்களுள் 'வேத வாணிகர்' எனப்படுவோர் இயல்புகள் பட்டினப் பாலை (207-212) யில் தொகுத்துக் கூறப்படுகின்றன :

'நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்'

என்பது அப் பகுதி.

'வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி,

என்பது தொல்காப்பியம். வேளாளரை உலகமாகிய தேரைத் தாங்கி அது செல்லுதற்கு வேண்டும் அச்சாணி என்று ஒரு குறள் கூறும். இத் தொழிலே அனைத்துவகைத் தொழிலிலும் சிறந்த தொழிலாகக் கொண்டிருந்தனர்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்
றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்
(குறள்-1033)

என்பது திருக்குறள். புறநானூறும்

பொருபடை தரூஉம் கொற்றமும்
உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன்
பயனே (35)

என்று உழுத சாலின் பெருமையை விளக்குகிறது. மேற் கூறியவை போன்ற சாதித் தொழில்களிலே தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் நாடோறும் ஈடுபட்டு வந்தனர்.

பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் வைதிக சமயத்தையும் அருக பௌத்த சமயங்களையும் போற்றி வந்தனர். அந்தணர் வேள்வி இயற்றுதலும் பொதுமக்களில் ஒருசாரார் முக்கட் செல்வன் ஆலயத்தை வலஞ் சூழ்ந்து வந்ததும், திருமால் முதலிய தெய்வங்களின் வழிபாடும் வைதிக சமயம் பரவியிருந்ததைக் குறிக்கின்றன. அருகசமயம் முதலியன வைதிக சமயத்தோடு வாதப் போர் புரிந்து வந்தன.

வாத்தியாயர் வேலை

உபாத்திமைக் கலையைப் பற்றி, ஒரு வாத்தியார் மிகச் சுருக்கமாய்க் கூறுவதாவது: "மாணவர்களுக்கு நீங்கள் சொல்லப் போவது இன்னதென்று, முதலில் சொல்லுங்கள். பிறகு, அதைச் சொல்லுங்கள். பின்பு, நீங்கள் சொன்னது இன்னது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டே யிருங்கள்."

இகல் கண்டோர் மிகல் சாய்மார்
மெய்யன்ன பொய் உணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
(புறம் - 166)

என்றது புறநானூறு. தொல்காப்பியரும் திருவள்ளுவரும் அருக சமயத்தவர்கள். ஆரிய தெய்வங்களையே யன்றி முருகன் முதலிய நாட்டுத் தெய்வங்களையும் முற்காலத்தோர் போற்றினர். பேய்கள், பூதங்கள் முதலியவற்றையும் வணங்கி வந்தனர். விதி என்று சொல்லப்படுவதனை முற்றும் நம்பி வந்தனர். இவ்விதியைப் 'பால்' என்ற பெயரால் அக்காலத்து வழங்கினர். மறுபிறவி உண்டென்றும் அக்காலத்து மக்கள் நம்பினர். (புறம்-5, 9, 18, 50, 71) இக்கொள்கைகளைத்தவிர,வேறு தத்துவ ஆராய்ச்சியிருந்ததாகப் புலப்படவில்லை. இவைகளும் தினசரி வாழ்க்கையைப் பல வழிகளில் நெறிப்படுத்தின.

சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாதிருந்த கல்வி அக்காலத்தும் மிகவும் போற்றப்பட்டு வந்தது. கல்வியாளர்கள் நன்கு மதிக்கப்பட்டனர். 'பிச்சைபுகினும் கற்கைநன்றே'யென அதன் பெருமையும் இன்றியமையாமையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன (புறம்-183). சாகுமளவும் கல்வி கற்கவேண்டும் என்பது பூர்வ காலத்து லட்சியம்.

யாதானும் நாடாமால் ஊராமால்
என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு
(குறள் - 397)

என்பது திருக்குறள். மனைவியைப் பிரிந்து சென்றும் மூன்று ஆண்டுகள் கல்வி கற்பது மரபு என்பது தொல்காப்பியம். ஆண்களைப் போலவே பெண்களும் கல்வி கற்றுப் புலவர்களாக விளங்கினர். ஆனால் கல்வி கற்றற்குரிய பொது நிலயங்கள் முற்காலத்து இருந்தனவாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தத்தம் முயற்சியினாலே ஆசிரியர்களை அடுத்துக் கல்வி கற்று வந்தனர் என்றே கருதவேண்டும். இக்கல்வியறிவுபற்றியும் தமிழ் மக்கள் நாள்தோறும் முயன்று வந்தார்கள் என்று ஊகிக்கலாம்.

இங்ஙனமாகப் பண்டைத் தமிழ் மக்களது அன்றாட வாழ்க்கை எளிமையும் மேன்மையுமுடையதாய், சிறிதும் கபடற்றதாய், குடும்ப நெறியில் உளம் கூர்ந்ததாய், பொருளீட்டி இன்புறுதலில் ஈடுபட்டதாய், உபகாரஞ் செய்தலை மேற்கொண்டதாய், மேலுலகத்தும் பயன்படவல்லதாய் அமைந்து, தமிழகத்துக்குப் பெரும் புகழ் விளைத்து வந்தது.

✲

ஒரு புதிர்

ஓர் ஆங்கிலேயர், நியூ யார்க் நகரத்துக்குச் சென்றார். அமெரிக்க பஸ் டிரைவர் ஒருவனுடன் பேசிக்கொண்டிருந்தார்.

"மிஸ்டர்! இதோ ஒரு புதிர் போடுகிறேன். விடுவியுங்கள், பார்க்கலாம். என் தாயாருக்கு ஒரு குழந்தை. அது என் சகோதரியல்ல; என் சகோதரனுமல்ல. பின்னே யார்?" என்று அந்த டிரைவர் கேட்டான்.

ஆங்கிலேயர் வெகுநேரம் யோசித்துப்பார்த்தார். ஒன்றும் புரியாமல் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு, "நீங்களே விடையையும் சொல்லுங்கள்" என்றார்.

டிரைவர் வாய் நிறையச் சிரித்துக்கொண்டே, "அதுவா, மிஸ்டர்? அது நான் தான்" என்றான்.

இரண்டு துன்பங்கள்

வாழ்க்கையிலே இரண்டு துன்பங்கள் நேரிடுகின்றன. ஒன்று நீங்கள் இச்சித்த பொருளை அடையாமல் நிற்பது: மற்றது, அதை அடைந்து விடுவது.

—பெர்னார்ட் ஷா

புத்தக உலகம்

நட்சத்திரக் குழந்தை முதலிய கதைகள் : மொழிபெயர்ப்பு : டி. ஆர். சர்மா. வெளியிட்டோர் : ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி. விலை : கிளேஸ் பதிப்பு 1-4-0. ஆண்டிக் பதிப்பு 1-8-0.

மேல்நாட்டு ஆசிரியர்கள் மூவர் எழுதிய மூன்று கதைகள் இந்த நூலில் அடங்கியிருக்கின்றன. இந்த மூன்று கதைகளுள், கிளாரா விபிக் என்ற ஜெர்மானிய ஆசிரியர் எழுதிய 'பால்காரப் பையன்' என்ற கதை உருக்கமானதாகும். ஸ்டிரிண்ட் பர்க் எழுதிய 'காதலும் வாழ்க்கையும்' ரசமாயிருக்கிறது. மொழிபெயர்ப்பு எளிய நடையில் அமைந்திருக்கிறது.

பிலிப்பைன் வீழ்ச்சி : ஆசிரியர் : ஆ. நடராஜன். விற்பனை உரிமையாளர் : சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலை அணா நாலு.

அமெரிக்கப் பிடியிலிருந்து விடுபட, வீர சுதந்திரப் போராட்டம் நடத்திய மக்கள் பிலிப்பினோக்கள். அவர்கள் சுதந்தரம்பெறும் தறுவாயில், அதைக் கிட்டாமல் வந்து விழுங்கியது ஜப்பான். சில தினங்களுக்கு முன், அமெரிக்கப் படைகள் மீண்டும் பிலிப்பைனில் போய் இறங்கியிருக்கின்றன. இச்சமயம் பிலிப்பைனின் பூர்வ வரலாறும், ஜப்பானியரிடம் அது விழுந்த கதையும் ரசமாயிருக்கும். அதை யெல்லாம் உணர்ச்சியோடும் விறுவிறுப்பாகவும் ஆசிரியர் வரைந்துள்ளார்.

விஜயம் : ஆசிரியர் : வ. ரா. வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை : ரூ. 3-8-0.

விஜயத்துக்கு, பாலியத்திலே, வேண்டாக் கலியாணம் நடக்கிறது. கணவன் காலமாகிறான். அவள் ஒரு வாலிபனின் காதலில் சிக்குகிறாள். விஜயம் கருத்தரித்ததும், அந்தப் பதர் கைவிட்டு விடுகிறான். இதுதான் கதைச் சுருக்கம்; கதையே இவ்வளவுதான். விஜயம் தன் கதையைத் தானே சொல்லுகிறாள். சம்பிரதாயமான முறையில் அவள் கதை சொல்லவில்லை. கதை நிகழ்ச்சிகளை அவள் அலங்காரமாய் நகாசு செய்து, உணர்ச்சிக் குழைவுகளும், திடுக்கிடும் சம்பவங்களும், எதிர்பாராத விந்தைகளுமாய்ச் சொல்லவில்லை. கதையை விட, வாழ்க்கையைப்பற்றி அடித்தும், அலசியும், பளீர் பளீர் என்று ஜொலிக்கும் தத்துவங்களையே அவள் தொடர்ந்து கூறுகிறாள். பெண்ணை ஆண் இழிவுசெய்யும் இந்தச் சமூக வாழ்க்கையால் நேரும் விபரீதங்களை, மறுக்க முடியாத சொல் வன்மையோடு அவள் எடுத்துரைக்கிறாள். அவள் ஓர் அபூர்வமான பெண். அவளுடைய அறிவுக் களஞ்சியம் நம்மைப் பிரமிப்படையச் செய்கிறது; நம் சிந்தையைக் கிளர்கிறது. வெறுங் கதைகள், ஒரு முறை படித்ததும் சலித்துவிடும். வ. ரா. வின் சிருஷ்டியான விஜயத்தின் கதை, அதன் கருத்துக்களின் செறிவால், எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாது. ஏனெனில், அதிலே கதை நம்மை ஆகர்ஷிக்கவில்லை; ஒளிவிடும் கருத்துக்களே ஆகர்ஷிக்கின்றன.

கனகாம்பரம் (முதலிய சிறுகதைகள்) : ஆசிரியர் : கு. ப. ராஜகோபாலன், பி. ஏ. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை : மலிவுப் பதிப்பு ரூ. 2-0-0 ; உயர் பதிப்பு ரூ. 2-8-0.

மனிதனின் இளகிய மன உணர்ச்சிகளை அற்புதமாய்ச் சித்தரிப்பவர் காலஞ்சென்ற கு. ப. ரா. இந்தத் தொகுதிகளிலே உள்ள இருபத்தொரு சிறு கதைகளிலும், அதற்குப் பரிபூர்ண அத்தாட்சி காணலாம். மென்மையான உணர்ச்சிகள் என்ற ஒரே நூலிழைகளைக் கொண்டு, விதம் விதமான கதைகளை அவர் புனைந்

திருக்கிறார். மனத்தைக் குழைத்து இனிப்பூட்டும் சலிக்காத கதைகள். இந்த இரண்டாம் பதிப்பு வெளிவந்திருப்பதே, அவர் கதைகளின் ரசனைக்குச் சிறந்த சான்றாகும். அல்லயன்ஸ் கம்பெனியார், வ. ரா. வின் விசேஷ முகவுரையோடு, மிக அழகான முறையில் இதனை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆசிய ஜோதி : பாடியவர். கவிஞர் சி. தேசிகவிநாயகம் பிள்ளை. வெளியிட்டோர் : புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. 2-0-0.

'ஆசிய ஜோதி எனும் புத்தர் போதம், அழகு தமிழில் சொன்னான் அது போதும்' என்று நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை இதை ஏற்கெனவே பாராட்டியிருக்கிறார். மகான் புத்தரின் சரித்திரத்தை, எளிய சொற்களில், இனிய நடையில், உள்ளம் நெகிழும் முறையில், கவிதை நயங்கள் செறிய, கவிஞர் இந்த நூலை இயற்றியிருக்கிறார். கருணைக்கடலான புத்தனின் இந்தச் சரித்திரம், ஒவ்வொரு தமிழன் கையிலும் இருக்க வேண்டும். இந்த இரண்டாம் பதிப்பு வெளிவந்தது மட்டுமல்ல; இன்னும் பல பதிப்புகள் வெளிவந்து, நாடெங்கும் இந்நூல் பரவவேண்டும். அத்தகைய அரிய பொக்கிஷம் இது.

பக்தி மார்க்கம் : அருளியவர் : சுவாமி பரமானந்தர். வெளியிட்டோர் : ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை. விலை அணா எட்டு.

சுவாமிகள், பக்திமார்க்கம் சம்பந்தமாக, தம் சிஷ்யர்களுக்கு எழுதிய பல கடிதங்களில், செய்த உபதேசங்களின் திரட்டு இது. பக்தி, பக்திக்கு வேண்டிய பரிசுத்தம், சலியாத மன உறுதி, பயமின்மை, சரணாகதி ஆகிய தத்துவங்களை, மிக அழகாக அவர் எடுத்து, உபதேசிக்கிறார். பக்தி மார்க்கத்தின் சாதகர்களுக்கு, மிகவும் பயன்படக்கூடிய ஒரு சிறந்த புத்தகம் இது.

மின்னும் நட்சத்திரம் : ஆசிரியர் : சிரஞ்சீவி. வெளியிட்டோர் : கமலா பிரசுராலயம், பிராட்வே, சென்னை. விலை : ரூ. 2-0-0.

புது முறையில் எழுதப்பட்டிருக்கும் ஒரு நாவல். திறமையிருந்தும் வறுமையில் வாடும் எழுத்தாளன் நவீனன்; அவன் மனைவி; நவீனனை முன்னுக்குக் கொண்டுவர முயலும் பத்திரிகாசிரியன் சரண் — இந்த மூவரும்தான் முக்கிய பாத்திரங்கள். நவீனன் எழுதிய புத்தகத்தின் பெயரே மின்னும் நட்சத்திரம். அந்த நாவல் புகழும் பணமும் கொண்டு வரும் சமயம்வரையில், காத்திருக்க முடியாமல் எங்கோ ஓடிச் சேனையில் சேர்ந்துவிடுகிறான் நவீனன். வெட்டு வெட்டான சம்பாஷணைகள், கடிதங்கள், பத்திரிகைக் குறிப்புகளின் மூலம் கதை புனையப்பட்டிருக்கிறது. ரசமும் உணர்ச்சியுமுள்ள முறையில் அமைந்திருக்கிறது.

பண்டிதமணி : ஆசிரியர் : விசு. திருநாவுக்கரசு. வெளியிட்டோர் : தமிழன்னை நிலையம், கீழராஜவீதி, புதுக்கோட்டை. விலை : ரூ. 1-4-0.

'செந்தமிழும் ஆரியமும் முற்றவுணர் நுண்மதியான்' என்று, அரசஞ் சண்முகனாரால் பாராட்டப்பட்டவர் மகிபாலன்பட்டி பண்டிதமணி மகாமகோபாத்தியாய கதிரேசன் செட்டியார். அவருடைய வாழ்க்கைச் சித்திரம் இந்த அழகிய சிறு நூல். பண்டிதமணி ஆரியத்திலும் தமிழிலும் வல்ல புலவர். தனவணிக குலத்தில் பிறந்தவர். புதுமைக்கும் பழமைக்கும் இடையிலே வாழ்பவர். பல வடமொழி நூல்களைப் புலமை மிக்க தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருப்பவர். சைவத் திருவாளர். சொற்சாதுரியம் மிக்கவர். நேர்த்தியான எளிய தமிழில், பண்டிதமணியின் வரலாற்றுச் சுருக்கத்தையும், குணநிச்சய விளக்கத்தையும் ஆசிரியர் இந்த நூலில் ரசமாக எழுதியிருக்கிறார்.

உபநிஷத்து ரகசியம் : ஆசிரியர் : யோகி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர் : பாரதசக்தி நிலையம், புதுச்சேரி. விலை : ரூ. 1-8-0.

இந்து வேதத்தின் சிகரமாக மதிக்கப்படுபவை உபநிஷத்துக்கள். அவை பூர்விக முனிவர்கள் கண்டருளிய

ஞானச் சுரங்கங்களாகும். பிரம்ம வித்தை, அவற்றிலே உபதேசிக்கப் படுகிறது. ஈசம், கேனம், கடம், பிரச்னம் இந்த நான்கு முக்கிய உபநிஷத்துக்களையும், ஆசிரியர் இங்கே தமிழ்ப் படுத்தித் தந்திருக்கிறார். படிப்பவர்க்கு எளிதில் புரியுமாறு, முன்னுரை, குறிப்புகளோடு இது இயற்றப்பட்டிருக்கிறது. இறுதியில், இதர உபநிஷத்துக்களின் சாராம்சமான ஞானமணிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஞான மார்க்கத்தில் பற்றுடைய தமிழர்களுக்கு மிக்க உதவியான ஒரு நூல்.

துருக்கி : ஆசிரியர் : எஸ். எஸ். மாரிசாமி. வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி. விலை : ரூ. 1—0—0.

சென்ற யுத்தத்தில் ஜெர்மனியோடு சேர்ந்து நிலைகுலைந்த ஐரோப்பிய ராஜ்யம் துருக்கி. அந்த யுத்தத்துக்குப் பிறகு, வீரன் கெமாலின் ஓயாப் போராட்டத்தின் பலனாக, பழைய கோனாட்சி கவிழ்ந்து, அயல் பிடிகளினின்றும் விடுபட்டு, நவீனத் துருக்கிக் குடியரசு பிறந்தது. துருக்கி, இந்த யுத்தத்திலே நடு நிலைமை வகிக்கிறது. இந்த வரலாறுகளை, சுருக்கமாகவும் ரசமாகவும் ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை : ஆசிரியர் : யோகி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர் : அன்பு நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூ. 0—12—0.

'பிள்ளைத் தமிழ்' என்றால், மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் 'அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்' தான் முன்னிற்கும். அது ஓர் அற்புதமான கவிதை. தேனொழுகும் சொற்கள்; கவிநயம் நிறைந்த கற்பனை; கொஞ்சும் சந்தம். அது படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுதமாகும். அந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கினார். அவர் மேலும் பல நூல்கள் இயற்றியுள்ளார். அவருடைய வரலாற்றை, ரத்தினச் சுருக்கமாக ஆசிரியர் வரைந்துள்ளார்.

✲



EASTERNS

தமிழ் நாடு ஏஜெண்டுகள் :—
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்
மேலக்கோபுர வீதி - மதுரை

பி.ஏ.ராஜு செட்டியார் & பிரதர்
வைரம், தங்கநகை வியாபாரிகள்
கோயமுத்தூர்
M.S.DORAI

பூர்ணப் பொலிவு

அஜார்தா குகை ஓவியங்கள் பெண்மை அழகின் பூர்ணப பொலிவைக் காட்டுகின்றன. வீட்டிலே பெண் இருந்து தேயிலை வழங்கும்போது குடும்பத்திலே அதுபோன்ற மனத்திருப்தி ஏற்படுகிறது. பானம் அருந்துகிறவர்கள் உல்லாசமாகவும் மகிழ்ச்சியுடனும் அருந்துவதற்கு அவள் அருகிருப்பதே காரணம். குடும்பத்தில் எல்லோரும் ஒருமித்திருந்து தேயிலை அருந்துங்கள். அதுவே இன்பம்.

★

டீ தயாரிக்கும் முறை:- சுத்தமான தண்ணீரைக் கொதிக்கவைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவந்க்கும் ஒரு டீஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப்போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்

குடும்பத்திற்கு ஏற்ற

ஒரே பானம் இந்தியன் டீ

இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 200R

Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan

8

DEC 19..

518

தாரண ஹூ
கார்த்திகை மீ

-/8

சக்தி

மாத வெளியீடு

11—2



கதை

மருதையின் - கடிதம்

விதியின் - விளையாட்டு

என் காரியதரிசி

கவிதை ஜவரன்

கட்டுரை

தாலாட்டும் - பள்ளும்

பெண் கல்வி - இது சரியா ?

சுய நிர்ணய - உரிமை

வரலாறு

வென்றவரும் - தோற்றவரும்

மனிதகுல - மாணிக்கம்

பாடல்

எலிபெண்டா - குகையிலே

குறிப்பு

எழுத்தும் - எழுத்தாளரும்

புத்தக உலகம்.

காலச் சுழல்

கதம்பம்

பறித்த பூக்கள்

நெ. 111, நயினியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்

S.R.B. MUTHUKRISHNA IYER
SRB
MARK OF QUALITY

கியாதிபெற்ற ஜவுளிக்கடை

பொங்கலுக்குப் புதிய ஆடைகள்

எமது சொந்தத் தரியில் நெய்த
முதல் தரம் பட்டு புடவைகள்
கொல்லேகாலம் முருக்குப்பட்டில் தயார்செய்யப்பட்டவை. நீண்ட உழைப்பிற்கும் கெட்டிச் சாயத்திற்கும் உத்தரவாதமுள்ளவை.
12, 16, 18, 19 முழங்களில் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம்

S.R.B. முத்துகிருஷ்ண அய்யர்

(பழைய விலாசம்: S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்)

111, நயினியப்ப நாயக்கன் தெரு,
பி. டி. மதராஸ்.
போன்: 2314 Tel: BALMO

235, கீழ மாரெட் வீதி,
மதுரை.
Tel: MUTHUCO

R.B.S

→ ஊசிகளின் புதிய விலைகள் ←

"எச்.எம்.வி." ஹைபிடெலிடி
10 ஊசிகளடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ. 1/8
"எச்.எம்.வி." எஃகு ஊசிகள்
200 ,, பெட்டி 1-க்கு ரூ. 1/8
"ட்வின்" எஃகு ஊசிகள்
200 ,, ,, 1-க்கு ரூ. -/14

எல்லா
எச். எம். வி.
கிராமபோன்
வியாபாரிகளிடமும்
ரிகார்டுகள்
கிடைக்கும்

SAMUEL

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

சிறந்த சங்கீதம் :: சீர்ய ஒலிப்பதிவு

கண்கூடாகக் காண்பதையே நம்புகிறோம்



விலைவாசிகள் இறங்குவதனால் எதிர் காலத்தை முன்னிட்டுச் சேமித்து வைப்பதே புத்திசாலித் தனம் என்று தெளிவாகிறது.

சென்ற வருஷம் ஒருவரும் பணத்தைச் சேமிக்காதிருந்தால், கண்டிப்பான விலைக் கட்டுப்பாட்டு விதிகளை அரசாங்கத்தார் பிறப்பிக்காதிருந்தால், விற்பனைக்கு வரும் பொருட்களை ஏராளமாக உற்பத்தி செய்யாதிருந்தால், சென்ற வருஷம் இருந்ததைப் போலவேதான் இன்றும் தங்கு தடையின்றி விலைகள் உயர்ந்திருக்கும்.

ஆனால், தனிப்பட்டவர்கள் சேமிப்பின் பலனாகவும், அரசாங்கத்தாரின் நடவடிக்கைகளின் பலனாகவும் விலைவாசிகள் இறங்கிவிட்டன. முட்டாள்தனமாக, நகைகள், சொத்துக்கள், பண்டங்கள், சாமான்கள் ஆகியவற்றை வாங்கியவர்கள், அவற்றின் மதிப்பு தம் கண் முன்னே குறைவதைக் காண்கிறார்கள்.

இதோடு நின்று விடவில்லை. விலைவாசிகள் இன்னும் குறையும். புத்திசாலிகளாயிருங்கள். விலைவாசிகளின் வீழ்ச்சி உங்களுக்கு தீங்கிழைக்கும்படி விடாதீர்கள்.

கீழ்க்கண்டவை முன்போலவே இப்போதும் மிகச்சிறந்த முதலீடுகளாகும். விலையில் ஒவ்வொரு அணா குறையும்போதெல்லாம், இந்த முதலீடுகளின் மதிப்பு உயருகிறது:—

கூட்டுறவு சங்கங்கள், இன்ஷூரன்ஸ், சேமநிதி, தபாலாபீஸ் சேமநிதி, அரசாங்கக் கடன் பத்திரங்கள், நேஷனல் சேவிங்ஸ் சேர்டிபிகேட்டுகள்.

இன்பப் பொருட்களை நீக்குங்கள். புதுத் துணி, புதுத்தட்டுமுட்டுச் சாமான்கள், புதிய வீடு, சைகிள், மோட்டார் கார் முதலியவற்றை வாங்குவதற்கு, யுத்தத்திற்குப் பிறகு ஏராளமான சந்தர்ப்பங்கள் உண்டு. இப்போது பணத்தைச் சேமித்து அப்போது பணத்தைச் செலவு செய்யுங்கள்.

உங்களால் இயன்றவரை மிச்சப் படுத்துங்கள்.

மிச்சப் படுத்தியதை முதலீடு செய்யுங்கள்.

தேசியப் போர்முனையார் விடுக்கும் தேசீய வேண்டுகோள்

AAA 1114 TM

நான்கு வருஷங்களுக்குமுன் அநேகமாய் ரஸ்தாக்களுக்கு பிட்டுமன் (மண்தைலம்) உபயோகிக்கப்பட்டது.

இன்று கிடைக்கக் கூடிய எல்லா பிட்டுமன்னும் (மண் தைலமும்) முக்கிய ரஸ்தாக்களுக்கும், ஏரோடிரோம் ரஸ்தாக்களுக்கும் முக்கிய ரஸ்தா பாதுகாப்புக்காகவும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கிறது. நேச நாடுகளின் யுத்த முயற்சியின் நன்மைக்காக இவைகள் தான் முதலில் கவனிக்கப்பட வேண்டும். காலம் வரும் போது பர்மாஷெல் கம்பெனியார் இந்தியா முழுவதற்கும் பிட்டுமனும் (மண்தைலம்) மற்ற எல்லா எண்ணெய்களும் தேவையான அளவிற்கு கிடைப்பதற்கு வேண்டிய முயற்சி செய்வார்கள்.

பர்மாஷெல் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.

BSGK67TM



தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

தாரண
மலர் 11

சக்தி

கார்த்திகை
இதழ் 2

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

எழுத்தும் எழுத்தாளரும்

'மனிதன் சமுதாய விலங்கு' என்று ஆங்கிலத்திலே சொல்லுவார்கள். மனிதன் ஒரு சமுதாய விலங்குதான். ஆனால், எழுத்தாளன் 'தனிக்காட்டு ராஜா.' ஆறு பிச்சைக்காரர்களுக்கு ஒரே ஒரு பாய் போதும் தங்கியிருக்க. ஆனால், இரண்டு அரசர்களுக்கு ஒரு ராஜ்யமே போதாது. ஏறக்குறைய எழுத்தாளர்களின் மனோபாவமும் இதுதான். அவர்களில் இரண்டு பேர் சேர்வதே பெரிய காரியம். பலர் கூடுவதென்றால், அது ஓர் அதிசய சம்பவமாகும்.

எழுத்தாளர்கள் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள். அப்படித்தான் அவர்கள் இருக்கவேண்டும். தனித்தன்மைதான் அவர்களுடைய ஜீவன். அதற்குப் பங்கம் நேர்ந்தால், அவர்களது எழுத்தின் வன்மையே மாய்ந்து விடும்.

எனினும், அவர்கள் கருத்து உலகிலேயே வாழவில்லை அல்லவா? பிரத்யட்ச உலகின் நிலைமைகள், அவர்களையும் பாதிக்கின்றன அல்லவா? வாழ்க்கைப் பிரச்னைகள், அவர்களுடைய தொழிலுக்கும் உண்டல்லவா? அவற்றுக்குப் பரிகாரம் காண்பது எப்படி? இந்த ஜனநாயக காலத்தில் எந்தப் பிரச்னையையும் எதிர்த்துப் போராட, கூட்டு முயற்சியே மார்க்க மாகும். ஆகையால், தமிழ்நாட்டு எழுத்தாளர்கள், முதன்முதலாக, கோவையிலே ஒரு மகாநாடு கூடினார்கள்.

மகாநாடு வெற்றிகரமாய் நடந்தது மகிழ்ச்சிதரும் செய்தியாகும். இன்று தமிழ் எழுத்தாளர்களில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் வ. ரா. மகாநாட்டைத் திறந்து வைத்தார். தமிழ்ப் பத்திராசிரியர்களிலே மக்களின் மனதை முதன்மையாய்க் கவர்ந்திருக்கும் திரு. டி. எஸ். சொக்கலிங்கம் தலைமை தாங்கி, மகாநாட்டைத் திறம்பட நடத்தி வைத்தார். சிறப்போடு மகாநாடு நடந்தேறியது.

மகாநாட்டின் பல தீர்மானங்களும் நமக்கு அநேகமாய் முற்றிலும் உடன்பாடுதான். ஆயினும், இரண்டு தீர்மானங்களைப்பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். ஒன்று, தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் வேண்டும் என்ற தீர்மானம்; மற்றது, ஒவ்வொரு தமிழ் எழுத்தாளரும் 2000 ரூபாய்க்கு இன்ஷியூர் செய்ய உதவி செய்ய வேண்டும் என்ற தீர்மானம்.

இன்று தமிழ் எழுத்தாளர்களின் நிலைமையைப்பற்றி ஒளித்துப்பேசிப் பயனில்லை. பொதுமக்களுக்கு அவர்கள் அறிவூட்டுகிறார்கள்; வழிகாட்டுகிறார்கள்; இன்பமளிக்கிறார்கள். ஆனால், அவர்களில் மிகப் பெரும்பாலோருடையவும் நிலை என்ன? சுய சிந்தனையிலும், கருத்து வன்மையிலும், கலையழகிலும், வேறெந்த நாட்டு எழுத்தாளர்களுக்கும் சளைக்காத சிறந்த எழுத்தாளர்கள் இந்நாள் தமிழ்நாட்டில் இருக்கத்தான் இருக்கிறார்கள். இயற்கையிலே எழுத்துத்

தொழிலுக்கு தகுதி வாய்ந்தும், அதன் துன்பநிலை கண்டு அதிலே பூரணமாய் ஈடுபடாமல் வேறு தொழில்களில் புகுந்திருக்கும் பலருமுண்டு. என்றாலும், நவநவமான தமிழ் இலக்கியம் பூத்துச் செழிக்கவில்லை. காரணம் என்ன? சமூக வாழ்விலே, எழுத்தாளர்களுக்குச் சரியான மதிப்பில்லை. பொருள் நிலையிலே, அவர்களுக்குச் சுதந்தரமில்லை. அனுபவச் செறிவும் படிப்பின் விரிவும் பெறத்தக்க சந்தர்ப்பங்களும் வசதிகளும் அவர்களுக்கில்லை. அவர்களில் மிகப் பலரும் கடைக் குமாஸ்தாக்களின் அந்தஸ்திலே நடத்தப்பட்டு வருகிறார்கள். இந்த இடுக்கிலே சில குமாஸ்தாக்களும் எழுத்துலகத்துக்குள் வந்து புகுந்து விடுகிறார்கள். எழுத்துத் தொழில் உருப்படுமா? இதை நாம் வருத்தத்தோடேயே குறிப்பிடுகிறோம். யாரையும் எவரையும் புண்படுத்தும் நோக்கமன்று.

எழுத்தாளர்களின் நிலை இவ்விதம் இருப்பதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. அவைகளையெல்லாம் இங்கே அலசத் தேவையில்லை. ஆனால், அவர்களது பொருளாதார வாழ்வு சீர்பட ஏதாவது வழி கோலுவது மிக மிக அவசியமாகும். தங்கள் எழுத்து பலத்தினாலேயே-அந்த ஒன்றினாலேயே-தலை நிமிர்ந்து சுயேச்சையாய் வாழமுடியும் என்ற தைரியத்தை, அவர்களுக்கு உண்டாக்கவேண்டும். பொருளாதாரத் துறையில் பற்பல வசதிகளை, அவர்களுக்குக் கிட்டும்படி படைக்க வேண்டும். எழுத்தாளர்கள் கவலையற்று வாழவேண்டும். அந்தத் துறையில், கோவை மகாநாட்டின் இன்ஷியூரன்ஸ் திட்டம், ஒரு நல்ல முயற்சியாகும். அதை வரவேற்கிறோம்.

அடுத்தபடியாக, எழுத்துச் சீர்திருத்தம் பற்றியது மிக முக்கியமான தீர்மானம் என்பது நமது கருத்து. சீனர்கள் லட்சக்கணக்கான எழுத்துக்களை வைத்துக்கொண்டு தவிக்கிறார்களாமே, அதுபோல் நமக்கில்லா திருப்பது நல்லவேளைதான். ஆயினும், அச்சு, டைப்ரைட்டர் போன்ற நவீன வசதிகள் வந்திருக்கும் இந்தக் காலத்தில் அவைகளைப் பூரணமாகப் பயன்



திறப்பாளர்: வ. ரா.

படுத்திக்கொள்ள வேண்டுமென்றால், நம் எழுத்துக்களைச் சீர்திருத்தித்தான் ஆகவேண்டும். உயிர் 12, மெய் 18, ஆய்தம் 1 ஆக 31 எழுத்துக்கள்தான் அடிப்படை யானவை. மேல்நாட்டு எழுத்துக்களைப்போல, உயிர் எழுத்துக்களையே உயிர்மெய்க் குறிகளாகவும் தமிழில் ஏன் ஆக்கக்கூடாது? மற்றும் புதிய தேவைகளுக் கிசைய, சில புதிய ஒலிக் குறிகளும் அவசியமாகின்றன. இவைகளை நன்றாய் ஆலோசித்து, அழகிய முறையில் புதிய தமிழ் எழுத்துக்களைச் சிருஷ்டிப்பது நல்ல காரியமாகும். அச்சுக்கும், கையெழுத்துக்கும் வெவ்வேறாக இரு வகை எழுத்துக்கள் ஏற்படுவதுகூட நலமாகும். ஆனால், புரட்சிகரமான மாறுதல்களைச் செய்வது சுலபமல்ல. அதிலே மருட்சியும் பல சங்கடங்களும் தோன்றும். ஆயினும், சில முக்கியமான சீர்திருத்தங்களை உடனே செய்யலாம். இதற்கு 'ஊர் கூடிச் செக்குத் தள்'ளிப் பயனில்லை. முக்கியமாய், நாம் ஒரு யோசனை சொல்வோம். தமிழ்நாட்டில் இன்று நான்கு முக்கிய தினசரிப்பத்திரிகைகள் இருக்

கின்றன. அவை தங்களோடு சேரக் கூடிய இன்னும் சில முதன்மையான வாரப் பத்திரிகைகளையும் கலந்து கொண்டு ஒற்றுமையாய், அச்சு சம்பந் தமான சில எழுத்துச்சீர்திருத்தங்களை உடனடியாக ஆரம்பிக்கலாம். அவை களின் முயற்சியால் சீர்திருந்திய எழுத்துக்கள், ஜனங்களிடம் மிக விஸ் தாரமாய்ப் பரவிப் புழங்கி வழக்கப் பட்டுவிட்டால், பிறரும் தாங்களாகவே வழிக்கு வந்துவிடுவார்கள். தனித்தனி யாகவோ, யாராவது மூலைமுடுக்கிலோ இந்த முயற்சியைத் தொடங்குவார்க ளானால், அவர்கள்தான் பரிகாசத் துக்கு ஆளாவார்களே யல்லாமல், வெற்றி கிடைப்பது துர்லபமாகும். நான்கு தினசரிகளும், இவ்விஷயத்தில் ஒற்றுமையாய் ஒரு முயற்சியைச் செய்யுமானால், அது தமிழுக்கே நல்ல சேவையாகும். கமிட்டி நியமிப்பது, அது இது என்று ஏதாவது செய்து கொண்டிருந்தால், காரியம் நடவாது. திட்டமாகச் செயல்புரிந்து ஜனங்களை மாற்றி நம் பக்கத்தில் இழுத்துவிட் டால், பிற்போக்கான பண்டிதர்களும் புதுமைகண்டு மிரள்வோரும் செய லற்று விடுவார்கள்.

கடைசியாக, கோவை மகாநாட்டை மீண்டும் ஒரு முறை வாழ்த்துகிறோம். அதை நடத்த முயற்சி எடுத்துக்



தலைவர்: சொக்கலிங்கம்

கொண்டவர்களுக்கு நமது மனப்பூர்வ மான நன்றி உரியதாகும். எழுத் தாளர் மகாநாடு நிரந்தர ஸ்தாபனம் பெற்று, இனிவரும் ஆண்டுதோறும் மேலும் மேலும் ஓங்கி வளர்ந்து நாட்டிலே பலம்கொண்ட ஒரு சிறந்த சக்தியாய் விளங்கவேண்டு மென்று பிரார்த்திக்கிறோம்.

*

சொன்னது உண்மை

ஜோ லூயி என்ற நீக்ரோ பயில்வான், சத்திய சந்தன். சொன்ன சொல்லை ஒரு நாளும் மீறுவதில்லை.

ஒரு சமயம் ஜோ லூயிக்கும் பட்டி பேயர் என்பவனுக்கும் ஒரு குத் துச் சண்டை நடக்க ஏற்பாடாயிற்று.

அதைப் பார்க்க வருமாறு, தம் குரு ஜாக் பிளாக் பர்ஸ் என்பவரை, ஜோ லூயி அழைத்தார்.

குருவுக்கு அன்று உடம்பு சௌக்கியமில்லை. "இன்று என்னால் வரமுடியாது. மேடையின் படிகளிலே பலமுறை ஏறி இறங்க எனக்கு இயலாது" என்றார்.

"வாருங்கள். நீங்கள் ஒரே முறை ஏறி யிறங்கினால் போதும்" என் றார் ஜோ லூயி.

அன்று குஸ்தியில் பட்டி பேயரை, ஜோ லூயி முதல் குத்திலேயே வீழ்த்திவிட்டார்.

காலச்சுழல்

ராஜாஜியின் புது யோசனை: நாகபுரி சர்வ கலாசாலையார், தங்கள் பட்டமளிப்பு விழாவுக்கு ராஜாஜியை அழைத்தது, தங்களுக்கும் கௌரவம்; தமிழ்நாட்டுக்கும் கௌரவம். இதற்கு அவர்களைப் பாராட்டுகிறோம். பட்டமளிப்பு விழாப் பிரசங்க மேடையையும், விரிவான அரசியல் பிரச்னை விளக்கத்துக்கு ராஜாஜி பயன்படுத்திக்கொண்டது ஒரு விசேஷமாகும். அவர்பேச்சில் ஒன்றுதான் மிகமுக்கியமான அம்சம். இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்க, பிரிட்டனுக்கு அந்தரங்க சுத்தியான எண்ண மிருக்குமானால், வகுப்புப் பிரச்னையும் சமஸ்தானப் பிரச்னைகளுமே அதற்குக் குந்தகமாயிருப்பது உண்மையானால், நிச்சயமாக அவைகளுக்கு பிரிட்டன் பரிகாரம் காணமுடியாதா? முடியும். ஐக்கிய தேசங்களின் பாரபட்சமற்ற கமிட்டி ஒன்று, அந்தப்பிரச்னைகளுக்கு நியாயமான எந்தப் பஞ்சாயத்தைச் செய்தாலும் நாம் ஒப்புக்கொள்ளத்தயார் என்கிறார் ராஜாஜி. பிரிட்டனுக்கு நியாய புத்தியும் அந்தரங்க சுத்தியும் இருக்குமானால், இதை ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும். ஏற்குமா?

மின்னல் குண்டு: நாஜிகளின் நாசம் நெருங்க நெருங்க, வெறிபிடித்ததுபோன்ற செயல்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். வி-2 என்ற புதிய குண்டு ஒன்றை அவர்கள் சமீபத்தில் இங்கிலாந்து மீது பிரயோகித்தார்களாம். இதுவரையில் நாலு அல்லது ஐந்து மைல் உயரத்துக்குமேல் ஆகாயத்தில் எதுவும் பறப்பதில்லை. இந்தப் புதிய குண்டோ, 50 அல்லது 60மைல் உயரத்தில் பறக்கிறதாம். இதுவரையில் சத்தத்தைவிட வேகமாக ஒளி ஒன்றே பிரயாணம் செய்ய முடியும் என்று நாம் நினைத்துக்கொண் டிருந்தோம். இந்தக் குண்டும் சத்தத்தைவிட வேகமாகப் பறக்கிறதாம். தன் சத்தத்துக்கு முன்னாலேயே தான் வந்துவிடுவதால், இது வரும் சந்தடியே கேட்பதில்லையாம். ஆகையால், முன்னெச்சரிக்கை சாத்தியப்படவில்லை. இத்தகைய குண்டுகளால், யுத்த வெற்றி கிடைக்காது; நிரபராதிகளான ஜனங்களுக்குத் துன்பம் விளையலாம். இந்த மாதிரி பித்துப்பிடித்த அரக்கச்செயல்களில் நாஜிகள் இறங்கியிருப்பது அவர்களின் பலவீனத்தையே காட்டுகிறது. தவிர, இந்த வி-1, வி-2 ஆகாசவாணக் குண்டு வரிசைகளையெல்லாம் ஹிட்லர் ஏன் ருஷ்யாவில் காட்டவில்லை? அகண்ட அந்த நாட்டிலே இவைகளால் ராணுவரீதியான பலன் ஒன்றும் கிடைக்காது என்று அவர் அறிந்திருக்கிறார் என்பதற்கு அதுவே ருசு அல்லவா? பிரிட்டன் இந்த அக்ரமங்களுக் கெல்லாம் பயந்துவிடுமென்று நாம் நினைக்கவில்லை.

இவரும் அவரும்: லார்டு விஸ்டோவல் என்ற தொழிற்கட்சிப் பிரபுவை, இந்திய உதவி மந்திரியாக நியமித்திருக்கிறார்கள். அவர் இந்தியப் பிரச்னை பற்றி, ஏதோ கொஞ்சம் தாராள மனோபாவத்தோடுதான் சில கருத்துக்கள் கூறியிருக்கிறார். ஆனால், அதே சமயத்தில் அகப்பட்டுக் கொள்ளாமலும் பேசி யிருக்கிறார். இந்த வேளையில் புதிய வைஸிராயாக லார்டு டெம்பிள்வுட்டை நியமிக்கப் போவதாக வதந்தி வருகிறது. அது உண்மையாகவே இருக்கலாம். இவர் வேறு யாருமல்ல. மாஜி இந்தியா மந்திரி ஸர் சாமுவேல் ஹோர்தான். பிடிவாதமான கன்ஸர்வடிவ். அபிஸீனியாவைக் காட்டிக்கொடுத்தவர். ஒரு கையால் நீட்டி மறு கையால் பிடுங்கும் பிரிட்டிஷ் சம்பிரதாயம், இவர் நியமனத்தால், நிச்சயம் பூர்த்தி பெற்றுவிடும். என்றாலும், இந்தியா என்றென்றும் பிரிட்டிஷ் வைஸிராய்களின் ஆதிக்கத்திலேயே இருந்து கொண் டிருக்கப்போவ தில்லை. வருங்காலம்தெய்வத்தின் கையிலிருக்கிறது. யார் என்ன செய்தால் என்ன? காலத்தச்சனைக் கட்டிப்போட முடியாது.

*

மனிதகுல மாணிக்கம்

ஸரஸி

பண்டித ஜவஹர்லால் சிறையில் இருக்கிருர். அவருடைய ஐம்பத்தைந்தாவது ஜன்ம தினம் வந்து சென்றுவிட்டது. அன்று மகாத்மாஜி, லண்டன் நண்பர்களுக்கு அனுப்பிய செய்தி இது :

''ஜவஹர்லால் மனித குலத்தின் ஒரு மாணிக்கம். அவரைப் பெற்ற நாடு பாக்கியசாலி யாகும். அவரைப் போன்ற மனிதர்களைச் சிறையில் போடுவ தல்லாமல், அவர்களுக்கு வேறு உபயோகம் காணுத ஓர் ஆட்சி முறையிலே, ஏதோ கோளாறு இருக்கத்தான் வேண்டும்.''

இதைவிட நாம் என்ன சொல்லக் கிடக்கிறது ?

பண்டித ஜவஹர் ராஜபோகத்தோடு வாழ்ந்த குடும்பத்தில், 1889-ஆம் வருஷம் பிறந்தார். காஷ்மீரப் பிராம்மணர். இங்கிலாந்திலுள்ள ஹாரோ கலாசாலையிலும், கேம்பிரிட்ஜைச் சேர்ந்த டிரினிட்டி கல்லூரியிலும் கல்வி பயின்ருர். அலஹபாது ஹைக்கோர்ட்டில் அட்வகேட் ஆகத் தொழில் புரிந்தார். மும்முறை காங்கிரஸுக்குத் தலைமைப் பதவி வகித்தார். அநேகந் தடவை, தேசத்துக்காகச் சிறை சென்ருர்.

மகாத்மாவுக்கு அடுத்தபடியாக நாட்டிலே இன்று பெருஞ் செல்வாக்குப் பெற்ற லட்சிய புருஷன் பண்டித ஜவஹர்லால் நேரு தான். அவருக்கு உலகெங்கும் பல பிரபலஸ்தர்கள் நண்பர்களாவர். முக்கியமாய், சியாங் தம்பதிகளைக் குறிப்பிடலாம்.

இந்திய இளைஞர் போற்றும் விக்ரகமான ஜவஹரின் 55-ஆவது ஜன்ம தினம் சமீபத்தில் நாடெங்கும் கொண்டாடப்பட்டது பண்டித ஜவஹர் 'மனிதகுல மாணிக்கம்' என்பது மகாத்மாவின் வாக்கு. அந்த மாணிக்கத்தை நாம் மதிப்பிட முடியுமா ?

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பே, பண்டித ஜவஹர்லால் அபேதவாதத்திலும், ருஷ்யாவில் நடக்கும் மகத்தான பரிட்சையிலும் பற்றுதல் கொண்டார். அப்போது ருஷ்யாவுக்கு நேரே விஜயம் செய்து, தாம் கண்ட பல விஷயங்களையும் அனுதாபத்தோடு விளக்கி, இந்தியப் பத்திரிகைகளில் பல கட்டுரைகள் எழுதினுர். காங்கிரஸுக் குள்ளேயே அபேதவாதக் கருத்துள்ளவர்களுக்குப் பெரிதும் இடந்தேடிக் கொடுத்தவர் அவர் தான்.

தந்தை மோதிலால் நேருவைத் தீவிரமான தேசியப் போரில் இழுத்து விட்டவர் பண்டித ஜவஹர். அரண்மனை போன்ற 'ஆனந்தபவ'னைத் தேசத்துக்கு - தேசியத்தின் பிரதிநிதியான காங்கிரஸுக்கு – தானங் கொடுத்து விடும்படி மோதிலாலைத் தூண்டியவரும் ஜவஹர்தான். ''இந்த மாளிகையை யாருக்காக வைத்திருக்கிறீர்கள் ? எனக்கு வேண்டாம். பின்னே யாருக்காக ?'' என்று, தந்தைக்கு அவர் அன்று எழுதிய கடிதம் மிக உருக்கமானதாகும்.

ஜவஹரிடம் காந்திஜிக்கு, தம் மகனைப்போன்ற அன்பு. ஆனுல், ஜவஹருக்கு, காந்தீயத்தில் பரிபூர்ண உடன்பாடில்லை. காந்தி தத்துவங்களை அவர் அடியோடு எதிர்த்துக் கிளம்புவாரோ என்றுகூட ஒரு காலத்தில் எல்லோரும் அஞ்சிவந்தார்கள். ஆனுல், லாகூர்க் காங்கிரஸில் தமக்கு வந்த மகுடத்தை நிராகரித்து, ஜவஹருக்குச் சூட்டும்படி செய்தார் மகாத்மா காந்தி. ஜவஹர் முதன் முறை ராஷ்டிரபதியான வரலாறு இப்படி. ஆனுல், இரண்டாம் முறையிலும் மூன்ரும் முறையிலும், தம் சொந்தச் செல்வாக்கினலேதான் அவர் அதைப் பெற்ருர்.

அஹிம்சா தர்மம் சம்பந்தப்பட்ட மட்டில், இன்று பரிபூர்ண காந்திய வாதி பண்டித ஜவஹர். சர்வதேச நோக்கிலேதான் அவர் எதையும் சிந்திப்பார். அவர் ஒரு லட்சியவாதி. கனவு காண்பவர் என்றுகூடச் சிலர் அவரை மதிக்கிறார்கள். பொது உடைமைத் தத்துவங்களில் பற்றுதல் உள்ளவர். ஆக்கிரமிப்பையும் சர்வாதிகாரத்தையும் வெகுநாளாகவே கண்டித்து வருபவர். இன்று பிரமாதமாய் ஹிட்லரையும், டோஜோவையும், முசலீனியையும் திட்டும் மேல் நாட்டு ராஜதந்திரிகள், அந்த ஆக்கிரமிப்புக்காரர்களோடு கைகுலுக்கிக் கொண்டிருந்த காலத்திலேயே, அவர்களின் கொள்கைகளைக் கண்டித்துக் கொண்டிருந்த தீரர் ஜவஹர்.

பண்டித ஜவஹர் மனித குல மாணிக்கம்; தேசத்தின் திலகம்; வாலிபர்களின் லட்சிய புருஷன்; சர்வ தேசப் பெரியோன்; மகா தியாகி - அவர் இன்று சிறையிலிருக்கிறார். என்றாலும், புதிதாய் நியமனமான உதவி இந்தியா மந்திரி லிஸ்டோவெல் பிரபு, பண்டித ஜவஹரைத் தமக்கு நெருங்கிய நண்பர் என்று கூசாமல் குறிப்பிடுகிறார். நண்பராயிருக்கலாம். ஆனால், விடுதலையுண்டா? சுதந்தரமுண்டோ? இது தான் இந்தியாவின் கேள்வி.

✲

எதற்கு வந்தனம்?

பம்பாய் ரயில்வே ஸ்டேஷனில் நான்கு ஸோல்ஜர்கள், பாஸ் இல்லாமலே பிரயாணம் செய்து விட்டு வெளியே வந்தார்கள். கேட்டில் நின்ற அதிகாரி, அவர்களைத் தடுத்து, ராணுவப் போலீஸுக்குச் சொல்லியனுப்பப் போனார்.

அங்கே ஒரு மிலிட்டரி ஸார்ஜெண்ட் வந்து சேர்ந்து, விஷயத்தை விசாரித்தார். பிறகு, அவர்களைத் தாம் அரெஸ்ட் செய்வதாகச் சொல்லி, வெளியே அழைத்துச் சென்றார். கொஞ்ச தூரம் போனதும், "சரி, போங்கள் - இனி உங்களுக்கு எங்கே இஷ்டமோ அங்கே" என்று, சொல்லி, சோல்ஜர்களை சார்ஜெண்டு விட்டுவிட்டார்.

"ரொம்ப வந்தனம்" என்று அந்த சோல்ஜர்கள் நன்றி கூற தொடங்கினார்கள்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். என்னிடமே பாஸ் இல்லை. நான் வெளியேறுவதற்குத்தான், இந்த வழியைக் கடைப்பிடித்தேன். உங்களுக்கு நான் அல்லவா வந்தனம் செலுத்த வேண்டும்?" என்றார் ஸார்ஜெண்ட்.

*   *

சர்ப்பமும் ஈக்களும்

ஜப்பானியக் கடற்படைத் தலைவர் யமமோட்டோ, அதிகம் அதிகமாக விமானங்களையும் விமானந்தாங்கிக் கப்பல்களையும் கட்ட வேண்டும் என்று வற்புறுத்திவந்தார்.

"போர்க் கப்பலைப் போர்க் கப்பலாலன்றி வேறெதனாலேனும் அழிக்க முடியுமா? இந்த விமானங்களால் என்ன பயன்?" என்று யாரோ அவரிடம் கேட்டார்கள்.

"டார்ப்பிடோ விமானங்களால், நிச்சயம் போர்க் கப்பல்களை அழிக்க முடியும்; மகா மூர்க்கமான விஷப் பாம்பையும், ஈக்கள் கூட்டம் மொய்த்து அழித்துவிடுவதில்லையா?" என்று அவர் பதிலளித்தார்.

அனேக வருஷ சிறந்த
ஆராய்ச்சியின் பலனே

ஜாப்கோ

பொருள்கள்

இந்தியாவின் இணையற்ற

ஜாப்கோ இங்க்

எந்த உன்னத முறையில் தயாரிக்கப்படுகிறதோ அதே முறையில் மற்ற சிறந்த பொருள்களையும் தயாரிக்கின்றோம்

பிரில்லியன்டைன் • ஸ்னோ
வாசனை கலந்த காஸ்டர் ஆயில்
லைம் கிளிஸ் • ஷேவிங் ஸ்டிக் முதலியன

ஜாப்கோ பவுன்டிங்க்

வண்டலற்ற தெளிவு
நிகரற்ற கருப்பு
தடையற்ற பெருக்கு

ஜயபாரதம் கம்பெனி
மல்லேஸ்வரம் P. O.
பெங்களூர்

தமிழ் நாடு ஏஜெண்டுகள் :—
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ் : : மேலக்கோபுர வீதி - மதுரை

விதியின் விளையாட்டு

சுரபி

உண்மையில் விதியின் விளையாட்டு என்று ஒன்று இருக்கவேண்டு மென்றுதான் தோன்றுகிறது. இல்லா விட்டால், சாம்பசிவ ரெட்டியாரும் காளியப்பனும் எப்படி ஆண்டையும் அடிமையுமாக அமைந்திருக்க முடியும்?

"நமக்கு ஒரு கண் போனால் எதிரிக்கும் ஒரு கண் போக வேண்டும்" என்ற கொள்கை ரெட்டியாருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது. "நமக்கு இரண்டு கண் போனாலும் சரி, எதிரிக்கு ஒரு கண்ணாவது போகவேண்டும்" என்பதுதான் அவருடைய சுத்த சித்தாந்தம். அந்த அசட்டுக் காளிக்கோ, இந்த இரண்டுமே பிடிக்காது. "நமக்கு இர்ண்டு கண்ணும் போனாலும் சரி, பிறத்தியாருக்கு ஒரு கண்ணாவது நன்றாயிருக்கவேண்டும்" என்பதுதான் அவனுடைய கொள்கை.

*　　　*　　　*

ரெட்டியார் இடது கையால் மீசையை முறுக்கிக்கொண்டே அண்டங் காக்கை தலையைச் சாய்ப்பதுபோல் சாய்த்துப் பார்த்தார்.

"ஏண்டா? என்ன நிற்கிறே?"

பதிலே இல்லை; காளி சிலைபோல் சமைந்து நின்றான்.

"ஏன்? என்ன, நான் சொல்வது காதிலே ஏறிச்சா, இல்லையா" என்று திரும்பவும் ஓர் அதட்டுப் போட்டார்.

"ஆண்டே........."

"என்ன 'ஆண்டே?'"

"நான் என்னமோ அடிமை தானுங்க. இருந்தாலும்......"

"ஊம்?"

"அது சரீன்னு எம் புத்திலே படலேங்களே."

"ஊஹூம், புத்தி வேறே இருக்கா உனக்கு!"

"எசமா, மன்னிக்கணும். தாங்கள் காலாலெ இட்டதைத் தலையாலே செய்ய அடிமை காத்துக் கெடக்கிறேன். ஆனால்......"

"அட கழுதே! நான் சொல்றேன், செய்யடான்னு. செய்யறதை விட்டுட்டு, என்னமோ நீதாந் தருமராசா மவன் மாதிரி நியாயமெல்லாம் பேசறயே? ஓ, அவ்வளவுக்கு வந்தூட்டயா?"

"இல்லெ, ஆண்டே; எங்கொழந்தை குட்டிங்களுக்கு நல்லதில்லேங்களே; ஒங்கக் குடும்பத்துக்குந்தா ஆகாதுங்களே."

ரெட்டியாருடைய கற்றை மீசை துடித்தது; அக்கினிக் கண் சுழன்றது. சிவபெருமான் நெற்றிக் கண் திறந்து பார்ப்பதுபோல் காளியப்பனை ஒரு முறைப்பு முறைத்தார். அவன் தடியை ஊன்றிக்கொண்டு வேதியர் முன்னே நின்ற நந்தனைப் போல் தலைகுனிந்து அசையாது நின்றிருந்தான். இடதுகால் பெருவிரல் மட்டும் தரையைக் கிளறிக்கொண்டிருந்தது. கண்களிலே மோதிய அலையிலிருந்து அவன் மனக் கொந்தளிப்புத் தெரிந்தது. அந்த விழிகள் பயந்து நடுங்கிக்கொண்டே சற்று மேலே போய் வந்தன. உடனே அவன் உடல் வியர்த்தது. இதுதான்

பொறுமைத் தீ சூழ்ந்த ஒரு மனிதனின் ஏவல் எப்படி முடிகிறது என்பதைச் சித்தரிக்கும் இந்த ரசமான கதை, ஆசிரியரால் அகில இந்திய ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டதாகும்.

சமய மென்று ரெட்டியார் தமது பாணத்தை எடுத்து வீசினர். "அடே, வளர்த்த கிடா மார்பில் பாய்ந்தது போல, இத்தனை நாளாய் என் சோற்றைத் தின்றுவிட்டு எனக்கேயா புத்தி சொல்ல வந்தே? பார்க்கிறேன் உன் திமிரை. இன்னைக்கு ராத்திரி நீ அதைச் செய்து முடிக்கலேன்னுப் பார்த்துக்கோ. உங் கொழந்தை குட்டியெல்லாம் பிழைக்கிறதை நான் பார்க்கிறேன். பேசறது சாத்தம்பட்டி சாம்பசிவ ரெட்டியாரின்னு ஞாபகமிருக்கட்டும்" என்று உறுமிக்கொண்டே மீசைமேல் கைபோட்டார்.

பாம்பைக் கண்டவுடனே தேரைக்குப் பாதி உயிர் போய்விடும். ரெட்டியார் அதட்டலைக் கேட்டவுடனே காளியப்பனுக்குப் பாதி ஜீவன் குன்றிவிடும். என்றுமில்லாத உக்கிரத்தோடு இன்று அவர் போட்ட கூச்சலைக் கேட்டு அவன் மனம் இடிந்துபோய் விட்டது. நியாய அநியாயத்தைப் பற்றி யோசிப்பதற்கு அவன் மனத்தில் இடமேயில்லை. இடியினல் தாக்குண்டவன் போலச் சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்ருன். பேசுவதற்குச் சக்தி வந்தவுடனே, "ஆகட்டும் எசமான்" என்று இரண்டு வறண்ட வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிவந்தன. அடுத்த நிமிஷம் கும்பிடு போட்டுவிட்டுத் திரும்பினுன். என்றுமில்லாதபடி அவன் தள்ளாடி நடந்து செல்வதை ரெட்டியார் பார்த்தார். அவர் கண்களிலே மமதை வெற்றிக் கூத்தாடியது.

* * *

சாத்தம்பட்டியிலே தாம்தான் முடிசூடா மன்னர் என்பது சாம்பசிவ ரெட்டியார் அபிப்பிராயம். உண்மையில், ஒரு வருஷத்துக்கு முன் வரையில் அந்த ஊரிலே அவர் இட்டதுதான் சட்டமாயிருந்தது. அவர் வார்த்தைக்கு எதிர்வார்த்தை சொல்லக் கூடியவர்களே அங்குக் கிடையாது. எத்தனை வருஷமாகத் தாம் நகர சபைத் தலைவரா யிருந்துவருகிருர் என்பது அவருக்கே சரியாய் ஞாபகமிராது. ஒரு தடவையாவது அவருக்குப் போட்டியாய் நிற்க ஒருவராவது முன்வந்தது கிடையாது. நகரசபைக்குள்ளேயும் அவர் சொன்னதுதான் வேதவாக்கு. அங்கத்தினரில் முக்காலே மூன்று வீசம் பேர் அவர் பார்த்து நியமித்த கைகாட்டி மரங்கள்தான். மிச்சமிருந்த இரண்டொருவருக்கும், அவருக்குக் குறுக்கே சொல்லத் தைரியங் கிடையாது.

ஆனல், இந்த உலகத்திலே எதுவும் ஒரேயடியாய் நீடித்து நிற்பதில்லையல்லவா? சாம்பசிவ ரெட்டியாரின் ஏக சக்ராதிபத்யங்கூட இந்த விதிக்கு விலக்கில்லை என்பது ஒரு வருஷத்துக்கு முன்னேதான் தெரிய வந்தது. அந்த வருஷம் நடந்த தேர்தலில் செங்கோடைய கவுண்டர் எப்படியோ ஒரு அங்கத்தினராக அவருக்கு எதிராய்த் தலைவர் ஸ்தானத்துக்குப் போட்டி போட்டபோதுதான் அவர் கண் திறந்தது. இந்தப் போட்டியைப் பற்றி முதலில் கேள்விப் பட்டபோது ரெட்டியார் கொஞ்சம் திகைத்துத்தான் போனர். ஆனல், அவரா இதற்கெல்லாம் சளைப்பவர்? இத்தனை வருஷமாகச் சம்பாதித்த பணத்தில் கொஞ்சம் எடுத்து வீசினர். தலைவர் ஸ்தானம் தானே அவரைத் தேடிக் கொண்டுவந்தது.

ரெட்டியாரின் கோட்டை என்னவோ அந்த வருஷமும் நிலைத்து விட்டது. ஆனல், அது ஆட்டங்கொடுத்து விட்டது என்று அவர் அறிந்துகொண்டார். அந்த வைரி அங்கேயிருக்கும் வரையிலும் தமக்குப் பழைய ஆதிபத்தியம் மீளாது என்று அவருக்கு நன்ருய்ப் பட்டுவிட்டது. எதற்கெடுத்தாலுமல்லவா அந்த அசகாயசூரன் தடை போடுகிருன்! சீமைக்குப் போய் நாலெழுத்து கற்றுக்கொண்டு என்னவோ இரண்டு பட்டம் வாங்கிக் கொண்டு வந்துவிட்டாலும் வந்து விட்டான், இத்தனை நாள் பொம்மைகள் போல் தாம் சொன்னதற்கெல்லாம் ததாஸ்து போட்டுக் கொண்டிருந்தவர்களெல்லாம் அல்லவா இப்போது அவன் பக்கம் சேர்ந்துகொண்டு தம்மைக் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள்?

இப்படித் தம் செல்வாக்குக்கு ஒருவன் வேர்ப்புழுவாய் வந்து சேர்ந்

தானே என்று எண்ணும்போது, புழுவை நசுக்குவது போல் அந்த எதிரியையும் நசுக்கிவிட வேண்டு மென்று அவருக்கு தோன்றும். தாம் பார்த்துப் பிறந்த அந்தச் செக்குப் பயல், செங்கோடைய கவுண்டரவா ளாகித் தம் கோட்டைக்கே வர்த்தி யாய் வந்துவிட்டதை நினைக்கநினைக்க அவர் மனத்திலே ஆத்திரம் பொங்க லாயிற்று. சில நாளைக்கெல்லாம் செங்கோடையக் கவுண்டர் என்ற பேரே அவருக்கு நாராசமாய் விட் டது. கவுண்டரைப் பார்க்கும் போதெல்லாம் அவர் கண்ணிலே ஊசியைச் செருகியது போலிருக்கும்; அவரைப்பற்றி நினைக்கும் போதெல் லாம் வயிற்றிலே நெருப்பைக் கொட் டியது போலிருக்கும்.

அந்த எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளுவதற்காகத் தானோ என் னவோ, இயற்கையும் அவருக்கு விரோதமாகச் சதி செய்தது. இத் தனை நாள் பொன்விளையும் பூமியா யிருந்த அவர் நிலத்திலே, அந்த வருஷம் முதல் போகமே முழு மோசமா யிருந்தது. அந்தத் தடவை நட்ட நடவே சரியாய்த் தலையெடுக்கவில்லை. ஏதோ தப்பிப் பிழைத்த பயிர்களும் தாயில்லாக் குழந்தைகள் போல நோய்ந்து கிடந்தன. அந்த இருபது வேலி பயிரையும் சேர்த்தடித்தால் கூட ஒரு பத்து வண்டி தேருது போலிருந்தது. ஆனால், ஒரு பர்லாங் குக்கு அப்பாலேயிருந்த கவுண்டர் நிலத்திலோ, முப்போகமும் சேர்ந்து ஒரே போகத்தில் விளைந்துவிட்டது போலிருந்தது விளைச்சல். ரெட்டி யாருக்குத் தமது பயிர் சாவியாய்ப் போனதில் கூடக் கவலையில்லை. ஆனால், அந்த மொட்டைப் பயலின் நிலம் இப்படி ஒரே மட்டாக விளைந்து தள்ளி விட்டதைப் பார்த்தபோது தான், அவர் மனம் படாத பாடு பட் டது. என்ன தான் அவன் படித்துக் கொண்டு வந்திருந்தாலும் இப்படியா! ஒரே அநியாயமாக அல்லவா இருக் கிறது!



எப்போதோ ஒரு சமயம் ஏரிக் கரைப் பக்கம் போகும் ரெட்டியார் தினம் நிலத்துக்குப் போக ஆரம்பித் தார். போகும்போதெல்லாம், பொறு மைக்கார மாற்றுந்தாய் தன் பிள்ளை யையும் மூத்தாள் பிள்ளையையும் ஒப் பிடுவதுபோல் தம் நிலத்தையும் எதிரி நிலத்தையும் ஒப்பிட்டு ஒப்பிட்டுப் பார்ப்பார். கதிரைத் தாங்கமாட்டா மல் தாங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பயிர்களைப் பார்க் கும்போது, அவர் மனத்திலும் பாரம் தாங்கமாட்டாத படி கனத்துவிடும். அந்தக் கதிர்கள் காற்றிலே அசைந் தாடும்போது, தம் மைப் பார்த்துக் கேலி செய்வது போலவே அவருக் குத் தோன்றும். உடனே அந்தநெல் சுணையையெல் லாம் இருதயத்தில் போட்டுத் தேய்த்

ததுபோல் அவருக்கு வேதனையா யிருக்கும். கடைசியில், 'மொட்டைப் பயல். நாசமாய்ப் போக. வைக்கிறேன் அவனுக்கு வழி' என்று ஓங்கித் தரையை உதைத்துவிட்டுக் கைத் தடியை ஆங்காரத்தோடு குத்திக்கொண்டு வீட்டுக்குத் திரும்புவார்.

எத்தனையோ நாளாக அவரும் யோசித்து யோசித்துப் பார்த்தார், எப்படி அந்தப் பயிருக்கெல்லாம் வழி வைப்பதென்று. ஆனல், ஒரு வழியும் அவருக்குப் புலப்படவில்லை. கடைசியில், அறுவடை நெருக்கத்தில், அவருடைய கும்பிக் கொதிப்பையெல்லாம் அடக்குவதற்கென்றே வந்தது போல் மழை வந்தது. ஒரே மூச்சாய் மூன்று நாள் விடாது பெய்த அந்த அடை மழையைப் பார்த்தபோது அவருக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. "அந்தப் பாவி நிலத்துப் பக்கமாய் அந்த ஏரிக்கரை உடையாதா! கதிர் கதிராய்த் தொங்கும் அந்தப் பயிரெல்லாம் அப்படியே மூழ்கி நாசமாய்ப் போகாதா!" என்று மனத்துக்குள்ளே கோருவார். அவர் மனத்தில் பொருமை பொங்குவது போல் ஏரியிலும் நீர் பொங்கிக் கொண்டே வந்தது. ஆனல் அப்போது ஒரு பயம் அவருக்குத் தோன்றிற்று. உடைகிற ஏரி அந்தப் பக்கமாய்த் தான் உடைகிறது என்று என்ன நிச்சயம்? ஒருவேளை தம்முடைய நிலத்தின்பக்கமே உடைந்து, உள்ளதும் போனல் என்ன செய்வது? இதை நினைத்தபோது தான், அந்த ஏரி அப்படி ஏதாவது புத்தி கெட்ட காரியம் செய்துவிடுவதற்கு முன் தாம் முந்திக்கொள்ள வேண்டுமென்று அவருக்குத் தோன்றிற்று. உடனே காளியைக் கூப்பிட்டு இன்று இரவு காரியத்தை முடித்துவிடும்படி கட்டளையிட்டார். அந்த அசட்டுத் தடியன் இந்தப் பெரிய காரியத்துக்கெல்லாம் உதவமாட்டானென்று அவருக்குப் பயந்தான். அவன் அவரோடு நியாயம் பேசி வாதாட ஆரம்பிக்கவே அவருடைய பயம் பின்னும் அதிகமாய்ப் போய்விட்டது. ஆனல் எப்படியோ அவனைச் சரிப்படுத்திவிட்டாரல்லவா? இனிமேல் அவருக்குக் கவலையில்லை; அன்றிரவு நிம்மதியாய்த் தூங்கலாம்.

* * *

காளியப்பன் மண்வெட்டியை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு புறப்பட்டான். எங்கும் ஒரே இருள் மயமாயிருந்தது. வானமே கிழிந்து விட்டதுபோல் மழை ஊற்று ஊற்றென்று ஊற்றிக் கொண்டிருந்தது. தவளைகள் கத்தும் சப்தம் பூதபைசாசங்களெல்லாம் சேர்ந்து ஓலமிடுவது போலிருந்தது. இருந்தாற்போலிருந்து மின்னல் வெட்டுவது, ஊழிக்காலத்திலே கோர தாண்டவம் புரியும் பத்திரகாளியின் அகோரச் சிரிப்பைப் போலிருந்தது. மின்னலை அடுத்தடுத்து அண்டங்களெல்லாம் வெடிபடுவதுபோல் இடி இடித்தது. எங்கோ ஒரு மூலையிலிருந்து திடுக்கென்று அலறும் ஆந்தையின் குரல் இருதயத்தையே நிறுத்திவிடும் போலிருந்தது. ஆனல் இதையொன்றையுமே காளி உணரவில்லை. அந்த காரத்தையே குடைந்து கொண்டு செல்பவன்போல் அவன் ஒரே நிதானமாக நடந்து சென்றான். சரியாய்ச் சொன்னல், அவன் கால்கள் நடந்து சென்றன வென்றுதான் சொல்ல வேண்டும். ஆமாம், உண்மையில் அவன் கால்கள், தாம் பழக்கப்பட்ட வழியாகப் போய்க்கொண்டிருந்தன. அவன் கண்கள் திறந்திருந்தனவா மூடியிருந்தனவா என்றுகூட நிச்சயமாகச் சொல்லமுடியாது. அவன் மனமோ, வழியைப் பற்றியோ அந்தச் சூழலைப் பற்றியோ அணுவளவு கூட யோசிக்கவில்லை— உண்மையில், கட்டைபோல் திறந்துகிடந்த அந்த உடம்பில் அம்பு பாய்வதுபோல் வந்து தாக்கிய மழைகூட அவனுக்கு உறைக்கவில்லை. வழி நெடுக, காலில் தவளைகள் சிக்கி மிதிபடுவதுகூட அவனுக்குத் தெரியவில்லை.

அவ்வளவு மும்முரமாக அவன் மனம் யோசனையி லாழ்ந்திருந்தது. "ஐயோ, இது என்ன அக்கிரமம்! என்ன அநியாயம்! பாவம், அந்தக் கவுண்டர் தங்கமானவ ராயிற்றே? நமக்கு என்ன கெடுதல் செய்தார்? இந்த ஆண்டைக்குத் தான் என்ன

செய்தார்? அவருக்குப் போய் இப்படித் துரோகம் செய்தால் எந்த தெய்வதுக்குப் பொறுக்கும்? எங்கேபோய் இந்தப் பாவத்தைத் தீர்ப்பது? சீ! ஏன் ஒரே பிடியாக முடியாது என்று சொல்லாமல் போய்விட்டோம்? இப்போதுதான் போய்ச் சொல்லிவிட்டால் என்ன? என்ன் செய்துவிடப் போகிறுர்? வேலையைவிட்டு நிறுத்திவிட்டால் தான் நிறுத்தி விடட்டுமே? இப்படி என்ன பிழைப்பு வேண்டிக் கிடக்கிறது?...ஐயோ, இந்தப் பொல்லாத ரெட்டியார் எதற்கும் துணிந்தவராச்சே... சீ, தலைக்கு மிஞ்சின ஆக்கினையா? போனால் தான் போகிறது இந்த உயிர்...... ஐயோ, அப்புறம் அந்தக் குழந்தை குட்டிகள் எப்படி அலைந்துவிட்டுப் போகும்? அவள் தான் எப்படிக் குமுறுவாள்?... ஒரு பக்கம் இதுவும் கழுத்தறுக்கிறதே; எத்தனை வருஷமாய் அவர் உப்பைத் தின்று வளர்ந்தோம். இப்போது எஜமானன் சொல்லைத் தட்டினால் நன்றி கெட்ட துரோகி என்றல்லவா ஆகும்?......... இருந்தாலும் இப்படி அக்கிரமம் பண்ணலாமா?.......... என்னமோ, மாரியாயி, என் மேலே ஒன்றும் குற்றமில்லை. இப்படியும் அப்படியுமாய் மனசு இழுத்துப் பறிக்கிறது. நீ எப்படி விட்டாலும் சரியே.''

காளியப்பன் கால் நின்றது; உடனே அவன் யோசனையும் நின்றது. மண்வெட்டியை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு கண்ணை நன்ருய்க் கசக்கிப் பார்த்தான். அந்த இருட்டிலும் அந்த நீர்நிலை பார்க்கப் பயங்கரமாயிருந்தது. தரை மட்டத்துக்கும் தண்ணீருக்கும் இடையிலே ஓர் அடி தான் இருந்தது. பலிக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பூதம்போல அது பதை பதைத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த உடனே திரும்பவும் அவன் மனத்திலே பழைய எண்ணமெல்லாம் எழுந்தது. ஆனால் அவன் மனக் கண்முன்னே ரெட்டியாரின் ரௌத்திராகாரமான முகம் தோன்றி மிரட்டியது. உங்கொழுந்தை குட்டியெல்லாம் பிழைக்கிறதை நான் பார்க்கிறேன்'' என்ற அந்த உறுமல் அவன் காதிலே கேட்டது. ''ஆகட்டும் எசமான்'' என்ற அவன் வார்த்தையும் ஞாபகம் வந்தது. உடனே மனத்துக்கு ஒரு கரை போட்டுவிட்டு அந்த ஏரிக்கரையை வெட்டிச் சாய்க்க ஆரம்பித்தான்.

இங்குமங்கும் இரண்டு தடவை மண்வெட்டியைப் பாய்ச்சினுனே இல்லையோ, புற்றிலிருந்து புறப்படும் நாகம்போல் தண்ணீர் சீறிக்கொண்டு பாய்ந்தது. இரண்டு நிமிஷத்தில், ஏற்கெனவே மழையில் ஊறிக்கிடந்த கரை, பக்கத்திலெல்லாம் உடைப்பெடுத்துக் கொண்டது. உடனே மடை திறந்ததுபோல் பக்கத்திலிருந்த நிலத்தில் சோவென்று வெள்ளம் பாய ஆரம்பித்தது. இனிமேல் மண்வெட்டிக்கு வேலையில்லையென்று காளி கரையை விட்டுச் சற்று ஒதுங்கி வந்து நின்றுன். தான் செய்த வேலையையும் அதனால் நேரப்போகும் விளைவையும் நினைத்தபோது, அவனது கலங்காத கண்ணும் கலங்கிவிட்டது.

பொழுது புலர்ந்தது. ''ரெட்டியாரின் காரியத்தை நிறைவேற்றியாய் விட்டது; இனி நமக்கு வேலையில்லை'' என்று மழையும் ஓய்ந்தது. ஆனால், அது செய்துவிட்டுப்போன வேலையைப் பார்க்க ஊரே திரண்டு ஏரிக்கரைக்கு வந்துவிட்டது. ''ஐயோ, இவ்வளவு பயிரும் பாழாய்ப் போயிற்றே'' என்று அங்கலாய்த்தார்கள் சிலர். ''நல்ல காலம். இவ்வளவோடாவது நின்று தொலைத்ததே மழை. இல்லாவிட்டால் பக்கத்து நிலமெல்லாம் வெள்ளக் காடாயிருக்குமே'' என்று திருப்திப்பட்டுக் கொண்டார்கள் சிலர். 'பக்கத்து நிலங்களா? ஊரையே ஏப்பம் விட்டுவிட்டுப் போயிருக்காதா?' என்று தங்கள் ஆத்திரத்தைக் கொட்டினுர்கள் இன்னும் சிலர். 'வேண்டுமென்றே யாராவது செய்த வேலையாயிருக்குமோ' என்று சந்தேகத்தோடு கேட்டார்கள் வேறு சிலர். இப்படி ஊரெல்லாம் திரண்டு உருண்டு வந்திருக்கும்போது காளியப்பனை மட்டும் அங்கே காணுமல் போகவே, சிலருக்கு அவன்மீது சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் உடனே, 'சீ சீ! அவன் பரம யோக்கியனுயிற்றே' அவனைப்போல ஒரு பண்ணை

யாளை இந்தச் சாத்தம்பட்டியிலேயே காணமுடியாது. அவன் மேலே சொன்னால் கண்ணவிந்து போய் விடும். ஏதோ உடம்பு கிடம்பு சரியா யில்லேயோ என்னவோ. ஒரு வேளை சமாசாரம் இன்னும் அந்தப் பக்கம் எட்டாமலிருந்தாலும் இருக் கலாம்'' என்று பலர் அவனுக்காகக் கச்சை கட்டிக்கொண்டு வந்தார்கள்.

காளியின்பெயர் அடிபடவே, அங்கே வேடிக்கை பார்க்க வந்திருந்த வீராயிக்கு அண்ணன் ஞாபகம் வந்து விட்டது. உடனே அண்ணன் வீட் டுக்கு ஓடினாள். "அண்ணி! ஊரே திமி லோகப்படுது. அண்ணெ இன்னு, இன்னிக்குத்தான் இன்னும் தூங் குதா?'' என்று கேட்டுக்கொண்டே நுழைந்தாள்.

"இல்லெ கொந்தே! நேத்து ராத் திரி நல்ல நசியிலே எங்கேயோ போயிட்டு வந்தாங்க. மழையிலே தொப்பக்கட்டையா நெனஞ்சி வந்து சேந்தாங்க. அப்போ இருந்து என் னென்னமோ பெனாத்திக்கிட்டு அப்படியே படுத்துக் கெடக்காருங்க. மாரியாயிக்குச் சொல்லிக்கிட்டேன். இனிமேத்தான் பொங்கல் வச்சி ஒரு கவுறு கட்டணும். என்ன சமாசாரம், என்னவோ ஊரே அமக்களப்படு தின்னேயே?'' என்று காளிக்குக் கால் பிடித்துக் கொண்டே பதில் சொன்னாள் அவள் பெண்டாட்டி.

"சமாசாரமா? ஏரி ஒடஞ்சி......''

"ஐயையோ, நீங்கள்ளாம் என்ன கதி ஆனீங்க?''

"அதையேங் கேக்கறே? நல்ல காலம். ராத்திரியெல்லாம் உசுரெக் கையிலெ புடிச்சுக்கிட்டுக் கெடந் தோம், அத்தென குடும்பமும். இந்த ஏரிக்குக் கேடு காலம் வந்தா அந்தப் பக்கந்தானே வர்ற வழக்கம்? அந்தப் பக்கம் ஒடெப் பெடுத்துக்கிட்டிருந்தா, கிட்டத்தட்ட நூறு குடிசெ கெடக் குதே, அந்தக் குடும்பத்தோட கதி யெல்லாம் என்ன ஆயிருக்கும்? யார் செய்த புண்ணியமோ......''

ஏதேதோ பயங்கரக் கனவுகள் கண்டு கொண்டிருந்த காளிக்கு, இந்தப் பேச்செல்லாம் அரைகுறையாக, யாரோ தூரத்தில் பேசுவதுபோல் காதில் விழுந்து கொண்டிருந்தது.

"யார் செய்த'' என்னும் வார்த்தை கள் காதில்விழவே, "ஆ...ஆ...நாந்தா னுங்க, சாமி...என்னெக் கொண்ணு வேணாலும் போடுங்க...கவுண்டரையா காலடியிலேயே...'' என்று உளறிக் கொண்டே அவன் படுக்கையைவிட்டு எழுந்தான்.

வீராயி அவனைப்பிடித்து உலுக்கி, "ஏன் அண்ணெ, என்ன ஒடம்புக்கு? ஏன் இப்படி வாய் பெனாத்தறே? ஆமா, நெலமெல்லாம் வெள்ளாருக் கெடக்குது; நீ என்ன இப்படிப் படுத் துத் தூங்கறயே?'' என்று கேட்டான்.

"நான் பண்ண வேலைதானே'' என்று விம்ம ஆரம்பித்தான் காளி.

"என்னண்ணே, திரும்பியும் என் னமோ ஒளர்றே? நீயாவது பன்ற தாவது?

"இல்லெ, கொயந்தே; பாவம், அந்த கவுண்டரோட.........''

"கவுண்டருமில்லெ, செட்டியாரு மில்லெ; அல்லாம் ரெட்டியாரு நெலத் திலேதான்...''

"ஆ!......என்ன சொன்னே? ரெட்டியாரா?''

"ஆமா, ஒங்க ஆண்டெ நிலத்திலே.''

"மாரியாயி, எல்லாம் ஒன்னோடெ வெளையாட்டுத்தாண்டி, அம்மா'' என்று மறுபடியும் படுக்கையில் சாய்ந்தான் காளி. அந்த க்ஷணமே சுரமெல்லாம் பறந்துபோய் விட்டது போலிருந்தது அவனுக்கு.

சிநேகிதன்

ஒரு வருஷத்துக்குமேல் பாடுபட்டுக்கூட ஒரு சிநேகிதனை நீ சம்பா திக்க முடியாமல் போகலாம். ஒரே மணி நேரத்தில் ஒரு சிநேகிதனை நீ இழந்துவிட முடியும்.

— சீனப் பழமொழி

'எலி பெண்டா'
-குகையிலே

நாமக்கல் கவிஞர்

✲

அரிபுராக் காங்கிரசைப் பார்த்தபின்னர்
அங்கிருந்து பம்பாய்நல் நகரைப்பார்க்கத்
திரிபுரு என் அன்பன் சாகணேசன்
தன்னோடும் அந்நகரில் திரிந்தபோது
திரிபுராந் தகனென்னும் சிவனார்கோலத்
திருவுருவக் கல்வெட்டுச் சிலைகள்சேர்ந்த
தெரிதராப் பழஞ்சரிதை எலிவெண்டாவாம்
சிறுதீவைப் பார்த்துவரச் சென்றோமங்கே.

ஆனையுருக் கருங்கல்லில் கண்டாரன்றி,
அயலறியா அன்னியர்கள் யாரோமுன்னால்
ஏனையொரு பெயர்தெரிய இயலாமல்போய்
எலிவெண்டாக் குகையென்று இசைத்தார்போலும்!
போனபெயர்க் குகைகளை நான் பார்த்தபோது,
போனஎன்றன் தமிழ்நாட்டின் புகழ்களெல்லாம்
மானமிக என்மனத்தே வந்துகுத்த,
மருண்டவிண்போல் இருண்டகுகை மயங்கிநின்றேன்.

தென்னாட்டுத் தமிழனுக்கே சிறப்பாமென்னும்
சிவஞான போதம்நிறை சிற்பமெல்லாம்
இந்நாட்டில் யார்கொணர்ந்து வந்தாரெப்போ
இச்சிலைகள் யார்வேலை என்றென்றெண்ணி
முன்னோட்டிப் பின்கூட்டி முடிபோட்டாலும்
முன்னடைந்த முடிவறிய முடியாமல்போய்ப்
பொன்னாட்டுத் தேவனைப்போல் கண்கொட்டாமல்
புத்திமட்டும் பலவிதமாய்ப் புரளநின்றேன்.

தேவாரத் திருப்பதிகம் படித்துநாளும்
தேன்கலந்த வாசகத்தில் திளைத்தபோதும்
பாவாணர் பாகவதர் பல்வேருகப்
பாடியுரை சிவகதைகள் கேட்டபோதும்
நாவாரத் தோத்திரங்கள் நானேபாடித்
தமிழ்நாட்டுச் சிவதலங்கள் நடந்தநாளும்
மேவாத புதியதொரு உணர்ச்சிமேவ
மெய்சிலிர்த்துக் கைகுவித்தேன் மேலும்என்னே!

நல்லறிஞர் உணர்வினுக்கோர் அமுதமாகும்
ராமலிங்கம் திருவருட்பா நயந்தநாளும்
பல்லரிய புலவர்புகழ் சேக்கிழாரின்
பரமசிவக் கதைகளெலாம் படித்தநாளும்
சொல்லரிய நல்லின்பம் சுவைத்தேனங்கும்
தோன்ருத புதியசுவை தோன்றிற்றம்மா
செல்லரித்த தெனத்தெரிந்த எலிவெண்டாவின்
சிவனுருவச் சிலைகளை நான் சேவித்தாங்கு.

கருதரிய சிற்சபையில் நர்த்தனென்று
கருணையறி நிருவிகற்பத் தாயுமானுர்
சுருதிநிறை ஞானமெலாம் சொல்லிவைத்துந்
துரியசபா பதிநடனம் சொல்லும்போதும்
அரிதரிது நானறிந்த ஆனந்தத்தில்
அதிகமுற்றேன் என்றுசொல அதிகமன்ரும்
ஒருபெரிய நடராஜன் உருவம்அங்கே
ஒடிந்திடிந்து நின்றதைநான் உற்றபோழ்தில்.

சித்திரத்தில் சிறப்பமைந்த சிற்பத்தோடு
கருங்கல்லில் சிலைசெதுக்கும் திறமைதன்னில்
எத்திறத்தும் பிறநாட்டார் எவரும்மிஞ்சாத்
தமிழ்நாட்டில் இலங்குபல தலங்களெல்லாம்
பத்தியென்ருே பார்வையென்ருே பரிவாய்ச்சென்று
பார்த்தடைந்த அறிவினுக்குப் பலகால்மேலாம்
அத்தினத்தே எலிவெண்டாப் பழையகீர்த்தி
அழிந்தொழிந்த குறிப்புகளால் அடைந்தஞானம்.

✲

கவிதை ஜவான்

மஞ்சேரி ஈச்வரன்

போலீஸ் ஜவான் பாராக் கொடுத்துக் கொண்டிருந்தான். கவிதையுள்ளம் படைத்த ஜவான். வாலிபன். எப்போதும் பரபரப்புடையவன். அவனுடைய ஆசைகள் அனந்தம்; பொறுமை பரவசமானது. ஏதோ ஒரு கீதத்தை அவன் முனகிக்கொண்டிருந்தான். அவனது புன்சிரிப்பு, அவன் அணிந்திருந்த யூனிபாரம் உடுப்பைவிடப் பிரகாசமாய் ஒளிசெய்தது.

நாடோடிகள், சோதாக்கள், அநாதைக் குழந்தைகள், கள்ளர்களுக்காக அவன் காத்திருந்தான்; ஆனால், எவரும் அகப்படவில்லை. மெல்லிய குரலில் வாய்க்குள்ளே ஏதோ வசவொன்றை முணுமுணுத்தான்; மூச்சைப் பிடித்துக்கொண்டு, யாருக்கோ சாபம் கொடுத்தான்.

ரஸ்தாவின் பக்கமுள்ள தோட்டத்துப் புஷ்பப் பாத்திகளின் ஓரமாய், மெல்ல மெல்ல, அவன் நடந்தான். லாடமடித்த கனமான பூட்ஸுகளைக் கழற்றிவிட்டு, கன்னிப் பசுந் தரையின் ஸ்பர்ச இன்பத்தை விரும்பி, வெறுங் காலுடன் நடந்தான். ஆனால், 'புல்லை மிதிக்காதே' என்ற எச்சரிக்கை, வெள்ளை வர்ணத்திலே எழுதப் பெற்றிருந்தது. இந்த அநாகரிக மனிதர்கள், ஆடுகளைப் போல் தன்னை - ஒரு தேவதையை- எச்சரித்துத் தடுப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்று அவன் எண்ணினன். தேன் வேட்டை புரியும் ஈக்களை விரட்டிச் சுழன்றது அவனது குறுந்தடி.

அவன் சட்டென்று நின்று, வானத்தை உற்று நோக்கி, "என்ன விநோதம்! என் குஷியான குழந்தைக்கு ஜோரான சட்டை தைக்கப் போதிய நீலத்தையும் காணேமே இந்த வானத்திலே!" என்று கூச்ச லிட்டான்.

தனது இந்த கம்பீர ஸ்வாகதத்தை அவன் முடிக்குமுன், நொடியிலே வான விதானத்தில் பல மேகக் குஞ்சுகள் அற்புத வர்ண ஜாலங்களுடன் வந்து குவிந்தன.

ஜவான் சொக்கி மயங்கி வெறித்து விழித்தான். அவனது வெறித்த நோக்கிலே, தங்கள் குஞ்சலச் சிறகுகளை அலைத்துக்கொண்டு, கந்தர்வக் கூட்டமொன்று அந்தரத்திலே தென்பட்டது. அந்த கந்தர்வ கணங்கள், மேகத் திரள்களைப் பந்துபோல் சுருட்டித் தங்கள் சின்னஞ் சிறு மார்புகளிலே அணைத்துக் கொண்டன.

ஜவானின் வதனம் கோபத்தால் செவந்தது. தன் போலீஸ் அதிகாரத்தின் முன்னிலையிலேயே இப்படியொரு திருட்டா! தன் வார்க் கச்சையைக் கழற்றி, வானிலே வீசி, அந்த இருபது கந்தர்வன்களையும் ஒரே சுருக்கிலே மாட்டியிழுக்க முயன்றான்.

வாரை வீசிய வேகத்திலே அதைப் பற்று, தரையிலே அவன் தன் குறுந்தடிமீது குத்திட்டு விழுந்துவிட்டான். வலி பொறுக்க முடியாமல் உறுமினன். அப்போது அவனுக்குப் பின்னலிருந்து திடீரென்று புறப்பட்ட ஒரு கீச்சுக்குரல் சிரிப்பு, அவன் வலியை இன்னும் கடுமை யாக்கியது.

கோபக் கனல் பறக்கும் முகத்தோடு திரும்பிப் பார்த்தான். அவனை எள்ளி நகைத்துக் கொண்டு நின்ற இன்ஸ்பெக்டர் எஜமானின் முகத்தை அங்கே கண்டான். அவனது கோபக் கனல் குளிர்ந்து போயிற்று.

எஜமான் தமது கட்டு மீசையின் இரு நுனிகளையும் முறுக்கி விட்டுக் கொண்டிருந்தார். "பராக்குப் பார்க்கிறாயா! பாட்டுப் பாடுகிறாயா!" என்று சொடுக்கினர் எஜமான். மீசையை உற்று நோக்கி, அதைக் கல்லிவிடப் போகிறவர்போல் மிக மும்முரமாய்த் திரித்துக் கொண்டே, "நீ நாசமாய்ப் போக! மறுபடியும் நீ இப்படிச் செய்து கொண்டிருக்கக் கண்டேனே, உன்னைத் தொலைத்து விடுவேன். கபர்தார்!" என்றும் கர்ஜித்தார்.

அகில உலகமும் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரையில் இருள் கவிந்தது. கவிதை ஜவானை அப்போது பார்க்க வேண்டுமே; பரவசமெல்லாம் பறந்துபோய் அவன் முகம் அச்சமயம் அழுது வழிந்ததுபோல், வேறெப் போது மிருந்த தில்லை.

✲

ஆச்சர்ய அகராதி

என்-ஸைக்ளோபீடியா-பிரிட்டானிக்கா, என்பது ஓர் ஆச்சர்யமான அகராதி. நூறுவருஷங்களுக்கு முன்னே, அதில் ஒரு 'செட்'டை பாரசீக மன்னர் ஷாவுக்கு, பிரிட்டிஷ் ஸ்தானீகர் பரிசு அளித்தார். ஷா அதையும் தம்முடைய பட்டங்களிலே ஒன்ருகச் சேர்த்துக் கொண்டார். "அதி பயங்கரப் பிரபு; என்ஸைக்ளோப்பீடியா பிரிட்டானிக்கா பண்டிதன்" என்று ஷாவின் பட்டங்களிலே ஒரு வாசகம் ஏறிவிட்டது.

ஒரு சமயம் கானடா எல்லை விஷயமாக, பிரிட்டனுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஒரு தகராறு வந்தது. அமெரிக்க மந்திரி ஜேம்ஸ் ஜி. பிளேன், தம் கட்சிக்குச் சாதகமாக என்ஸைக்ளோப்பீடியா பிரிட்டானிக்காவில் உள்ள ஒரு படத்தை ஆதாரம் காட்டி, ஜயித்துவிட்டார்.

* *

அவர் விடவில்லை: 'நான் அதன் மாலுமி. நான் கப்பலை விட்டு விடவில்லை. அது என்னை விட்டுப் போய்விட்டது.'

—ஹாஜி எம். எஸ். சௌதுரி (முழுகிய ராயல் இந்தியன் நேவி கப்பல் தலைவர்.)

வென்றவரும் தோற்றவரும்

ஜேயார்

'மூன்ருவது முறையும் அவரேயா?' என்று நான்கு வருஷங்களுக்கு முன்னே பலர் பெரு மூச்சுவிட்டார்கள்.

'அல்ல, அல்ல. நான்காவது முறையும் நான்தான்' என்று கம்பீரமாய் முன் வந்து நிற்கிருர் ஜனதிபதி ரூஸ்வெல்ட்.

அமெரிக்க ஜனதிபதி தேர்தலில் நான்குதடவைகள் வென்று 'தவி ஏற்றவர், இதுவரையில் ரூஸ்வெல்ட் ஒருவர்தான். இதை ஜனநாயக சரித்திரத்திலேயே ஒரு புதுமை என்றும் சொல்லலாம்.

ரூஸ்வெல்ட் 'டெமக்ராட்' (ஜனநாயகவாதி) கட்சியைச் சேர்ந்தவர். இவருடன் போட்டியிட்ட தாமஸ் டியூவி 'ரிப்பப்ளிகன்' (குடியரசுவாதி) கட்சியைச் சேர்ந்தவர். இந்த இரண்டும்தான் அமெரிக்காவிலேயே மிக முக்கியமான அரசியல் கட்சிகள். வேறே குறிப்பிடத் தக்க கட்சி எதுவும் அங்கே கிடையாது. அயல் நாட்டு விவகாரம் சம்பந்தப் பட்ட மட்டில், இந்த இரண்டுக்கும் இப்போது அதிக வேற்றுமை கிடையாது. உள்நாட்டுக் கொள்கைகளில்தான், வேற்றுமைகள் இருக்கின்றன. முக்கியமாய், முதலாளிகளைக் கட்டுப்படுத்தும் சில சட்டங்களை ரூஸ்வெல்ட் செய்தது, போர்டு, மார்கன் போன்ற முதலாளிகளுக்குப் பிடிக்கவில்லை. அந்தச் சட்டங்களை எதிர்ப்பதுதான் 'ரிபப்ளிக்கன்' கட்சியாரின் பிரதம நோக்கம். அதாவது, முதலாளிகளுக்குப் பரிபூர்ண சுதந்தரம் வேண்டு மென்பது அவர்களின் கருத்து. ரூஸ்வெல்ட் அதற்கு இடங் கொடுக்கவில்லை.

அமெரிக்க ஜனதிபதி தேர்தலிலே, மீண்டும் வென்றுவிட்டார் ரூஸ்வெல்ட். அவருக்கு எதிராய் நின்று தோற்றவர் டியூவி. இருவரும் எப்படிப்பட்டவர்கள்? வெற்றி தோல்வியின் காரணங்கள் யாவை? இவ் விவரங்களை இந்தக் கட்டுரையிலே காணலாம்.

ரூஸ்வெல்டுக்கு வயது 62. டியூவிக்கு வயது 42. ரூஸ்வெல்ட் ஒரு பாரிஸ்டர். டியூவியும் ஒரு லாயர்தான். ஆனல், வாலிபத்திலேயே கடற்படையில் சேர்வதுதான் ரூஸ்வெல்டுக்கு ஆசை. டியூவியோ, சட்டத் தொழிலில் வல்லவர்; கீர்த்தி பெற்றவர்.

ரூஸ்வெல்ட் 1907-ஆம் ௵ பாரிஸ்டரானர். 1910-ஆம் ஆண்டு நியூயார்க் மாகாணத்தின் ஒரு செனேட்டராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். சென்ற யுத்தத்தில், கடற்படை உதவி மந்திரியாயிருந்தார். 1929-ஆம் வருஷத்திலிருந்து நான்கு வருஷங்கள் நியூயார்க் மாகாண கவர்னரா யிருந்தார். 1932-ஆம் ௵ பழைய ஜனதிபதி ஹூவரைத் தோற்கடித்து, தாம் அந்தப் பதவியைப் பெற்ருர். பின்னல், 1936, 1940 இரண்டு வருஷங்களிலும் மீண்டும் வெற்றி பெற்று, தொடர்ந்து 12-வருஷங்களாகத் தாமே ஜனதிபதியா யிருந்து வருகிருர்.

டியூவி 1925-ஆம் ௵ லாயரானர். 1931-ஆம் ௵ ஐக்கிய அமெரிக்க சர்க்காரின் அட்டார்னிக்குப் பிரதம அசிஸ்டெண்டானர். 1933-ஆம் ௵ அட்டார்னியே ஆகிவிட்டார். 1934-௵ மிட்சல் வரி வழக்கில் ஆஜராகி, சிறந்த கிரிமினல் லாயர் என்று கீர்த்திபெற்றுவிட்டார். இருபது வருஷமாய் நியூயார்க்கில் ஆதிக்கம்செலுத்திக்கொண்டிருந்த கவர்னர் லேஹ்மானை, 1942-ஆம் ௵ ஜனவரி மாதத்தில் தோற்கடித்து, அந்தப் பதவியை டியூவி, கைப்பற்றினர்.

ரூஸ்வெல்ட் நல்ல அழகன். அவர் மனைவி எலீனரோ அவ்வளவு அழகியல்ல. அவர்களின் காதலே ஒரு விசித்

திரமாகும். ஒரு நடனம் நடந்துகொண்டிருந்தது. எலீனருடன் ஜோடி சேர எந்த வாலிபனும் முன் வரவில்லை. வாலிப ரூஸ்வெல்ட் இதைக் கண்டு பரிதாபம் கொண்டார். தாமே அவளுக்கு மீண்டும் மீண்டும் ஜோடி சேர்ந்தார். இதிலிருந்தே அவர்களுக்குள் காதல் பிறந்தது. கணவருக்கு எலீனர் பேரன்புடன் பணிவிடை செய்கிறாள். 1932-ஆம் ஆண்டு அமெரிக்காவில் பொருளாதார நிலை கலகலத்தது. பாங்கிகளெல்லாம் உளுத்துக் கிடந்தன. இந்நிலையில் ஜனாதிபதி பதவிக்கு ரூஸ்வெல்ட் போட்டியிட்டு வென்றார். அந்த நெருக்கடியைத் தீர்த்தார். அன்று முதல் இன்றுவரையில், அமெரிக்காவில் ஏகசக்ராதிபத்தியம் செலுத்தி வருகிறார்.

டியூவி இந்தத் தடவை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவார் என்று 1940-ஆம் வருஷமுதலே பேச்சு இருந்துவந்தது. அப்போதே இவருக்கு ஓரளவு கீர்த்தி வந்துவிட்டது. சமீபத்தில் நியூயார்க் கவர்னர் பதவி பெற்றவுடனே, அவருடைய நிர்வாகத்துக்கு நல்ல புகழ்கிடைத்தது. தூர்த்தர்களையெல்லாம் ஒழித்து, நிர்வாகத்தை அவர் தூய்மைப்படுத்தினார். பணக்காரர்களைக் காக்காய் பிடிப்பதோ, உறவினர்களுக்குச் சலுகை காட்டுவதோ, அவரிடம் கிடையாது. நண்பர்கள் என்றும், சொந்தக்காரர்களென்றும் அவரிடம் சிலர் உத்தியோகப் பிச்சைக்கு வந்தார்கள். அவர்களையெல்லாம் அவர் போலீஸாரிடம் ஒப்படைத்துவிட்டார்!

இந்த டியூவி தோற்று விட்டார். ரூஸ்வெல்டே வென்று, மீண்டும் நான்காவது முறையாக ஜனாதிபதியாகி விட்டார். காரணங்கள் என்ன?

(1) யுத்தம், அந்நியநாட்டுக் கொள்கை இரண்டு பற்றியும் ரூஸ்வெல்ட்டின் 'டெமொக்ராட்டிக்' கட்சிக்கும், டியூவியின் 'ரிபப்ளிக்கன்' கட்சிக்கும் இன்று அதிக வேற்றுமை இல்லாவிட்டாலும், சிலகாலத்துக்கு முன் வரையில், "ஐரோப்பிய விவகாரங்களில் நாம் மாட்டிக்கொள்ளலாகாது; ஒதுங்கியே இருக்கவேண்டும்" என்றுதான் 'ரிபப்ளிக்கன்' கட்சி சொல்லிவந்தது.

(2) ரூஸ்வெல்ட் உலகெங்கும் கீர்த்திபெற்ற பழைய நிர்வாகி; வசீகர புருஷன்; தொழிலாளர், போர்வீரர்களிடமெல்லாம் செல்வாக்குப் பெற்றவர். டியூவி புதிதாய்ப் புகழ் அடைந்திருக்கும் நிர்வாகி; அவர் கட்சி, முதலாளிகளுக்கே ஆக்கம் தேட முயல்கிறது என்ற சந்தேகம் இருந்துவருகிறது.

(3) இதுதான் முக்கியமான காரணம்: பாதி ஆற்றிலே போகும் வண்டியின் குதிரையை மாற்றலாமா? யுத்தம் நடந்து முடியும் வரையில், பெரிய நெருக்கடி நேரமட்டும், சுதந்தர ஜனநாயக நாடுகளின் ஜனங்கள், தங்கள் தலைவனை மாற்றச் சம்மதிக்கமாட்டார்கள். ஏனெனில், அது வெளி உலகத்திலே - ஏன், உள் நாட்டிலே கூடத்தான் - தவறான அபிப்பிராயத்துக்கு இடங் கொடுத்துவிடும்.

ரூஸ்வெல்டின் தேர்தல் வெற்றி, ஐக்கிய நாடுகளுக்கு மிக நல்ல பலமாகும். அவரது வெற்றியைக் கேட்டவுடனே, சர்ச்சிலுக்கு ஒருபுறம் பெரிய சந்தோஷம்; மறுபுறம், வரப்போகும் தங்கள் தேர்தலைப்பற்றி ஒரு பயமும் ஐயமும். ஆனால், இந்தியாவுக்கு இதிலே ஏதாவது லாபமுண்டா? சொல்ல முடியாது.

✲

புல்லும் வெற்றிலையும்

ஒருவன்: வெற்றிலை சுவைக்கும் பெண்ணுக்கும், புல்லை அசைபோடும் பசுவுக்கும் என்ன வித்தியாசம்?

மற்றவன்: பசுவின் முகம் புத்திசாலித் தனமா யிருக்கும்.

*

*

ஈட்டி ஆசனம்: "ஒரு மனிதன் ஈட்டிகளைக் கொண்டு தனக்கு ஒரு சிம்மாசனம் அமைத்துக் கொண்டுவிடலாம். ஆனால், அதில் அவன் உட்கார்ந்து கொள்ளத்தான் முடியாது."

—டீன் இஞ்ஜ்



சரித்திர சிருஷ்டிகர் ரூஸ்வெல்ட்

நான்காவது முறையும் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்தலில் ரூஸ்வெல்ட் வெற்றிபெற்றது, இதுவரையில் அமெரிக்க சரித்திரத்திலேயே காணாத புதுமையாகும். பிலிப்பைனில் அமெரிக்கப் படைகள் புகுந்து சண்டையிடும்போதே, பிலிப்பைன் சுதந்தர நாடுதான் என்று அறிக்கை செய்த தீரர் அவர். ஒதுங்கியிருக்க முயன்ற அமெரிக்காவை, மெல்ல மெல்ல ஐக்கிய நாடுகளின் பக்கம் சாய்த்து, யுத்தத்திலே இழுத்துவிட்ட பெருமையும் அவரைச் சேரும்

மேலே :

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பிராங்க்ளின் டிலானோ ரூஸ்வெல்டும் அவர் மனைவி எலினர் ரூஸ்வெல்டும்

கீழே :

இடம் : குழந்தைப்பருவத்தில் எலினர். "உனக்கு அழகில்லை; அந்தக் குறையை உன் நற்குணத்தால் ஈடுசெய்" என்று அப்போது அவளை அவள் தாய் எச்சரித்தாள்.

வலம் : மூன்று வயதில் ரூஸ்வெல்ட். இவரை அப்போதைய ஜனாதிபதி கிளீவ்லாண்டிடம் கொண்டுபோனபோது, "தம்பி! நீ ஒருபோதும் ஜனாதிபதியாக மாத்திரம் ஆகிவிடக்கூடாது. அதுதான் என் பிரார்த்தனை" என்று அவர் ஆசீர்வதித்தார்!

அமெரிக்கத் தேர்தல் படங்கள்

மேலே :

பிராங்க்ளின் டிலானோ ரூஸ்வெல்டின்
தேர்தல் பிரசாரச் சுவரொட்டி
விளம்பரங்களில் ஒன்று



மேலே :

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில்
தோல்வியடைந்த தாமஸ் டியூவி.
கண்டிப்பான நிர்வாகி என்று
கீர்த்தி பெற்ற நியூயார்க் கவர்னர்



மேலே :

டியூவியின் தேர்தல் பிரசாரச்
சுவரொட்டிகளில் ஒன்று



பக்கம் :

டியூவியின் பிரசங்கம் என்றால்,
கொட்டகை கொள்ளாக் கூட்
டம் சேருமாம்



அமெரிக்கப் பார்லிமெண்ட் என்று சொல்லத்தகும் காங்கிரஸ் மண்டபம். நமது காங்கிரஸ், சுதந்தரப் போரை நடத்திக் கொண்டிருப்பது. அமெரிக்கக் காங்கிரஸ் ஆட்சி புரிவது. இதை நாம் நினைவில் வைக்கவேண்டும்

பெண் கல்வி — இது சரியா?

வெ. சாமிநாத சர்மா

பெண்களின் கல்வி முறை இப்படித் தான் இருக்கவேண்டு மென்று திட்டம் வகுக்க, ஆண்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அப்படி அதிகாரம் இருந்தாலும் அவர்களுக்கு என்ன தெரியும்? தங்களுடைய கல்விமுறையைச் சீர்திருத்திக்கொள்ளவே அவர்களுக்குத் தெரியவில்லை; அவர்களால் முடியவில்லை. அப்படியிருக்க, பெண்களுக்கு அவர்கள் வழிகாட்டுவ தெப்படி? "வைத்தியனே, உன் உடம்பை நீ முதலில் சொஸ்தப்படுத்திக்கொள்; பிறகு மற்றவர்களுக்கு வைத்தியம் பார்க்கலாம்" என்று பெண்கள் சொல்வார்களானால், அதற்காக ஆண்கள் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

வமிச பரம்பரையாக வந்துகொண்டிருக்கும் நம்முடைய ஆசார விவகாரங்கள், குலதருமங்கள், குடும்ப பத்ததிகள் முதலியவைக ளெல்லாம் இன்னும் நம்மை விடாமல் ஒட்டிக்கொண்டிருக்கின்றன என்று சொன்னால், அதற்குக் காரணம் ஸ்திரீகள் தான். ஆண்களை போலவே பெண்களும் சென்ற நூற்றாண்டிலிருந்தே மேனாட்டுக் கல்விமுறையில் ஈடுபட்டிருந்திருப்பார்களானால், பாரத ஜாதி என்ற பெயரே இப்பொழுது இல்லாமல் போயிருக்கும்; சுதந்திரப் போராட்டத்துக்கே அவசியம் இருந்திராது. நாம் ஏன் சுதந்திரம் வேண்டுமென்கிறோம்? நம் நாகரிகமும், கலாசாரங்களும், தரும நியாயங்களும் சிதைவுறாமல் ஜீவசக்தியோடு சலித்துக்கொண் டிருப்பதற்குத் தானே? அவைகளை நாம் காப்பாற்றிக்கொண் டிருப்பதற்குத்தானே? அப்படி அவைகளைக் காப்பாற்ற வேண்டுமானால், அவைகள் முதலில் உயிரோடு இருக்கும்படி செய்யவேண்டியது அவசியமல்லவா? இந்தக் கைங்கரியத்தைத் தான் ஸ்திரீகள் செய்துகொண்டு வருகிறார்கள். அதாவது நம் நாகரிகம் முதலியன இன்னும் சாகாது, உயிரோடிருப்பதற்குக் காரணம் நம் சகோதரிகள்தான்.

இந்தியப் பெண்களின் கல்வி முறை எப்படியிருக்கவேண்டும்? ஆணும் பெண்ணும் ஒரே கலாசாலையில் சேர்ந்து படிக்கலாமா? இந்த விஷயங்களில் நம்முடைய பழைய ஐதிகங்களைத் திட்டிக்கொண் டிருப்பது சரியா, தவறா? இந்தக் கேள்விகளுக்கு, தம் சொந்த அபிப்பிராயங்களைத் திடமாய் வெளியிடுகிறார் சர்மாஜி.

ஆனால் துரதிருஷ்ட வசமாக, இப்பொழுது மேனாட்டுக் கல்வி பயின்ற நம் சகோதரிகள், நமது நாகரிகத்தின் உயிரைக் காப்பாற்றும் வேலையைச் சீக்கிரத்தில் மறந்துவிடுவார்களோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. ஸ்கூல்பைனல் பரீட்சையில் தேறின ஒரு பெண், தனக்குச் சமையல் செய்யத் தெரியாதென்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்கிறாள்; சாணத்தைக் கையினால் தொடுவதற்குக் கூசுகிறாள்; மஞ்சள் பூசுவது பாட்டிமார் வழக்கம் என்று ஏசுகிறாள்; துளசியின் அருமையைக் காட்டிலும் கனகாம்பரத்தின் அழகுதான் விசேஷம் என்று தர்க்க நியாயத்தோடு பேசுகிறாள். இந்த மாதிரியான மனப்பான்மையுடன் நம் பெண் குழந்தைகளை வளர்த்துக்கொண்டு வருவோமானால், இன்னும் ஒரு தலைமுறைக்குள், நிச்சயம், நமது பாரத ஜாதி சலசலத்துக் கீழே விழுந்துவிடும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே மாதிரியான கல்விமுறை இருக்க வேண்டும், ஆணும் பெண்ணும் ஒரே பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று சொல்கிறவர்கள், நமது நாகரிகத்தின் ஆணிவேரை

வெட்டுகிறவர்கள். எப்படிக் கதர் உடுப்பதும் காந்தியைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதும் சிலபேரிடத்தில் ஒரு சம்பிரதாயமாகவும் நாகரிகமாகவும் ஆகிவிட்டதோ அப்படியே, ஆணையும் பெண்ணையும் சேர்த்து ஒரே பள்ளிக்கூடத்திற்கு ஒரே மாதிரியான பாடங்களைப் படிக்க அனுப்ப வேண்டுமென்று சொல்வதும் சம்பிரதாயமாகவும் நாகரிகமாகவும் ஆகிவிட்டது. அப்படிச் சொல்வதற்கு உள்மனம் கூசினாலும், பகிரங்கத்தில் அப்படிச் சொல்லாவிட்டால் 'பட்டிக் காட்டான்' என்று சொல்லப்போகிறார்களே என்று சிலருக்கு அச்சம். 'பாழாய்ப்போன இந்தப் படிப்பினால் ஒரு பைசாக்கூடப் பிரயோசனமில்லை; பெரியோர்கள் கஷ்டப்பட்டுச் சேர்த்துவைத்த சொத்தெல்லாம் உப்புப்போல் கரைந்துகொண்டே வருகிறது' என்று முணுமுணுத்துக் கொண்டே எப்படி நம்முடைய ஆண்பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறோமோ அப்படியே, 'பெண்ணைப் படிக்க வைத்தால் தானே நாளைக்கு நல்ல வரன் கிடைக்கும்' என்று மணல் கோட்டை கட்டிக்கொண்டே பெண் பிள்ளைகளையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறோம். ஆக, யாருக்குமே தற்போதைய கல்விமுறையில் நம்பிக்கையில்லை. அதில் குறைகள் பல நிறைந்திருக்கின்றன என்பதை எல்லோரும் உணர்கிறார்கள். ஆனால், அவைகளுக்குப் பரிகாரம் என்ன என்பதைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லை; சிந்தித்தாலும், செயலுக்குக் கொணரும் அதிகாரம் நம்மிடத்தில் இல்லை.

எப்பொழுதுமே, ஒரு நாட்டினுடைய கல்விமுறை அதிகாரம் அந்த நாட்டு மக்களின் ஆதீனத்திலேயே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த நாட்டுக்குரிய கல்வி, ஜனங்களுக்குக் கிடைக்கும். ஜனங்களுடைய அபிலாஷைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்யாத முறையில் எந்தக் கல்வி இருக்கிறதோ, அது அந்த ஜனங்களை வெகு சீக்கிரத்தில் அடிமைப்படுத்தி விடும்; ஜனங்களே ஜனங்களுக்குக் துரோகிகளாகிவிடுவார்கள். எப்பொழுது அவர்கள் தங்களுடைய பூர்விகத்தைப்பற்றி ஓர் இழிவான எண்ணங் கொண்டுவிடுகிறார்களோ அப்பொழுதே அவர்கள் தங்களுடைய அழிவைத் தேடிக் கொண்டவர்கள் தானே? அப்படிப் பட்டவர்கள் பிறருக்கு எளிதாக அடிமைப்பட்டுப்போவதில் என்ன ஆச்சரியம்? தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் வேலையில் இறங்கியிருக்கிற ஒரு ஜாதியைத்தானே அயலார் வந்து அழிக்கமுடியும்? தற்காலக் கல்வி முறையினால், நாம் அழிந்து கொண்டு வருகிறோமா, உயர்ந்து கொண்டு வருகிறோமா என்று, ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்தல் நல்லது.

இன்றைய கல்வித் துறையிலே முழுகி எழுந்த நாம், நம் மூதாதையர்களை முட்டாள்களென்று கருதுகிறோம்; அவர்களுக்கு உலக விவகாரங்களே தெரியாமலிருந்தது என்று நம்புகிறோம்; அவர்களைக் 'கிணற்றுத் தவளைகள்' என்று பரிகாச தோரணையில் பேசுகிறோம்; காலத்தின் மதிப்பை அறியாமல் நிதானமாகவே ஒவ்வொரு காரியத்தையும் செய்து வந்தார்கள் என்று அவர்களைப்பற்றிக் கதைகள் இட்டுக் கட்டுகிறோம். சரி; அப்படியே அவர்கள் முட்டாள்களாகவே இருக்கட்டும்; முழுச் சோம்பேறிகளாகவே இருக்கட்டும். இப்பொழுது நாம் புத்திசாலிகளாயிருந்து எந்த ஸ்திதியிலிருக்கிறோம்? நாகரிகர்களாகி எப்படி வாழ்க்கை நடத்துகிறோம்? மோட்டாரிலே வேகமாகச் சென்று என்னென்ன காரியங்களைச் சாதிக்கிறோம்? முதலாவது, அவர்களைவிட நாம் பலசாலிகளாயிருக்கிறோமா? அவர்களைவிட அதிகமான மன உறுதி நம்மிடத்தில் இருக்கிறதா? வெயிலிலே சிறிதுநேரம் நடந்தாலும், மழையிலே கொஞ்சநேரம் நனைந்தாலும், நம்மால் தாங்கமுடியவில்லை. அமாவாசை இருட்டில் தனித்துச் செல்ல நாம் தயங்குகிறோம். இது போகட்டும். அவர்களைப் போல உண்டு உடுத்து, சுற்றத்தாரையெல்லாம் கட்டியணைத்துக்கொண்டாவது வாழ்க்கையை நடத்துகிறோமா? இல்லை. 'உழுதுண்டு வாழ்வாரே

வாழ்வார், மற்றெல்லாந் தொழு துண்டு பின் செல்பவர்' என்ற உண்மையை அறிந்து அவர்கள் தேடி வைத்துப்போன நிலபுலன்களை விக்கிரயம் செய்யாமலோ அடமானம் வையாமலோ பத்திரமாகக் காப்பாற்றி வருகிறோமா? இல்லை. எல்லாம் போகட்டும். மன அமைதியுடனவது வாழ்கிறோமா? இல்லை. புற வாழ்க்கையே இப்படி இருக்கிறபோது, அக வாழ்க்கையைப் பற்றிச் சொல்வானேன்? நமது நாகரிக வாழ்க்கையின் முன்னே உண்மை ஒடுங்கிக்கிடக்கிறது; ஒழுக்கம் அழுக்கடைந்து கிடக்கிறது; கீழான இச்சைகள், மேலான இருதயத்தைக் கவிந்து கொண்டிருக்கின்றன. கோயிலுக்குச் சென்றுகொண்டே கடவுளை ஏமாற்றுகிறோம்; கையிலே கடிகாரத்தைக் கட்டிக்கொண்டே காலத்தை வீணுக்குகிறோம். எனவே, நம் முன்னோர்களை விட, நாம் எந்த விதத்தில் முன்னேறியிருக்கிறோம்? அவர்களை முட்டாள்களென்று சொல்லிவிடுவதனுலேயே நாம் புத்திசாலிகளாகிவிடுவோமா? நாம் புத்திசாலிகளாகவே இருப்போம்; நிச்சயமாக நாம் புத்திசாலிகள்தான். ஆனால், அதற்காக மூதாதையர்களெல்லோரையும் முட்டாள்களாக்கிவிட வேண்டியது அவசியமில்லையல்லவா?

தற்காலக் கல்வி, நம் அறிவையும் உள்ளத்தையும் தலைகீழாகத் திருப்பிவிட்டிருக்கிறது. அலங்கார பாஷையில் சொல்லப்போனால், நாம் தலைகீழாக நடக்கிறோம். தலைகீழாக நடக்கிறவர்கள், உள்ளதை உள்ளபடி பார்க்க முடியுமா? எதற்காக இப்படிச் சொல்கிறோமென்றால், நமது அன்றாட வாழ்க்கையிலே எவை எவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அவை அவற்றிற்கு முக்கியத்துவம் கொடாமல், எவை எவை முக்கியமில்லையோ அவை அவைகளை அவசியமாக, சுறுசுறுப்பாகச் செய்கிறோம். உதாரணமாக, வீட்டிலே பெற்ற தாயார் உடுத்திக்கொண்டிருக்கிற சேலை கிழிந்து போயிருக்கும். அவள் முணுமுணுத்துக் கொண்டேயிருப்பாள். அது நமது காதில் விழாது. மோட்டாரில் வேகமாகத் துணிக்கடைக்குச் சென்று ஜன்னலுக்குத் திரைபோடப் பகட்டான சீமைத் துணியை வாங்கிக்கொண்டு வருவோம். நம்முடைய தேவைக்காகவோ, பிறர் மெச்சுவதற்காகவோ ஒரு தோட்டக்காரனை வைத்துக்கொண்டிருக்கிறோம். அவன், கிணற்றிலிருந்து தண்ணீர் இழுப்பதற்குத் தாம்புக் கயிறு அறுந்துவிட்டதென்று மூன்று நாளாக முறைத்துக்கொண்டிருப்பான். நாம் அவசரமாகப் போய், வாசனையும், வர்ணமும், அழகும் இல்லாத 'குரோட்டன்ஸ்' செடிகளை வாங்கி வரிசையாகத் தோட்டத்தில் வைப்போம். பண்டிகைகள் வந்தால், கடவுளின் மீது நமது மனம் செல்லுகிறதோ இல்லையோ, பட்சணங்கள் மீது நம் நாட்டம் செல்லுகிறது.

இப்படிப்பட்ட தன்மைகளை வளர்த்துக்கொண்டு வருகிற கல்விமுறையை நம் சகோதரிகளுக்குப் புகட்டலாமா? ஏற்கெனவே, அவர்கள், இந்தப் புதிய கல்வி முறையினால் ஆண்களைப்போல ஆகிவருகிறார்கள். உதாரணமாக, பெற்ற தந்தையோ கூடப் பிறந்த சகோதரனோ, "சட்டை கிழிந்துவிட்டது; கொஞ்சம் தைத்துக்கொடு" என்று அடக்கமாகக் கேட்டால், "முடியாது" என்று மிடுக்காகப் பதில் சொல்லிவிட்டு, 'பூத்தையல்' கற்றுக்கொள்ளப் பறந்து செல்வார்கள். "பூத்தொடுத்துத் தலையிலே வைத்துக்கொள்" என்றால், "பாட்மிண்டன் ஆடச் சீக்கிரம் போக வேண்டுமே" என்பார்கள். "கோலமிடு" என்றால் "குனிய முடியாது" என்பார்கள். இப்படியெல்லாம் நாம் சொல்வதனால், நம் இளைஞர் சமூகத்தைப் பரிகசிக்கிறோம் என்று யாரும் கருதக்கூடாது. அவர்கள் எந்த விதமான சூழ்நிலையில் வளர்ந்து வருகிறார்கள் என்பது குறித்து அவர்களிடத்தில் நமக்கு நிரம்ப அனுதாபமுண்டு. இந்தச் சூழ்நிலை, அவர்களுடைய சிருஷ்டியல்ல; நம் அரசியல் தலைவர்களுடைய சிருஷ்டி.

பணம் படைத்த சில பெற்றோர்கள் தங்களுடைய பெண் குழந்தைகளை, கிறிஸ்துவப் பாதிரிமார் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிப் பெருமை

கொள்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களில் ஒழுங்கு, மரியாதை முதலியன கற்றுக்கொடுக்கப்படுகின்றனவாம்! மற்றப் பள்ளிக்கூடங்களில் நிருவாக ஊழல் நிறைந்திருக்கிறதாம்! நம்மைப்பற்றி நாம் எவ்வளவு தாழ்வாக எண்ணிக்கொண்டிருக்கிறோம் என்பதற்கு, இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? மேற்படி பள்ளிக்கூடங்களில் படிக்கிற பிள்ளைகள் ஆங்கில மோஸ்தரில் உடை தரித்துக்கொள்ள வேண்டும்; நெற்றியிலே பொட்டிட்டுக் கொள்ளக் கூடாது. இவ்வளவு என்ன? பெயரைக்கூட மாற்றிக்கொண்டு விடவேண்டும். அம்பாள், 'ஆனி' (Anne) ஆகிவிடுகிறாள்! காந்திமதி 'காதரைன்' (Catherine) ஆகிவிடுகிறாள்! ஆண் பிள்ளைகளை மேற்படி பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதையே நாம் வெறுக்கிறோம்; நமது பாரத ஜாதிக்கு அது பெரிய அவமானமென்று கருதுகிறோம். பெண்களையும் இப்பொழுது அதிகமாக அனுப்பத் தொடங்கியிருக்கிறார்கள். நம் அரசியல் தலைவர்கள் இதை நிறுத்தவேண்டும்; ஸ்திரீ சமூகத்தின் பிரதிநிதிகளும் இதைக் கவனிக்கவேண்டும்.

பெண்களுக்கு மேனாட்டு முறையில் கல்வியளித்து வருவதன் பயனாக, சென்ற ஒரு தலைமுறைக் காலத்தில் நமது குடும்ப வாழ்க்கையில் எத்தனையோ மாறுபாடுகள் ஏற்பட்டுவிட்டன. பட்டதாரிகளான தம்பதிகள், ஒற்றுமையான வாழ்க்கையை நடத்துவது அத்திப்பூ வாகிவிட்டது. வருமானம் குறைந்த அளவுக்குச் செலவு ஏறிக்கொண்டு வருகிறது. அந்நிய நாட்டுப் பொருள்கள் வீட்டிலே நடமாடுவது சகஜமாகிவிட்டது. ஏக குடும்பம் என்பது போய், தனித்தனியாகப் பிரிந்து வாழவேண்டும் என்ற எண்ணம் வலுத்துவிட்டது. அன்பு, அருள், தியாகம் முதலியன எல்லாம், எங்கே போய் ஒளிந்துகொள்ளலாம் என்று இடம் தேடிக்கொண்டிருக்கின்றன. குடும்ப வாழ்க்கை, இப்படிச் சலசலத்துக்கொண்டு வருவதன் பயன், இப்பொழுது நமக்குப் பகிரங்கமாகத் தெரியாமலிருக்கலாம். ஆனால் அடுத்த தலைமுறையில் நன்றாகத் தெரியப்போகிறது. குடும்ப வாழ்க்கை ஹோட்டல் வாழ்க்கையாகவோ, லேவாதேவித் தொழில் நடத்தும் கடையாகவோ ஆகிவிடப் போகிறதே என்று நாம் ஏக்கப்படுகிறோம். ஏனென்றால், குடும்பத்திலிருந்துதான் தேசம் பிறக்கிறது. தேசம் க்ஷேமமா யிருக்கவேண்டுமானால், குடும்பம் க்ஷேமமா யிருக்க வேண்டும். இதனாலேயே குடும்பத்தைப்பற்றி நாம் அதிகமாகக் கவலைப்படுகிறோம்.

பெண்கள், இயற்கையாகவே சூட்சும அறிவு வாய்ந்தவர்கள். ஞாபக சக்தியும் அவர்களுக்கு அதிகமுண்டு. அவர்களுடைய வாழ்க்கையே ஒரு போதனை. அந்தப் போதனையிலிருந்து, பாடம்படியாத ஆண்மகன், அவளுக்கு-அந்தப் பெண்மகளுக்கு-போதிக்கத் துணிச்சல் கொண்டுவிடுகிறான். என்ன ஆச்சரியம்?

பொதுவாகவே, ஆண்மகன் ஆண்தன்மை யுள்ளவனாகவும், பெண்மகள் பெண் தன்மை யுள்ளவளாகவும் இருந்தால்தான், பரஸ்பரம் இரு சாராருக்கும் நல்லது; இரு சாராருக்கும் பெருமை.

✲

எல்லாம் மோசமானதன் பலன்

இங்கிலாந்தில் ஒரு நாள் சாயங்காலம் ஒரு தேனீர் விருந்து நடந்துகொண்டிருந்தது. அப்போது சில ஜனங்கள் பேசுகையில், "இந்தச் சனியன் பிடித்த யுத்தம் ஆரம்பித்ததோ யில்லையோ, சிகரெட்டுகள் மோசமாகிவிட்டன; மது வகைகள் மோசமாகிவிட்டன; பஸ்கள் மோசமாகிவிட்டன; சகலமுமே மோசமாகிவிட்டன" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இடையிலே ஒரு மனிதன் குறுக்கிட்டு, "மனிதர்கள் மட்டுமே நல்லவர்கள் ஆகிவருகிறார்கள்" என்றான்.

கதம்பம்

முதலாளித்துவம்: ஒரு கச்சேரிக்குள்ளே சென்ற ஒரு முதலாளி, சுருட்டுக் குடித்துக்கொண்டு நின்றார். வில்லைச் சேவகன் ஒருவன் அங்கே வந்து, "இங்கே இப்படிப் புகை குடிக்கக்கூடாது. குடித்தால், ஐந்து ரூபாய் அபராதம் செலுத்தவேண்டும்" என்றான்.

"அப்படியா? இந்தா" என்று சொல்லி, ஒரு பத்துரூபாய் நோட்டை நீட்டிய முதலாளி, "அபராதத்தை எடுத்துக்கொள்" என்றார்.

"என்னிடம் சில்லறை இல்லீங்களே" என்றான் சேவகன்.

"பரவாயில்லை" என்ற முதலாளி, பக்கத்தில் நின்ற தம் குமாஸ்தாவிடம் ஒரு சுருட்டை நீட்டி, "வேலு! நீயும் ஒன்று புகைத்துவிடு" என்றார்!

* *

தேர்தல் பிரசாரக் கதை: ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டைப்பற்றி, டியூவி கட்சியார் (ரிபப்ளிக்கன்) ஒரு விஷமமான கதை கட்டியிருக்கிறார்கள்:

ஜனாதிபதி ரூஸ்வெல்டின் சிலை ஒன்றை எங்கே வைப்பது என்று ஒரு கமிட்டியார் விவாதித்தார்களாம்.

"வாஷிங்டன் சிலைக்குப் பக்கத்திலே இதை வைக்கக்கூடாது; ஏனெனில், வாஷிங்டன் பொய்யே சொன்னதில்லை. லிங்கன் சிலைக்குப் பக்கத்திலும் இதை வைக்கலாகாது; ஏனெனில், லிங்கன் மகா நாணயஸ்தன். கொலம்பஸ் சிலைக்குப் பக்கத்திலேதான் இதை வைக்கவேண்டும். ஏனெனில், கொலம்பஸ், தாம் எங்கே போகிறோமென்று தெரியாமலே போனார்; அங்கே சேர்ந்ததும், அது எந்த இடம் என்று தெரியாமலேயிருந்தார்; திரும்பியபின், எங்கே போனோம் என்று தெரியாமலே விழித்தார்; இத்தனை காரியத்தையும் கடன் வாங்கிய பணத்தைக் கொண்டே செய்தார்" என்று கமிட்டியார், கடைசியிலே தீர்மானித்தார்களாம்.

* *

கேளு கேள்விகள்: தந்தையும் மகனும் தெருவிலே சென்றுகொண்டிருந்தார்கள்.

லாந்தர்க் கம்பங்களைப் பார்த்த சிறுவன், "அப்பா, இந்த மின்சாரம் எப்படி வேலை செய்து, விளக்குக்கு ஒளி கொடுக்கிறது?" என்று கேட்டான்.

"தெரியாது" என்று உதட்டைப் பிதுக்கினார் தந்தை.

சற்று தூரம் சென்றதும், வானம் கறுத்தது. மின்னல் வீசியது. இடியிடித்தது. இருவரும் கொஞ்சம் நடையை எட்டிப் போட்டார்கள்.

"அப்பா, இந்த மழை எப்படிப் பெய்கிறது? மின்னல் எப்படி மின்னுகிறது? இடி எப்படி இடிக்கிறது?" என்று சிறுவன் வினவினான்.

"தெரியாது" என்று கையை விரித்தார் தகப்பனார்.

சிறிது நடந்ததும், ஒரு தந்திக் கம்பத்தைப் பார்த்த சிறுவன், "அப்பா......" என்று ஏதோ ஆரம்பித்து, "இல்லை. ஒன்று மில்லை. பரவா யில்லை" என்று வாயை மூடிக்கொண்டான்.

"ஏன் விழுங்குகிறாய்? கேளு; என்ன கேள்வி வேண்டுமானாலும் கேளு. பின்னே எப்படித்தான் புதிய புதிய விஷயங்களை நீ கற்றுக்கொள்வாய்?" என்று மகனைத் தூண்டினார் தந்தை!

என் காரியதரிசி

ரிக்ளின்

என் பெயர் உசாசேவ். ஒருவேளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நான் ஓர் ஓவியன். என் படங்கள், பல பொருட்காட்சிச் சாலைகளில் இருக்கின்றன. நான் நாணயமானவன், கண்ணியமானவன் என்பது எல்லோருக்கும் தெரியும். வெகு காலம்வரை நானும் இந்த மாதிரியே என்னைப் பற்றி நினைத்திருந்தேன். ஆனால், கொஞ்ச காலமாக இதைப் பற்றி எனக்குச் சந்தேகம் உண்டாகியிருக்கிறது.

புகழ் பெற்ற அந்த உசாசேவ் என்ற ஓவியனைப் பார்த்து, அதாவது நானே என்னைப் பார்த்து, "அப்பா, நீ ஒரு போக்கிரிப் பயலா?" என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்குக் காரணம் என்ன? சிலர் தங்கள் நடத்தையின் மூலம், நான் தர்மநெறி தவறி நடக்கவேண்டுமென்று தூண்டுகிறார்கள். அத்தகையவர்கள் இன்னும் நம் சமூகத்தில் இருக்கிறார்கள்.

இது சென்ற வருஷம் நிகழ்ந்தது. எனக்கு ஒரு குழந்தை, சிறுமி, இருக்கிறாள். அவள் பெயர் அன்னா. அவளுக்குக் காதில் நோய் உண்டாயிற்று. பல டாக்டர்கள் வைத்தியம் செய்தார்கள். ஆனால், நல்ல பலன் எதுவும் இல்லை.

மிகப் பிரபலமான ஒரு டாக்டர் இருந்தார். அவரைப் பார்க்கும்படி நண்பர்கள் சொன்னார்கள். அவர் காது வைத்தியத்தில் கெட்டிக்காரர். கை ராசியும் உள்ளவர். வலது காதைப் பார்த்தே இடது காதிலிருக்கும் நோயைச் சொல்லிவிடுவார்.

நான் டெலிபோனை எடுத்து அந்த டாக்டரை அழைத்தேன். பெரிய மனிதர்களுக்கு 'போன்' பண்ணினால், அவர்களே நேரில் வந்து பேசுவதில்லை போலிருக்கிறது! யாரோ ஒரு பெண் வந்தாள். ஒரு வேளை அவருடைய மனைவியாக இருக்கலாம். இனிய குரலிலே பேசினாள். நான் ஒழுங்கு முறை தெரியாமல் நடந்து கொண்டதை உணர்ந்தேன்.

"டாக்டரா? அவர் மிக்க அலுவலாயிருக்கிறார். இப்போது வர இயலாது; கொஞ்ச நேர மாகும்" என்றாள்.

அந்த வேளையில், என் நண்பன் ஒருவன் அங்கே வந்தான். நான் அவனிடம் எல்லா விஷயத்தையும் கூறினேன். குழந்தையின் நோயைப் போக்க என்ன செய்யலாம் என்பதைப்பற்றி, இருவரும் யோசித்தோம். திடீரென்று அந்த நண்பன் எழுந்தான்.

"சரி, அந்த போன் நம்பர் என்ன சொல்லு; நான் போன் பண்ணுகிறேன். நான் சொன்னால் அவர் கேட்பார்" என்றான்.

"உனக்கு அவரைத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"அவர் கறுப்பா சிவப்பா என்று கூட எனக்குத் தெரியாது. இருந்தாலும் பார்ப்போம், முயற்சி செய்வோம்."

நான் அந்த நம்பரைச் சொன்னேன். ஆனால், பலனில் எனக்கு நம்பிக்கை இல்லை. நண்பன் பேசியதைக் கவனித்துக்கொண்டிருந்தேன்.

"ஹல்லோ! டாக்டர் 'என்' தானே பேசுகிறது? இங்கே ஓவியர் உசாசேவின் அந்தரங்கக் காரியதரிசி பேசுகிறேன். டாக்டர் இன்னும் வர வில்லையா என்று எங்கள் எஜமான் மிக்க கவலையாயிருக்கிறார்..."

சற்று நேரம் கழிந்தது. நண்பன் போனைக் கீழே வைத்துவிட்டு, "இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் டாக்டர் இங்கே வருவார்" என்றான்.

வெளிவேஷங்களையும் பகட்டுகளையும் கண்டு மயங்கும் மனிதர்களைக் கேலிசெய்யும் ஒரு நவீன ருஷ்யக் கதை இது. ஹாஸ்ய ரசனை மாத்திரமல்ல; பெரும்பாலான மக்களின் மனோதத்துவத்தின் மறைமுகமான சித்திரமுமே இதில் அடங்கியிருக்கிறது.

"ஏன்?"

"ஏற! வைத்தியம் பார்க்க."

"அதெப்படி?"

"இந்தா, என்னைக் கேள்வி கேட்காதே. எல்லாம் சின்ன விஷயம், சாதாரணம். அதைச் சொல்ல எனக்கு வருத்தமாய் இருக்கிறது. சென்ற காலப் பழக்க வழக்கங்கள், இன்னும் சிலரை ஒட்டிக்கொண்டிருக்கின்றன. ஆடம்பர மிருந்தாலொழிய, அவர்கள் எதையும் மதிப்பதில்லை. பட்டம் பதவிகளுக்கு முன்னல் தலை வணங்குகிருர்கள். நல்லபெயரோ, பட்டமோ இருந்தாலொழிய, புத்தகங்கள், படங்கள் எவையும் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. பட்டத்தைக் காட்டிலும் அந்தரங்கக் காரியதரிசிக்கு மதிப்பு அதிகம். அந்தரங்கக் காரிய தரிசி இல்லாதவர்கள், அமைதேயர்கள போல. ஆனல், யாராவது ஒருவன் எவனுவது ஒருவனைக் காரிய தரிசியாக வைத்துக் கொண்டால் போதும். அவன் பெரிய மனிதன். இந்த மாதிரியாக அவர்கள் நினைக்கிருர்கள்."

* * *

கொஞ்ச நாளைக்குப் பிறகு, என் சட்டை துணி மணிகளை எடுத்துக்கொண்டு, சலவைக்கம்பெனிக்குப் போனேன். மாஸ்கோ நகரம் முழுவதும் சுற்றினேன். ஆனல், யாரும் அவைகளைச் சீக்கிரமாய்ச் சலவை செய்துதர ஒப்புக்கொள்ள வில்லை. என்ன செய்வது? கடைசியில், நான் ஒரு வழி கண்டுபிடித்தேன். ஒரு பெரிய சலவைக் கம்பெனிக்கு டெலிபோன் செய்தேன். அவர்கள், ஏற்கெனவே என் துணியைச் சலவை செய்து கொடுக்க முடியா தென்று சொன்னவர்கள்.

"ஹலோ! சித்திரக்காரர் உசாசேவின் காரியதரிசி பேசுகிறேன். எங்கள் எஜமான்..."

நான் பேசி முடிக்கவில்லை. அதற்குள் அவர்கள் இடைமறித்தார்கள்.

"ஆஹா! அதெற்கென்ன! உடனே செய்து தருகிறோம்; உங்களுக்குத் திருப்தி யுண்டாகும்படியாகச் செய்து தருகிறோம்."

நான் என் துணிமணிகளை எடுத்துக் கொண்டு அங்கே போனேன். யார் என்று அவர்கள் என்னைக் கேட்டார்கள். நான் உசாசேவின் அந்தரங்கக் காரியதரிசி என்று சொல்லிக் கொண்டேன். அவர்கள் மிக்க அன்பாகப் பேசினர்கள். உசாசேவின் வாழ்க்கையைப் பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டார்கள். என் துணிமணிகளையும் வாங்கிக் கொண்டார்கள்.

என் 'காரியதரிசி' பலமுறை வெளியே தலைகாட்டத் தொடங்கினன். நான் அவனை வெறுத்தேன். ஆனல், அதே சமயத்தில் அவன் மேல் எனக்குப் பொறுமையும் உண்டாயிற்று.

"நான்—உசாசேவ் என்ற பெயருடைய நான்—திக்கற்ற நிலைமையில் இருக்கிறேன். ஆனல், என் காரிய தரிசி—அதாவது அவனுடைய உருவத்தில் போகும் நான்-வெற்றியடைகிரு(றே)ன். இதற்குக் காரணம் என்ன?" என்று நானே என்னைக் கேட்டுக்கொண்டேன்.

ஜில்லா நீதிபதி என்னை வரவேற்ருர். நாடகத்துக்குப் போக டிக்கட் கிடைத்தது. வீட்டை அலங்காரம் செய்து கொடுக்கும்படியாக, மானே

காந்தியின் ஆசைக் கனவு

"என் ஆசைக் கனவு இவை தான்: தீண்டாமை அடியோடு ஒழியவேண்டும். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சகோதரர் போல் வாழவேண்டும். ஆணும் பெண்ணும் ஒழுங்கான வாழ்க்கைநடத்த வேண்டும். ஏழை-பணக்காரர் என்ற வித்தியாசம் மாயவேண்டும். குடியும் சூதும் தொலைய வேண்டும். ஜனங்கள் வழக்கமாய்க் கதர் உடுத்த வேண்டும். உடலிலும் மனதிலும் மக்கள் மகாபரிசுத்தமா யிருக்கவேண்டும். யாரும் பட்டினியால் வாடக் கூடாது."

— மகாத்மா காந்தி

ஜரை வற்புறுத்தினேன். தினசரிப் பத்திரிகையும் ஒழுங்காகக் கிடைத்து வந்தது. எல்லாம் என் அந்தரங்கக் காரியதரிசியின் மூலம். ஆனால், அப்படி ஒரு மனிதன் உயிரோடில்லை!

சட்ட விரோதமான காரியம் எதையும் அவன் செய்வதில்லை. அவனுடைய அந்தஸ்தை நான் பழித்ததில்லை. நியாயமான முறையில் எனக்குச் சேரவேண்டிய எதையும் நான் பெறமுடியாவிட்டால் மாத்திரம், அந்த வல்லமை மிகுந்த சக்தியை-அந்தரங்கக் காரியதரிசியை-உபயோகிக்கிறேன். சிற்சில சமயம் அவனுக்கும் கூடத் துரதிஷ்டம் நேர்கிறது என்பது உண்மை. அப்போது, "அதைச் செய்ய முடியாதென்று தோழர் உசாசேவிடம் சொல்லும்" என்ற பதில் வருகிறது.

ஆனால், அளவிறந்த வெற்றிகளும், அவனுக்குக் கிடைத்திருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன என்று, நான் பல முறை அதிசயமடைகிறேன்.

உங்கள் நேரத்தை வீணாக்குவதற்காக மன்னியுங்கள்.

வீடு, நகரத்துக்குப் புறம்பே, வெகு தூரத்துக்கு அப்பால் இருக்கிறது. நான் டெலிபோன் பண்ணுவேன்:

"...இன்ன விலாசத்துக்கு ஒரு மோட்டார் அனுப்புகிறீர்களா? என்ன! ஒன்று கூட இல்லையா?"

நான் டெலிபோனைக் கீழே வைப்பேன். ஒரு நிமிஷங் கழித்து, மறுபடியும் அதைக் கையில் எடுப்பேன்...

"சித்திரக்காரர் உசாசேவின் காரியதரிசி பேசுகிறேன். இன்ன விலாசத்துக்கு ஒரு மோட்டார் அனுப்புங்கள்..."

உடனே, ஆம் - உடனே, கால் மணி நேரத்துக்குள், மோட்டார் என் வீட்டு வாசலில் வந்து நிற்கும். ஹூம். நல்லது...

என் காரியதரிசி என்ன மாதிரியானவன் என்பது இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்கும்—அவன் நாசமாய்ப் போக!

✲

அழகான யுத்தம்!

யுத்தத்தினால் கொள்ளை கொள்ளையாய்ப் பணம் சம்பாதிக்கும் மூன்று முதலாளிகள், ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தார்கள். தின்றார்கள். பத்து ரூபாய்க்கு பில் வந்தது.

ஒரு முதலாளி முந்திக் கைநீட்டி அதை வாங்கிக்கொண்டு, "நான் தான் இந்தப் பணத்தைக் கொடுப்பேன். இதை என் வியாபாரச் செலவில் எழுதிவிட்டேனானால், எனக்கு இரண்டரை ரூபாய்தான் செலவாகும். ஏழரை ரூபாய் சர்க்காருக்கே நஷ்டமாகும். ஏனெனில், நூற்றுக்கு எழுபத்தைந்து ரூபாய், நான் அமித லாப வரி செலுத்துகிறேன்" என்றார்.

அடுத்த முதலாளி, "இல்லை, நானே கொடுப்பேன். எனக்கு அரை ரூபாய்தான் செலவு. சர்க்காருக்கு ஒன்பதரை ரூபாய் நஷ்டம். நான் நூற்றுக்கு 95 ரூபாய் அமித லாப வரி செலுத்துபவன்" என்றார்.

மூன்றாவது முதலாளி, "இருவரும் வேண்டாம். நானே கொடுப்பேன். இதில் எனக்குச் செலவே கிடையாது. இரண்டு ரூபாய் லாபமும் கிடைக்கும். நான் சர்க்காரிடம் யுத்த சம்பந்தமான ஒரு கண்டிராக்ட் வாங்கியிருக்கிறேன். என் செலவோடு இரண்டு ரூபாய் கூட்டி, சர்க்கார் எனக்குப் பணம் கொடுத்துவிடுகிறார்கள்" என்றார்.

*　　　　　　　　*

செய்வது ஒன்றே: புத்திமானும் மூடனும் ஒரே காரியங்களைத் தான் செய்கிறார்கள்....ஆனால், ஒரு வித்தியாசம்: புத்திமான் முதலிலேயே செய்துவிடுகிறான்; மூடன் கடைசியிலே.

—டின். இஞ்ஜ

மருதையின் கடிதம்

சியாமளா பாலகிருஷ்ணன்

மருதைக்கு வயது ஒன்பது. மூன்று மாதங்களாக, அவன் கரீம்கானுடைய செருப்புக் கடையில் வேலை கற்றுக்கொண் டிருந்தான். பொழுது விடிந்தால் ரம்ஸான் பண்டிகை. சாயங்காலம் எஜமானரும் அவருடைய சிப்பந்திகளும் மசூதியில் தொழுவதற்கு எப்போது செல்லுவார்கள் என்று அவன் காத்துக் கொண்டிருந்தான். அவர்கள் தெருவில் மறைந்ததும், அவன் எஜமானருடைய அலமாரியைத் திறந்து ஒரு மசிப்புட்டியையும் ஒரு துருப்பிடித்த பேனாவையும் எடுத்துக் கொண்டு, ஒரு மூலையில் போய் உட்கார்ந்தான். ஜேபிக்குள் கையை விட்டு, கசங்கியிருந்த ஒரு காகிதத்தை எடுத்துத் தன்முன் விரித்து வைத்துக்கொண்டு, அதன்மேல் கவிழ்ந்து எழுத ஆரம்பித்தான்.

சில வார்த்தைகள் எழுதிவிட்டு, தன்னை யாராவது பார்த்துவிட்டார்களோ என்ற பயத்துடன் தன்னைச் சுற்றி வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டான். அலமாரிகளில் அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருந்த செருப்புகளும், ஜோடுகளும், தரையின் மூலையில் விரிக்கப்பட்டிருந்த தோல்களும் அவனுக்குக் காட்சியளித்தன. வெறுப்புடன் பெருமூச்செறிந்துவிட்டு, மேலும் எழுதுவதில் ஈடுபட்டான் :

“அன்புள்ள தாத்தா அவர்களுக்கு, நான் உங்களுக்குக் கடுதாசு எழுதறேன். சாமி உங்களைச் சந்தோஷமா வச்சுக்கணும்னு வேண்டிக்கறேன். எனக்கு உங்களைத் தவிர அப்பா, அம்மா ஒருத்தரும் இல்லே. நீங்கதான் இருக்கீங்க.”

அவன் சின்னஞ் சிறு குழந்தை. ஓடியாடித் திரியவேண்டிய காலத்திலே, தொழும்பிலே மாட்டிவிட்டால், அந்தக் குழந்தையுள்ளம் எப்படித் தவிக்கிறது! இந்த மனோ சித்திரம், செஹாவ் எழுதிய வாங்கா என்னும் கதையைத் தழுவியது.

அதற்கு மேல் அந்த அறையின் நடுவே தொங்கிக்கொண் டிருந்த விளக்கைப் பார்த்தவாறு, தீவிரமாய் யோசனை செய்யலானான். அவனுடைய தாத்தா அவன்கண்ணெதிரே நிற்பதுபோல் தோன்றினார். அவர் செட்டிநாட்டுக் கிராமம் ஒன்றில் ஒரு செட்டியாரிடம் பணியாளாய் இருந்தார். மிகவும் மெல்லிய காத்திரம் உடையவர். ஆனால், அறுபத்து ஐந்து வயதாகியும், அவர் தளராமல் சுறுசுறுப்பாய் வேலை செய்வார். குடியால் சிவந்த கண்களும் எப்போதும் சிரித்த முகமும் உடையவர். மத்தியானங்களில் கொல்லைத் தாழ்வாரத்தில் படுத்துக் கொண்டு மற்ற வேலைக்காரர்களுடன் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டோ, அல்லது தூங்கிக்கொண்டோ இருப்பார். இரவில் இரண்டு நாய்களுடன், தரையைத் தட்டிக்கொண்டு வீட்டைச் சுற்றி ரோந்து செல்வார். அந்த நாய்கள் பார்ப்பதற்குச் சாதுவாய் இருந்தாலும், திருடனை அவனுக்குத் தெரியாமல் அவன் அருகே சென்று அவனுடைய காலைக் கடித்துப் பிடிப்பதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவை. வீட்டில் ஒருவரும் அறியாமல் அவைகள் சாமானைத் திருடித் தின்றுவிடும். அதற்காக, வாரம் ஒரு முறையாவது கிழவரிடமிருந்து தங்கள் பின்னங்கால்கள் ஒடியும்படி, அடிகள் வாங்கிக்கொள்ளும். இரண்டு நாட்கள் நொண்டிக்கொண் டிருந்து விட்டு, பிறகு எப்படியோ பிழைத்துவிடும்.

“...இப்போ தாத்தா கேட்லே நின்னுக்கிட்டு, கோபுரத்தைப் பார்த்துக்கிட்டு, வேலைக்காரங்களோடே வேடிக்கையாய்ப் பேசிக்கிட் டிருப்பாரு. குண்டாந்தடி இடுப்பிலே தொங்கிக்கிட்டிருக்கும். வேலைக்காரக்குட்டியை

ஏதாவது சீண்டி அழவிட்டுக்கிட் டிருப்பாரு. அவளே மூக்குப்பொடி போட்டுக்கோண்ணு தொந்திரவு செஞ்சு போட்டுக்கப் பண்ணிட்டு, அவள் தும்ப ஆரம்பிச்சதும், கண்ணுலேந்து ஜலம் வரும்படியாச் சிரிப்பாரு. நாய்க்குக்கூடப் பொடி போட்டிடுவாரு. அது, பாவம்! தவிக்கும். அந்த ஊர்லே இப்போ குளுகுளுன்னு நல்லாயிருக்கும். ராத்திரி இருட்டா இருந்தாக்கூட, எல்லா வீடும் தெரியும். இத்தனை நாழிக்கு எல்லா வீட்டிலேருந்தும் புகை வந்துக்கிட்டு இருக்கும். அங்கே மானம் முழுக்க எப்படி நட்சத்திரமா இருக்கும்!......'' என்று பலவிதமாய் எண்ணினன் மருதை.

அவன் கண்களில் ஜலம் ததும்பியது. பேனவை மசிக்கூண்டில் தோய்த்து மேலும் எழுதலானன் :

"நேத்திக்கி நானு அடி வாங்கினேன். அவங்க கொளந்தெயெத் தொட்டில்லே ஆட்டித் தூங்கப்பண்ணச்சே, எனக்குத் தெரியாதயே நான் தூங்கிப்போயிட்டத்துக்காக, என்னெ எசமான் மயிரெப் பிடிச்சு, கொல்லேப்பக்கம் இழுத்துக்கிட்டுப் போயி, நன்ன ஒதச்சுப் போட்டுட்டாரு. ஒரு வாரத்துக்கு முன்னடி ஒரு மீனச் சுத்தம்பண்ணச்சொல்லி, அந்த அம்மா எங்கிட்டக்க குடுத்தா. அதெ நான் வால்லேந்து சுத்தம் பண்ண ஆரம்பிச்சேன். அதுக்காக அத்தெப் பிடுங்கி, அவ எம் மூஞ்சிலேயே விட்டெறிஞ்சா. இங்கே இருக்கற வேலேக்காரங்கள்ளாம் என்னெப் பார்த்துக் கேலி பண்ணருங்க. அவங்களுக்காக வெள்ளரிக்காயைப் பறிச்சிக்கிட்டு வரச் சொல்ல, நான் மாட்டேன்னு சொன்னேன். அதுக்காக எசமான் கையிலே ஆம்புட்டதை எடுத்துக்கிட்டு, என்னெ அடிச்சாரு. எனக்குக் காலேயிலேயும் மாலேயிலேயும் அரை வயித்துக்குப் பழையதும், மத்தியானம் கொஞ்சம் சுடற சோறும் போடருங்க. அவங்கமட்டும் எல்லாம் நல்லதாப் பண்ணிச் சாப்பிடருங்க. என்னெக் குளிரக் குளிர ரேழியிலே படுக்க வச்சுடருங்க. அவங்க வீட்டுக் கோட்டான் அழ ஆரம்பிச்சுதோ, எனக்கு அந்தத் தூக்கமும் கிடையாது; தொட்டிலே ஆட்டிக்கிட்டே இருக்கவேண்டியதுதான். நீ நல்ல தாத்தா. என்னே இங்கேருந்து கிராமத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போயிட மாட்டியா? என்னலே இங்கே இருக்கவே முடியல்லே. உன் கால்லே விளுறேன். உனக்காக நான் எப்பவும் சாமியைப் பிராத்தனை பண்ணறேன். என்னெ இங்கேருந்து கூட்டிக்கிட்டுப் போயிடு. இல்லாட்டி நான் செத்துப் போயிடுவேன்.''

மருதை உதடுகளேப் பிதுக்கிக் கொண்டு, கண்களேப் புறங்கைகளால் கசக்கிக்கொண்டு விம்மினன்.

"நான் உனக்கு மூக்குப் பொடி அரைச்சுத் தர்ரேன். நான் ஏதாவது தப்பிதம் பண்ணின, என்னெ நல்லா அடிச்சுப் பிச்சு இழுத்துடு. எனக்கு வேலே இல்லேயேன்னு பாக்காதே. அங்கே இருக்கற மாடுங்களே மேய்க்கிறேன். தாத்தா! என்னலே இவங்க படுத்தற பாட்டைத் தாங்கவே முடியல்லே. நான் ஓடிவந்துடலாமான்னு பாத்தேன். வழிலே இருக்கற காட்டையும், காலுலே கல்லெல்லாம் குத்துமேன்னும் நெனச்சா, பயமா இருக்குது. நான் பெரியவனப் போனதும், உன்னே ஒரு வேலேயும் செய்யவிடாமே காப்பாத்தறேன். நீ செத்துப் போயிட்டா அம்மாவுக்காக நான் தினம் சாமியை வேண்டிக்கிற மாதிரி உனக்கும் வேண்டிக்கிறேன்.

"தஞ்சாவூரு பெரிசா இருக்கு இங்கே குதிரை, மாடு எல்லாம் நிறைய இருக்கு. ஆன, நம்ப ஊருலே இருக்கறமாதிரி ஆட்டு மந்தையே இல்லே. மீன் பிடிக்கற தூண்டில் இங்கே கடேலே விக்கிருங்க. அதை வெச்சுக்கிட்டுப் பெரிய பெரிய மீன்கூடப்

பிடிக்கலாம். நல்ல நல்ல சரிகைத் தொப்பி எல்லாம் விக்கிது, அதெல்லாம் ரொம்ப விலே இருக்கும். கசாப்புக் கடேலே வித விதமா மாமிசம் வச்சிருக்கான். 'எங்கேந்து அதெல்லாம் கொண்டாந்தே'ன்னு, சொல்லமாட்டேங்கருன்.

''தாத்தா, பொங்கலப்போ, பெரிய வீட்டுச் சின்னம்மா கிட்டே சொல்லி, எனக்கும் ஏதாவது வாங்கி வை.''

மருதை ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்தான். செட்டி வீட்டில் போஹிப் பண்டிகை யன்று, கொளுத்துவதற்காக வேலைக்காரர்கள் சுள்ளி, இலைகள், மட்டைகள், எல்லாம் சேகரித்ததும், தன்னையும் கூட்டிக்கொண்டு தோப்புக்குச் சென்றதும் ஞாபகம் வந்தது. ''அப்போ எல்லாம் எத்தனை நல்லா இருந்திச்சு! தோப்பிலே மரத்தடியிலே தூங்கிட்டு விளையாடிட்டு வருவோம். நிறைய அணிப்பிள்ளை குறுக்கேயும் நெடுக்கேயும் ஓடும். அதெல்லாத்தையும் 'பிடி, பிடி'ன்னு கத்திக்கிட்டு தாத்தா துரத்துவாரு. குப்பை, செத்தை எல்லாத்தையும் கோணியிலே போட்டுக் கட்டி, வீட்டுக்கு இழுத்துக்கிட்டு வருவோம். விடியறப்போ அதெக் கொளுத்திப்புடுவாங்க. எத்தனை பெரிசா எரியும்! சின்னம்மா எல்லோரும் சுத்தி நின்னுக்கிட்டு வேடிக்கை பாப்பாங்க. அந்தப்பெரிய வீட்டுலே அம்மா வேலை செய்யச்சே, அந்தச் சின்னம்மாதான் எனக்குப் படிப்புச் சொல்லிக் குடுத்தா. நூறு மட்டும் எண்ணச் சொல்லிக் குடுத்தா. அம்மா செத்துப் போனப்புறம், தாத்தாவோடே வேலைக்காரங்க இருக்கற இடத்துலேயே இருந்தேன், இப்போ இங்கே வந்தாச்சு......'' இப்படிப் பழைய ஞாபகங்கள் அவன் மனதில் குவிந்தெழுந்தன.

சாளரத்திலிருந்து மறுபடியும் தன் மூலைக்குச் சென்று, அவன் மேலும் எழுதினன்:

''தயவுசெய்து இங்கே வா, தாத்தா! நான் சாமி பேரைச் சொல்லி, உன்னை வேண்டிக்கிறேன். என்னை இங்கேந்து கூட்டிக்கிட்டுப் போயிடு. என்னெப்போலே அறைதை மேலே தயவு பண்ணு. இங்கே எங்கிட்டே ஒருத்தரும் பிரியமாவே இல்லே. எனக்கு ரொம்பப் பசிக்கிது. நான் எப்பவும் அழுதுக்கிட்டே இருக்கேன். நேத்திக்கு எசமான் என்னெ மண்டேலே அடிச்சாரு. அவர் அடிச்சதுலே நான் கீளே விளுந்துட்டேன். நாயிலெயும் கேடுகெட்ட நாயாய் நான் இருக்கேன். வண்டிக்காரன், ஒத்தைக் கண்ணன், தோட்டக்காரன், வேலைக்காரக் குட்டி எல்லாரையும் நான் கேட்டேன்னு சொல்லு. இப்படிக்கு, நான் உன் அன்புள்ள பேரன் மருதை. நல்ல தாத்தாவோ இல்லையோ, கட்டாயம் வா.''

மருதை கடிதத்தை இரண்டாக மடித்து, தான் நான்கு நாட்களுக்கு முன் வாங்கியிருந்த கவருக்குள் வைத்தான். சிறிது நேரம் யோசித்துவிட்டு, மசிக்கூண்டில் பேனவைத் தோய்த்து, கவரின் மேல்புறத்தில் விலாசம் எழுதினன்:

''கிராமத்தி லிருக்கும் தாத்தாவுக்கு''

பிறகு, தலையைச் சொறிந்து கொண்டே மேலும் சிறிது நேரம் யோசித்துவிட்டு, கீழே **'சாமியாத்**

எத்தனை வெளிச்சம்!

பூமியிலிருந்து, சூரியன் 9,29,00,000 மைல் தூரத்தில் இருக்கிறது என்று நாம் அறிவோம். ஆகையால், பூமியைச் சூரியன் இவ்வளவு தூரத்திலிருந்து ஒளி செய்வதற்கு, எவ்வளவு சக்தியுள்ள வெளிச்சத்தை வீசவேண்டும் என்பதை நாம் கணக்கிட்டு விடலாம். அதாவது, 13,000, 000, 000, 000, 000, 000, 000,000,000 மெழுகு வர்த்தி சக்தியுள்ள வெளிச்சத்தைச் சூரியன் வீசியாக வேண்டும்.

—ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ்

தேவன்' என்று தன் தாத்தாவின் பெயரைச் சேர்த்தான். தன்னை அது வரையில் ஒருவரும் தடுக்கவில்லையே என்ற திருப்தியுடன். அவன் துண்டை விசிறி மேலே போர்த்திக் கொண்டு கடையை விட்டு மெதுவாய், ஓசை செய்யாமல் வெளியே வந்து, தபால் பெட்டியை நோக்கி ஓடினன். அவன் இரண்டு நாட்களுக்கு முன்பு கசாப்புக்கடையில் விசாரித்தபோது, கடைக்காரன், "கடிதத்தைத் தபால் பெட்டியில் போடவேண்டும். அதைத் தபால்காரன் ரயில் வண்டியில் கொண்டுபோய்ப் போடுவான். ரயில் வண்டி அதைச் சேரவேண்டிய ஊருக்குக் கொண்போய்ச் சேர்க்கும்" என்று மருதையிடம் கூறியிருந்தான். ஆகவே, மருதை அருகிலிருந்த தபால் பெட்டிக்குச் சென்று, தான் எழுதிய கடிதத்தை அதில், திணித்தான்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அவன் செருப்புக் கடையில் தூங்கிக் கொண்டு இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தான்.......தோட்டக் கதவுக்கு வெளியே திண்ணையின்மேல் தாத்தா உட்கார்ந்துகொண்டு, காலை ஆட்டியவண்ணம், வண்டிக்காரனுக்குக் கடிதத்தைப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தார்..........அவருடைய காலடியில் நாய்களிரண்டும் நின்று வால்களை ஆட்டிக்கொண் டிருந்தன.

✲

உத்தியோக யோக்கியதை

டைப் அடிக்கும் குமாஸ்தாக்கள் தேவை என்று ஒரு காரியாலயத்தார் விளம்பரம் செய்திருந்தார்கள். ஒரு வாலிபன் அந்தக் காரியாலயத்துக்குள்ளே நுழைந்தான். மானேஜர் அவனை அன்பாக வரவேற்று "இதற்கு முன் நீங்கள் எங்கேயாவது டைப்பிஸ்டாய் இருந்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை. அப்பாவுக்கு ஒத்தாசையாக இருந்திருக்கிறேன்."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். அவருடைய வியாபாரக் கடிதப் போக்குவரத்துகளை நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்களோ?"

"இல்லை. என் அப்பாவுக்கு வியாபாரம் எதுவும் இல்லை. அவருக்கு விவசாயம்."

"விவசாயக் கணக்குகளைக் கவனித்து வந்தீர்களாக்கும்?"

"இல்லை, ஏர் பிடித்து உழுது கொண்டிருந்தேன்."

"ஹ்ஹூம்... அப்படியா? பாதகம் இல்லை. ஏர் பிடித்த விரல்கள் தான் உறுதியா யிருக்கும் – நல்லது, நீங்கள் தொழில்கலாசாலையிலே படித்ததுண்டா?"

"இல்லையே!"

"ஓஹோ! நீங்களாகவே டைப் அடிக்கப் பழகிக் கொண்டீர்களா? அது தான் கெட்டிக்காரத்தனம்."

"இல்லை, எனக்கு டைப் அடிக்க வராது."

"வராதா? – ஹ்ஹூம், நல்லது. இங்கே கற்றுக் கொள்ளலாம். எங்களுக்கு டைப்பிஸ்டுகள் ரொம்ப அவசியம். அதோ டைப்ரைட்டிங் மெஷின் இருக்கிறது. அங்கே உட்கார்ந்திருங்கள். வருகிறேன்."

"எது டைப்ரைட்டிங் மெஷின்?"

இரு இலைகளும் ஒரு மொட்டும்............

'இரு இலைகளும் ஒரு மொட்டு'மாகப் பறிப்பதுதான் உயர்ந்த ரகமான தேயிலையைப் பறிக்கும் சரியான முறை. இப்படிச் செய்வதனால், இளம் கொழுந்தான தளிர்கள்தான் பறிக்கப்படுகின்றன என்ற நிச்சயம் ஏற்படுகிறது.

ப்ரூக் பாண்ட் கையாளும் முறைப்படி விற்பனைச் சிப்பந்திகளால் வியாபாரிகளுக்குப் புத்தப் புதிதான சரக்குகள் அடிக்கடி வினியோகிக்கப் படுகின்றன. 'இரு இலை ஒரு மொட்டு' அதன் உன்னதமான மணத் தோடே உங்களிடம் வந்து சேர்வதற்கு இந்த முறைதான் காரணம்.

இந்தியாவின் முக்கியமான இடங்களிலெல்லாம் உள்ள டெப்போக்களி லிருந்து எங்கள் விற்பனைச் சிப்பந்திகளால் தேயிலை சதா எடுத்துக் கொண்டு போகப்படுகின்றன. டெப்போவில் காலி ஆக ஆக அந்த இடத்தைத் தொழில் ஆலைகளிலிருந்து கொண்டுவரப்பட்ட தேயிலை நிரப்புகிறது.

பூரணமான மணத்தோடு கூடின, புத்தப்புதிதானகுணம், திருப்தியளிக்குந் தன்மை, இவற்றை ரஸிக்க விரும்புபவர்களுக்கு 'டார்ஜீலிங் ப்ளெண்ட்' தான் சரியான தேயிலை.



ப்ரூக் பாண்ட்

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை
தூய வெண்மையாக்குவதில்
நிகரற்றது

பெரிய பார்களாகவும்,
சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில்
கிடைக்கும்

●

தயாரிப்பவர் :

டி. எஸ். ஆர். கம்பெனி

கும்பகோணம்

ஸ்டாக்கிஸ்ட் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி,
மதராஸ்



ஜீவாம்ருதம்

நரம்புகளுக்கு வலிவையூட்டி தசைகளை வளர்த்து, தளரா வீரியத்தை யுண்டுபண்ணி, எவரையும் எத்துறையிலும் முன்னணியிலிருக்க உதவி, வாழ்க்கையை இன்ப மயமாக்கும் சிறந்த டானிக் பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின் ஜீவாம்ருதம்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும்,
ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

ஆயுர்வேதாஸ்ரமம், (ESTD. 1898) மதராஸ்

AJE-10

தாலாட்டும் பள்ளும்

மு. அருணாசலம்

தாலாட்டுப் பாட்டிலே நம்முடைய கவிஞர்களுக்குள்ள ஈடுபாடு காரணமாக, எப்போது எப்போது அவர்களுக்குச் சந்தர்ப்பங் கிடைக்கிறதோ அப்போதெல்லாம், எளிதாக அழகிய சிறு தாலாட்டொன்றைப் பாடிவிடுகிறார்கள். தாலாட்டுப் பாடல் உள்ளத்திலே எழுப்புகின்ற இன்பமான நினைவுகளும் பாடலின் சுகமுமே இப்படிப் பாடுவதற்குக் காரணங்கள்.

பள்ளுப்பாட்டிலே பொதுவாக நாம் தாலாட்டைப் பார்ப்பதில்லை; தாலாட்டுக்கு அதில் சந்தர்ப்பமும் குறைவு. ஆயினும், நம்முடைய கவிஞரொருவர் சந்தர்ப்பத்தைச் சிருஷ்டித்துக் கொள்ளுகிறார்.

பள்ளியர் பலர் மிக்க உல்லாசத்தோடு நடவு நட வருகிறார்கள். இளம் பள்ளியர், முதிய பள்ளியர், அன்றி இடுப்பிலே குழந்தையை இடுக்கியபடியே வந்த பள்ளியர் என இவர்கள் பல வகை. இளையவளும் முதியவளும் வயற்கரையை யடைந்தவுடன், நேரே சேற்றில் இறங்கிவிடமுடியும். ஆனால், குழந்தையோடு வந்தவள் என்ன செய்வாள்? குழந்தையை எங்கு விடுவாள்?

நாம் தெருவிலே பார்க்கிறோமல்லவா?— சென்னைக் 'கார்ப்பொரேஷன்' ஊழியர்களா யுள்ள பெண்கள், சாலைகளில் மராமத்து வேலை செய்யும்போது, சாலையோரமுள்ள மரங்களில் ஏணை கட்டி அதில் குழந்தைகளைக் கிடத்தி ஆட்டி உறங்க வைத்து விட்டுத் தங்கள் வேலைகளைக் கவனிக்கிறார்கள். குருகூர் ஆழ்வார் பண்ணையில் நடவு நட வந்த பள்ளியரும் இப்படியே செய்கிறார்கள்.

வயல் வரப்புக்களிலும் வாய்க்கால் கரைகளிலும், வேப்பமரம் முதலிய மரக்கிளைகளுக்குப் பஞ்சமா? ஏணை கட்டி அதில் குழந்தையைப் படுக்க வைத்துத் தாய்மார் தாலாட்டுகிறார்கள் என்று கற்பனை செய்கிறார் கவிஞர். இது உண்மையில் கற்பனையே அல்ல; மெய்யாகவே நடக்கிற நிகழ்ச்சிதான்.

இரண்டு பள்ளியர் தாலாட்டுகிறார்கள். ஒருத்தியின் குழந்தை ஆண் குழந்தை; மற்றவள் குழந்தை பெண் குழந்தை. எப்படித் தாலாட்டுகிறார்கள் என்பதை மாறி மாறிக் கேட்போம்.

பள்ளரும் பள்ளியரும், திருக் குருகூர் நம்மாழ்வாரிடத்தில் அளவற்ற பக்தியுடையவர்கள், பரம்பரையாக ஆழ்வார் பண்ணையில் பயிர்த்தொழில் செய்து வருபவர்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒருத்தி பாடுகிறாள் :

அண்டர் தொழு தென் குருகூர்
ஆழ்வார்க்கு வாய்த்த வயல்
எண்திசையும் பண்ணை பயிர்
ஏற்றப் பிறந்தானோ !

அடுத்தவள்-பெண்குழந்தையுடையவள்-பாடுகிறாள் :

அன்ன தருத் தென் குருகூர்
ஆழ்வார் வளவயலில்
செந்நெல் நடவந்த
செல்வ மகளாரோ !

ஆழ்வார் பண்ணையிலே தாங்கள் மகிழ்ச்சியோடு தொழில் செய்வதைப் போலவே தொடர்ந்து செய்வதற்கு ஏற்ற பிள்ளையும் பெண்ணும் பெற்றமை குறித்து இத் தாய் மார்களுக்கு என்ன உல்லாசம் !

மேழிச் செல்வமாகிய பெருஞ்செல்வத்தை ஈட்டுபவன் ஆதலால், பள்

வீட்டுக் கூட்டத்திலே பிறந்த தாலாட்டும், நடவு வயலிலே பிறந்த பள்ளுப்பாட்டுமே அநேக சமயங்களில் நம் உள்ளம் சொக்கச் செய்யும். அந்த இரண்டையும் ஒன்று சேர்க்கும் ஒரு கவிஞரின இசையமுதம் இங்கே வழங்கப்படுகிறது. அது ஓர் அலாதிச் சுவையாகும்.

ளனை எப்படிச் சிறப்பித்தாலும் தகுமல்லவா? பிள்ளையைப் பார்த்துச் சொல்கிருள் பள்ளி:

சேருடி சூழச்
சிறந்த குடை நிழற்ற
வீருய் முரசதிர
விளையாடு வான் மகனே!

கோழை படாத மேழிச் செல்வத்தைத் தேடு கின்ற பள்ளன், குடை நிழற்றவும் முரசதிரவும் விளையாடு வான் என்ருல், மிகையல்ல.

இதை யொத்த பாவத்தில், மற்றவள் பாடுகிருள்:

அரவணை யானைப் பரவும்
ஆழ்வார் வளவயலிற்
குரவையிட்டுக் களை பறிக்கும்
கோமளப்பெண் ணரமுதோ!

[அரவணையானைப் பரவும் ஆழ்வார்-திருமாலைப் பாடுகின்ற நம்மாழ்வார்.]

. கோமளப்பெண்! ஆம், உலகமெல்லாம் உண்ணவேண்டும் என்பதற்காக, நடவு நட்டு, குரவையிட்டுக் களைப் பறிப்பவள் கோமளப் பெண்ணரமுதுதான், சந்தேகமில்லை.

இப்படியெல்லாம் குழந்தையைப் பள்ளி எவ்வளவோ கொஞ்சியாயிற்று. சரி. ஆனல், இக் குழந்தையால் பண்ணைத் தலைவரான ஆழ்வாருக்குப் பயனுண்டா?

கேட்பானேன்? எவ்வளவோ உண்டு. ஆழ்வார் அமுது செய்வதெல்லாம் இவன் விளைவித்துக்கொடுக்கின்ற உணவுதானே? இந்த பாவத்தில் வருகிறது பாட்டு:

வளஞ்சேர் குருகைமகிழ்
மாறர் அமுது செய்யக்
களஞ்சியத்தில் நெல்லளந்து
கட்டப் பிறந்தானே!

[மாறர்—நம்மாழ்வார்]

சரி, ஆண்குழந்தைதான் ஆழ்வாருக்கு இப்படித் தொண்டு செய்வான். பெண்குழந்தை என்ன செய்யும்?

மற்றவள் சொல்கிருள். நெல் விளைந்தால் போதுமா? அது களத்திலே கண்டுமுதல் பண்ணும்போது, சிந்தி மங்கிச் சீரழியாமல் பெருக்கிச் சேர்க்கவேண்டாமா? இது பெண் செய்ய வேண்டிய வேலை; ஆண் செய்வதல்ல. களத்திலே தன் பெண் ஆழ்வாரமுதுக்குரிய நெல்லைப் பெருக்கிச் சேர்ப்பாள் என்ற எண்ணம், தனக்குப் பெருவாழ்வையே சேர்த்துத் தந்ததுபோல இருக்கிறது, இப் பள்ளிக்கு.

பாடுகிருள்:

மருவாரும் தண்ணிலஞ்சி
மாறர் களம் பெருக்கிப்
பெருவாழ்வு எனக்கு வரப்
பிறந்த மகளாரோ!

[மருவாரும் தண் இலஞ்சி-மணம் பொருந்தக் குளிர்ந்த சோலை.]

இங்ஙனமாக, பள்ளியர் தங்கள் பிள்ளையையும் பெண்ணையும் தாலாட்டும் இச்சிறு தாலாட்டு, ஆழ்வாருக்கும் நமக்குமே பெரிதும் உவப்பான தாலாட்டு என்பதில் சந்தேகமில்லை.

சர்க்காருக்கு வரி

தென்னப்பிரிக்காவில் ஓர் அதிகாரி ஒரு குடியானவனிடம் பேசுகையில், "தம்பீ! சர்க்காருக்கு மரியாதையாக உன் வரியைச் செலுத்திவிடு. அது உன் தகப்பனைப்போல் உன்னைக் காப்பாற்றுகிறது; எதிரியிடமிருந்து பாதுகாக்கிறது; நோய்க்கு வைத்தியம் செய்கிறது; பசித்தால் சோறு போடுகிறது; கல்வி புகட்டுகிறது. இதற்கெல்லாம் பணம் வேண்டாமா?" என்று உபதேசம் செய்தார்.

குடியானவன் பதில் சொல்லுகிருன்: "சரிதான்; புரிகிறது. அதாவது, இந்த மாதிரி என்று சொல்லுங்களேன். என்னிடம் ஒரு நாய் இருக்கிறது. அதற்குப் பசி வந்துவிடுகிறது. அது என்னிடம் வந்து உணவுப் பிச்சைகேட்கிறது. நான் சொல்லுகிறேன்: 'ஏ நாயே! உனக்குப் பசியா? தெரிகிறது. நான் ரொம்ப வருந்துகிறேன். நில். நீ தின்பதற்கு இறைச்சி தருகிறேன்.' இப்படிச் சொல்லிவிட்டு, இடுப்பிலிருந்து ஒரு கத்தியை எடுக்கிறேன். அந்த நாயின் வாலை ஒட்ட நறுக்குகிறேன். அந்தத் துண்டத்தை நாயிடம் நீட்டி, 'இந்தா, என் விசுவாசமுள்ள நாயே! இந்த நேர்த்தியான மாமிசத் துண்டை உண்டு பசி தீர்' என்கிறேன். இது தானே விஷயம்?"

✲ உரிமை

சக்கரவர்த்தி
ராஜகோபாலாச்சாரியார்

சென்ற மகாயுத்தம் முடிந்ததும், அதில் வெற்றிபெற்ற வல்லரசுகளின் தலைவர்கள் சுயநிர்ணய தத்துவத்தை விளம்பரப்படுத்தினர்கள். ஒவ்வொரு ஜாதியாரும் தம் அரசியலைச் சுதந்திரமாக அமைத்துக்கொள்வதற்கு அந்த ஜாதியாருக்குப் பூரண உரிமையுண்டு என்கிற தத்துவத்தைப் பிரயோகித்து, ஐரோப்பாவைப் பிரிவினை செய்தார்கள். ஆயுத பலத்தைக் கொண்டு முன்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட, பெரிய ராஜ்யங்களை அழித்துவிட்டு, ஜாதிவாரியாகப் பல புது ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள். இந்த ஏற்பாடு முதலில் அழகான தோற்றம் தந்ததே யாயினும், காலம் செல்லச் செல்ல, அதிலுள்ள கோளாறுகள் வெளியாயின. ஜாதி வாரியாகப் பிரித்து அமைக்கப்பட்ட ராஜ்யங்களிலும், பல சிறுபான்மை ஜாதியார் இருந்தே வந்தார்கள். தவிர, சுய நிர்ணய தத்துவத்தை நிறைவேற்றுவதில் இரண்டு பெரும் குற்றங்கள் காணப்பட்டன. ஒன்று, ராணுவ பலமற்ற ராஜ்யங்கள் தம் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. இரண்டாவது குற்றம், பொருள் நிலையில் சுதந்திரம் காணமுடியாத பிரதேசங்கள் அரசியல் சுதந்திரத்தை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்த முடியவில்லை.

பழைய நாட்களில் வல்லரசுகள் யுத்தம் தொடங்கினல், சிறு ராஜ்யங்கள் நடுநிலைமை வகிக்க முடிந்தது. ஒரு கட்சியிலும் சேராமல் நின்ற சிறு தேசங்களின் சுதந்திரத்தை வல்லரசுகள் கவனித்துவந்தன. போரில் கலக்காமல் தடஸ்தமாகவே நிற்க அவைகளுக்குச் சாத்தியமாக இருந்தது. 1914-ஆம் வருஷத்திய மகாயுத்தத்தில் இந்த நடுநிலைமைச் சுதந்திரத்தை ஜெர்மனி பொருட்படுத்தாமல் நடந்துகொண்டது. பெல்ஜியமும், பிறகு கிரீஸும் தாங்கள் வேண்டாமலே யுத்தத்தில் சேரவேண்டியதாக முடிந்தது. இந்த அனுபவத்தைப் பார்த்து வர்சாய்ல்ஸ் சமாதானத்தில் நடுநிலைமைத் தத்துவத்தை முடிவாக அழித்துவிட்டார்கள். பல சிறு சுதந்திர தேசங்களைப் பிரித்து அமைத்து, "யுத்தம் வந்தால் நீங்கள் நடுநிலைமையாக இருக்கக்கூடாது: எந்த தேசம் யுத்தம் துவக்குகிறதோ அந்த தேசத்தை எல்லோரும் ஒன்றுகூடி எதிர்க்கவேண்டும்" என்கிற புது ஒழுக்க முறையைத் திட்டப்படுத்தினர்கள்.

இந்தத் திட்டத்துக்குள்ள ஆட்சேபனைகளை அவர்கள் அப்போது காணவில்லை. வர்சாய்ல்ஸ் உடன்படிக்கையில் எல்லைகளைப் பற்றிச் செய்த தீர்மானங்கள் சாசுவதம் என்றும், அதை எந்த நாளிலும் மாற்றக்கூடாது என்றும் அவர்கள் எண்ணியது சரியாகாது. யுத்தம் துவக்கியவர்களில் யார் குற்றவாளி என்பதைத் திட்டமாகச் சொல்லிவிடவும் முடியாது. மேலும் தற்கால யுத்த சாதனங்களும் முறைகளும் முன்காலத்தைப் போல் இல்லை. யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தவேண்டுமானல், முன்னடியே பலவித ஆயுதங்கள் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். யுத்தத்தை யாராவது துவக்கும்வரையில், சிறு தேசங்கள் ஒன்றும் செய்யாமல் தர்மோபதேசம் செய்துகொண்டு காத்திருக்கமுடியாது. நடுநிலைமை உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கு மட்டும் வேண்டிய ஆயத்தம் செய்வோம், அதற்குமேல் வேண்டாம்

ஜின்னுவின 'பாகிஸ்தான்' கோரிக்கை சுய நிர்ணய உரிமையே என்று சொல்லுகிறுர்கள். ஆகையால், அந்த உரிமை பற்றி ராஜாஜியின் கருத்துக்களை நாம் அறிந்துகொள்ள, இந்தக் கட்டுரை உதவியாகும். 'உலக நிலை' என்ற புத்தகத்திலிருந்து இது எடுக்கப்பட்டிருக்கிறது.

என்றிருப்பதும் வீண்பேச்சு. மேடு பள்ளங்களை லட்சியம் செய்யாத இரும்புமய ரதங்களையும், ஆகாயத்தில் பறந்து யுத்தம் செய்யும் விமானங்களையும் படைகளாகக் கொண்டு போர் நடத்தும் இக் காலத்தில், சிறு ராஜ்யங்கள் வீரியம் பேச முடியாது; வல்லரசுகளை எதிர்த்துத் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள இயலாது.

நடுநிலைமை என்று சொல்லிக் கொண்டு ஒரு சிறு பிரதேசத்தைப் பிரத்தியேகப்படுத்த முயல்வதனால், அயோக்கியக் கட்சிக்கே லாபமாகும்; நியாயமான கட்சிக்கு நஷ்டமும் தடையுமே உண்டாகும். ஆகையால் உலகப் போக்கை ஆராய்ந்து, வல்லரசுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அவைகளுடன் கூட்டாக இருப்பதே, சிறு நாடுகள் பின்பற்றக்கூடிய முறை. இவ்வாறு ஏற்படும் கூட்டுக் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமானால், யுத்தம் துவங்கும் வரையில் சும்மா இருக்க முடியாது. சமாதான காலத்தில் எல்லா முயற்சிகளும் செய்துகொண் டிருக்கவேண்டிய தாகிறது. இயற்கை – நீர் – நிலத்தின் அமைப்பை ஆராய்ந்து, ராணுவத் திட்டங்களையும், தொழில் உற்பத்தித் திட்டங்களையும், வியாபாரக் காப்புத் திட்டங்களையும், பல நாடுகள் ஒன்றுசேர்ந்து ஏற்படுத்திக்கொண்டு, காலாகாலத்தில் நிறைவேற்ற வேண்டிய தாகிறது.

இதன் பொருள், சிறு நாடுகள் தனித்தனியாகத் தத்தம் அரசியல் சுதந்திர வாழ்க்கையை நடத்துவது இந்தக் கலிகாலத்தில் இயலாது என்பதாகும். அப்படி நடத்தப் பார்த்தால், சுதந்திரமே பறிமுதலாகும். உலக ராணுவ முறைகளின் மாறுபாட்டினால் சிறு தேசங்களைப் பொறுத்தமட்டில், சுயநிர்ணய தத்துவம் பெரும்பாலும் அழிந்து போயிற்று. தற்காப்புக்கும் செல்வப்பெருக்குக்கும் வேண்டிய பிரதேச வரையறுப்பு வேறு; ஜாதி ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கும் பிரதேச வரையறுப்பு வேறு. இரண்டையும் ஒன்றுக்க முடியாது. முடியாத காரியத்தைச் செய்யமுயலாமல், சுதந்திரவாழ்க்கையை இரு விதமாகப் பிரித்து ஓர் அரசியல் எல்லைக்குள் ஸ்தல சுதந்திரங்களையும் தனி உரிமைகளையும் அமைத்துக் கொண்டு, ஜாதி வேற்றுமையின்றி அரசியலையும் பொருள் உற்பத்தியையும் வியாபாரத்தையும் நடத்திக் கொண்டு போவதே முறையாகும். இவ்வாறு செய்தால்தான், சுய நிர்ணய சுதந்திரத்தை ஓரளவு காப்பாற்றலாம். இல்லாவிடில் முழுதும் அழிந்துபோகும். இவ்வாறே இந்த யுத்தத்தின் முடிவில் ஐரோப்பாவின் சிக்கல்களைத் தீர்க்கப் பார்ப்பார்கள். தொழில் உற்பத்தி நிலையும் வியாபார நிலையும் உலகத்தில் முன்போல் இப்போது இல்லை. சுயநிர்ணய தத்துவத்தின்படி ஒரு ஜாதியினர் தனியரசு நடத்தமட்டும் உரிமை பெற்றுவிட்டு, தொழிலுக்கும் வியாபாரத்துக்கும் இன்றியமையாத இடமும் சாதனங்களும் இல்லாமல் நின்றால், சமூக வாழ்க்கை நடைபெறாது.

அவரே எழுதுவார்

ஒரு சினிமாக் கதையில் வரும் ஒரு காட்சியைப்பற்றி, அதன் கதாசிரியரிடம், டைரக்டர் மைக் கர்ட்டிஸ் என்பவர் ஒரு சமயம் தர்க்கம் செய்யத் தொடங்கினர்.

"என் இஷ்டப்படி இந்தக் காட்சியை எழுதுவதில் என்ன கஷ்டம்? நானே எழுதிவிடுவேனே இதை" என்று, அவர் கர்ஜித்தார்.

"எழுதிவிடுங்களேன்; என்னை என்ன கேள்வி?" என்று சாவதானமாய்ப் பதில் சொன்னார் கதாசிரியர்.

"தடையில்லாமல் எழுதுகிறேன்" என்று சொல்லிய கர்ட்டிஸ், "நாலு கதாசிரியர்களைக் கூப்பிடுங்கள் கொஞ்சம் துணைபுரிய" என்று முடித்தார்!

தன் குறையை மறைப்போர்: 'வாழ்க்கை என்னவோ பல சிக்கல்களும் முரண்பாடுகளும் நிறைந்ததாகவே இருக்கிறது. சில சமயம் மனம் சோர்ந்துபோகவும் செய்கிறது. மனிதர்கள் ஒருவரிடம் ஒருவர் அபிப்பிராயபேதங்கள் கொள்வது ஆச்சர்யமில்லை. ஒரே பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேட முயலும் தோழர்களே, வித்தியாசமான முடிவுகளுக்கு வருவதும்கூட அதிசயமில்லை. ஆனால், தடபுடலான சொற்களையும், உன்னதக் கொள்கைகளையும் சொல்லிக்கொண்டு தன் சொந்த பலவீனத்தை மறைக்கப் பார்ப்பவன், சந்தேகிக்கத்தக்க நபராவான். சர்க்காருக்குச் சில வாக்குறுதிகள் அளித்தோ, சந்தேகாஸ்பதமான வேறு வழிகளின் மூலமோ சிறைக்குத் தப்பித்துக்கொள்ளும் மனிதன், பிறரையும் கண்டிக்க முற்பட்டு விடுவானாகில், தான் அணைந்துகொண்ட இயக்கத்துக்கே கேடு சூழ்ந்தவனாவான்.'

—பண்டித ஜவஹர்

ரூஸ்வெல்டின் நாலு சுதந்தரங்கள்: 'நம் நாட்டினர் (அமெரிக்கர்) இந்த நான்கு சுதந்தரங்களையும் உலகத்துக்குக் கொடுத்துவிட முடியாது: (1) பேச்சு சுதந்தரம்; (2) தன் சொந்த முறையில் தெய்வ வணக்கம் செய்யும் சுதந்தரம்; (3) தேவைகள் இல்லாது வாழும் சுதந்தரம்; (4) பயமில்லாது ஜீவிக்கும் சுதந்தரம். இந்த நாலு சுதந்தரங்களையும் உலகெங்கும் ஸ்தாபிதம் செய்துவிடுகிறோமென்பது அதிகப் பிரசங்கித்தனமாகும். இது ஏதோ பெரிய லட்சியமல்ல. அரசியல் 'ஹம்பக்'தான் ஆகும். அயல் நாடுகளில் உள்ளோர் அப்படித்தான் மதிக்கிறார்கள்.'

—ஹென்ரி ஜே. டெய்லர்

ஆண்களின் ஏமாற்று வேலை: 'பாத்திரங்களைக் கழுவவும் வீடு பெருக்கி மெழுகவும் தனித் திறமை வேண்டும் என்றும், அது பெண்களுக்கே உண்டென்றும், ஆண்கள் பாசாங்கு செய்து வருகிறார்கள் அல்லவா? இந்தப் பாசாங்கின் மூலம், உலகம் தோன்றிய காலம் தொட்டு இன்றுவரையில், ஆண்கள் எவ்வளவு ராத்தல் சதையைத் தேயாமல் காப்பாற்றி வந்திருக்கிறார்கள் என்று ஒரு கணக்குப்போட்டுப் பார்த்தால், அது ரொம்ப ரசமாயிருக்கும்.'

—ஹீவுட் புரூஸ்

ஜப்பானியரை வெல்ல: 'ஜப்பானியர் சுலபத்தில் சீர்குலையமாட்டார்கள். காலக்கிரமத்தில் தங்களுக்குத் தோல்வியே நேரும் என்ற நிலைமை வந்தால்கூட, கட்டுப்பாட்டிலும், மனோ திடத்திலும், பொருள் நிலையிலும் அவர்கள் சீர்குலைய மாட்டார்கள். அவர்களை அடியோடு அழித்தால்தான், அல்லது சளைத்துப்போகச் செய்தால்தான், அவர்களைத் தோற்கடிக்க முடியும். ஜெர்மானியருக்கும் ஜப்பானியருக்கும் இதுதான் வித்தியாசம். ஜப்பானியப் போரிலே, இந்தக் காரியத்தைக் செய்யவே நாம் முயன்றுகொண்டிருக்கிறோம்.'

—ஜோஸெப் ஸிக்ரு
(ஜப்பானில் மாஜி அமெரிக்க ஸ்தானீகர்)

வாழ்க்கை: 'வாழ்க்கை இனிமையானது, தம்பி! இரவும் பகலும் இருக்கின்றன, தம்பி! இரண்டும் இனிமையானவை. சூரியன், சந்திரன், நட்சத்திரங்களெல்லாம் இருக்கின்றன, தம்பி! எல்லாம் இனிமையானவை. கரம்பை வெளியிலே காற்றடிக்கிறது. அதுவும் இனிமை தான். வாழ்க்கை மகா இனிமையானது, தம்பி!'

—ஜார்ஜ் பாரோ

ஆங்கிலேயர் உண்மை: 'ஆங்கிலேயர் வெகு நயமாகவும் மரியாதையாகவும்தான் பேசுவார்கள். அதனால் ஏமாந்து போகாதீர்கள். அவசிய

மானல், அவர்கள் மகாமுரடர்கள் ஆகி விடுவார்கள். கடல் கடந்தும், மலே யேறியும், காடுகளிலும், கரம்பைகளி லும் ஆங்கில பாஷை பரவிவிட்டதே; இதெல்லாம் அவர்களுடைய நயத் தினல் ஏற்பட்ட பலன் அல்ல.'

— அமெரிக்கத் துருப்புகளுக்கு அதிகாரிகள் உபதேசம்

எதிலும் சந்தேகம்: 'எதை எடுத்தாலும், ரகஸ்யநோக்கம் கற்பித் துக்கொண் டிருக்கலாகாது. ருஷ்ய ஸ்தானீகர் இறந்துபோனர் என்று யாரோ பிரஞ்சு ராஜதந்திரி டாலி ராண்டிடம் சொன்னர்களாம். "அப் படியா! அது என்ன நோக்கத்தோ டேயோ!" என்ருராம் டாலிராண்ட்! எந்த விதமான ரகஸ்ய நோக்கமும் இல்லாமலே ஒரு ருஷ்ய ராஜதந்திரி கூடச் சாக முடியும் என்றுதான் நான் நினைக்கிறேன்.'

— ஸிட்னி எஸ். காம்பெல்

நிர்ப்பந்த தர்மம்: 'நிர்ப்பந் தத்தினல் அனுஷ்டிக்கும் தர்மமும் மதிப்பு வாய்ந்ததுதான் என்று அனு பவத்திலே நான் கண்டிக்கிறேன். நிர்ப்பந்தத்தினல் எந்த நல்ல காரிய மும் நடந்ததே யில்லே என்று சிலர் கிளிப்பிள்ளை மாதிரி சொல்லுகிருர் களே; இதைப் போன்ற பொய் வேறே ஏதாவது இருக்க முடியுமா என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.'

— ஜி. ஜி. கௌல்டன்

சோல்ஜரைக் கொல்லும் செலவு

பற்பல யுத்தங்களிலும் ஒரு ஸோல்ஜரைக் கொல்லுவதற்கு ஆன செலவை, ஐக்கிய அமெரிக்க நிபுணர்கள் பின்வருமாறு கணக்கிட்டிருக் கிருர்கள்:

ஜூலியஸ் ஸீஸர் காலத்தில்	3-ஷில்லிங், 6-பென்ஸ்
நெப்போலியன் யுத்தத்தில்	750-பவுன்
அமெரிக்க உள்நாட்டு யுத்தங்களில்	1,250-பவுன்
சென்ற ஐரோப்பிய யுத்தத்தில்	5,250-பவுன்
இந்த யுத்தத்தில்	12,500-பவுன்

— டெய்லி மெயில், லண்டன்.

*　　*

பகவான் கருணை

"நம் விருந்தாளியின் வேட்டை எப்படி? அவருக்கு ஏதாவது அகப் பட்டதா?" என்று, இந்திய வைஸிராய் லார்டு மிண்டோ, ஒரு வேலே யாளைக் கேட்டார்.

"இளைய சாகேப் அருமையாய்த்தான் சுட்டார், எஜமான். ஆனல், பகவான் பட்சிகளுக்குக் கருணை காட்டிவிட்டார்" என்று பதிலளித்தான் வேலேயாள்.

*　　*

துன்பத்தைப் பங்கிட்டால்

'நம் எல்லாருடைய துன்பங்களையும் ஒரே மொத்தமாய்க் குவித்து, அதை நம்மில் ஒவ்வொருவருக்கும் சம பங்காகப் பிரித்துக் கொடுப்போ மானல், அநேகமபேர் தங்கள் பங்கைச் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டு, நடையைக் கட்டிவிடுவார்கள்.'

புத்தக உலகம்

பொய்யும் மெய்யும்: ஆசிரியர்: க. சந்தானம். தினசரி வெளியீடு. விற்பனை உரிமையாளர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலை: அணா 4.

உலகப் பழக்க வழக்கங்களிலும், சகல துறைகளின் பற்பல கருத்துக்களிலும், பொய்யும் மெய்யும் கலந்து பின்னிக் கிடக்கின்றன. பொய்யைச் சலித்து மெய்யைக் காண்பதெப்படி என்பதை, ஆசிரியர் சுய சிந்தனையோடு விளக்குகிறார். தாமே பற்பல பிரச்னைகளையும் தெளிந்த அறிவோடு ஆராய்கிறார். காதல், வகுப்புச் சமரசம், தொழில் போன்ற சில விஷயங்களுக்கு அவர் சொல்லும் யோசனைகள் சுருக்கமா யிருந்தாலும், நூதனமானவை; சாமர்த்தியமானவை; ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை. அறிவுக்கு விருந்தான நூல்.

வார வழிபாட்டுப் பாமாலை: தொகுத்தவர்: ச. சச்சிதானந்தம் பிள்ளை. பி. ஏ., எல். டி. வெளியிட்டோர்: ந. இராஜகோபால முதலியார், மேல் சாணாங்குப்பம், ஆம்பூர். விலை அணா 8.

கூட்டமாய்ச் சேர்ந்து, தோத்திரங்களைப் பாடி, தெய்வ வணக்கம் செய்வது, உலகத்தில் பல சமயத்தார்கள் கடைப்பிடிக்கும் ஒரு முறையாகும். இதனால், சமய பக்தியும், கட்டுப்பாடும் வளர்வது சகஜமாயிருக்கிறது. இதே முறையைத் தமிழ்நாட்டிலும் பரப்ப, வட ஆற்காடு ஜில்லா கிராமங்களில், ஓர் இயக்கத்தையே, திரு. ராஜகோபால முதலியார் ஆரம்பித்து வைத்திருப்பது அரிய முயற்சியாகும். இத்தகைய வழிபாட்டை வாரத்துக்கொருதரம் முறையாகச் செய்வதற்காக, தேவாரம், திருவாசகம், அருட்பா, திருவாய்மொழி முதலியவைகளிலிருந்து எடுத்த பல பாடல்களையும் நாமாவளிகளையும் தொகுத்து, இந் நூலை ஆசிரியர் தயாரித்திருக்கிறார். பக்தி ரசமும் தத்துவார்த்தங்களும் நிறைந்த பாடல்கள். இந்து சமயப் பற்றுள்ளவர் அனைவரும் வைத்திருக்கவேண்டிய ஒரு புத்தகம்.

பூரண யோகம்: ஆசிரியர்: யோகி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: பாரத சக்தி நிலையம், புதுச்சேரி. விலை அணா 10.

'ஆனந்த அமர வாழ்வு மனிதனுக்கு உரியதாகும்'—இதை அடைவதற்கே யோக சாதனங்கள். அவைகளைப் பற்றியும், அவைகளை அனுஷ்டிப்பதற்குப் பூர்வாங்கமான தத்துவங்களைப் பற்றியும், ரத்தினச் சுருக்கமாக இந்நூல் விளக்குகிறது.

கந்த புராணத் திரட்டு: (உற்பத்தி காண்டம்.) ஆசிரியர்: ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல். வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர் விலை: 1-4-0.

பதினாயிரத்துக்குமேற்பட்ட பாடல்களைக் கொண்டது கந்தபுராணம். அதில் பொறுக்கியெடுத்த ஆயிரம் பாடல்களுக்குள் முழுப் புராணத்தையும் சுருக்கமாய் வெளியிடுவது ஆசிரியரின் நோக்கம். இந்த முதல் பாகத்தில் 352 பாட்டுகள் அடங்கியிருக்கின்றன. பிழையற்ற அருமையான பதிப்பு. எல்லாப் பாட்டுகளுக்கும் பொழிப்புரை தந்திருப்பதால், எவரும் எளிதில் படிக்கலாம். இனிமையான தெளிந்த நடையில் பொழிப்புரை அமைந்திருப்பது, படிக்க ருசியா யிருக்கிறது.

கட்டுரைக் கரும்பு: ஆசிரியர்: வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ. வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சினாப்பள்ளி. விலை ரூ. 2-0-0.

இலக்கிய மலர்ச்சி ஏற்படும்போது, அதை அனுபவிக்கவும், அது சரியான மார்க்கத்தில் செல்லவும், விமர்சனக் கலை வளர்வது இயல்பாகும்; அவசியமும் ஆகும். இந்த நூலில் எமர்ஸனின் 'விதி' என்ற ஒரு கட்டுரை மொழிபெயர்ப்பைத் தவிர மற்ற அனைத்தும் விமர்சன இலக்கியத்தை ஒட்டிய

வையே. இலக்கியச் சுவையை ரசிக்கும் முறையில், கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. இலக்கிய மலர்ச்சியில் ஆர்வமுள்ள அனைவரும் இந்தக் 'கரும்பை'க் கடித்துச் சுவைக்க வேண்டும். ஆம்; கடித்துத்தான். நடையிலே அந்தக் கணுக்கள் நிறைந்திருக்கின்றன.

இந்திய மறுமலர்ச்சி: ஆசிரியர்: ஸ்ரீ அரவிந்தர். மொழிபெயர்த்தவர்: பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல். வெளியிட்டோர்: தமிழ் நிலையம், புதுக்கோட்டை. விலை: ரூ. 1-4-0

நம் கலை, கவிதை, சமூகம், அரசியல் எல்லாவற்றிலும், மறுமலர்ச்சி எப்படிப்பட்டதாய் இருக்கவேண்டும்? எதையெடுத்தாலும் மேல்நாடுகளைப் பார்த்துக் காப்பியடிப்பதுதான் மறுமலர்ச்சி மார்க்கமா? மேல்நாட்டின் பௌதிக ஐதீகத்தைப் பின்பற்றுமல் நமது அத்யாத்ம ஐதீகத்தைப் பின்பற்றவேண்டும் என்பதுதான் ஸ்ரீ அரவிந்தர் கருத்து. அதை மிக்க அழகாக அவர் விளக்கியிருக்கிறுர். நல்ல மொழிபெயர்ப்பு.

மீண்டும் கூடுக: ஆசிரியர்: பி. வி. ஜோஷி. வெளியிட்டோர்: ஜனசக்தி பிரசுராலயம், ஜி. டி., சென்னை. விலை அணு 10.

காந்திஜியையும் ஜின்னுவையும் மீண்டும் கூடச் சொல்கிறுர் ஆசிரியர். அவர்களின் சமரசப் பேச்சுகளை, விரிவாக அவர் ஆராய்ந்திருக்கிறுர். 'பீப்பிள்ஸ் வார்' பத்திரிகையில் அவ்வப்போது எழுதிய பல கட்டுரைகளின் தொகுப்பாகையால், நூலிலே ஒரு தொடர்பு இல்லை. என்றுலும், பாகிஸ்தான் பிரச்னை, ஜின்னு கட்சி, காந்தி கருத்து ஆகியவை பற்றி ஏராளமான விவரங்கள் இதில் காணப்படுகின்றன. ஆசிரியரின் முடிவுகளை யெல்லாம் நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. ஆயினும், பிரச்னையின் பற்பல அம்சங்களையும் புரிந்துகொள்ள மிகவும் உபயோகமான கட்டுரைகள்.

திருநூல்: ஆசிரியர்: யோகி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலயம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூ. 2-4-0.

'நமது சமுதாயம் அறிவுத் திரு, அருள் திரு, அன்புத் திரு, வீரத் திரு, சுதந்திரத் திரு, அழகுத் திரு, செல்வத் திரு, வெறறித் திரு' ஆகிய எட்டுத திருக்களையும் பெற்றுத் திகழ இந்தத் திருநூல், திருவழி காட்டுகிறது. திரு. வி. க.வின் முகவுரை பெற்றிருக்கிறது. திருத்தமான மூன்றும் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. தமிழன் மேலான வாழ்வு வாழும் வழிகளைப் பற்றி, ஆசிரியர் தம்முடைய அருங் கருத்துக்கள் பலவற்றையும் இதிலே சொரிந்திருக்கிறுர்.

ஸ்ரீ கணேச ஸ்தோத்திரங்கள்: தயாரித்து வெளியிட்டவர்: டி. கே. ராஜகோபாலன், 37, ராயப்பேட்டை ஹைரோட், சென்னை. விலை: ரூ.1-8-0.

ஸ்ரீ முத்கள புராணம் என்ற நூலை, ஓர்ச்சா சமஸ்தானம் புத்தகாலயத்தில் கண்டுபிடித்து, அதிலிருந்து சில முக்கியோபதேசங்களையும் ஸ்தோத்திரங்களையும் எடுத்து வடமொழி மூலமும் தமிழ் உரையுமாய் இந்த நூலை வெளியிட்டிருக்கிறுர் ஆசிரியர். ஸ்ரீ கணேச மகாத்மியங்களையும், கணேசோபாசன ரகஸ்யங்களையும் இதிலே காணலாம். கணேச உபாசகர்களுக்கு இன்றியமையாத புத்தகம்.

தேவமலர்: ஆசிரியர்: ஸெல்மா லாகெர்லெவ். மொழி பெயர்த்தவர்: க.நா. சுப்ரமண்யம். வெளியிட்டோர்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை அணு பத்து.

இது அருமையான ஒரு ஸ்வீடிஷ் கதை. இதைப் படிக்கும்போது, நமது உள்ளம் ஒரு குழந்தையின் தன்மையை அடைந்து விடுகிறது. உன்னதக் கலைகளின் லட்சணமே அது தான். மன்னிப்பு என்கிற கிருஸ்து தர்மத்தை, மிக உயர்ந்த முறையில், சூட்சுமமான உவமைக் கதைபோல் விளக்குகிறது இது. தட்டுத் தடங்கலற்ற தெளிவான தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

உங்களுக்கு எது வேண்டும்?

உணவு,



துணி மணிகள்,

விறகு

வேண்டுமா?

அல்லது ரயில் பிரயாணமா?

இரண்டும் கிடைக்காது. இந்தியா பூராவுக்கும் தேவையான பொருள்களை தங்கு தடையின்றி ஏற்றிவர ரயில்வேக்கள் உத்திரவாதமளிக்க முடியாது; கூடவே கணக்கற்ற பிரயாணிகளுக்கு இடவசதியளிப்பதும் சாத்தியமில்லை. போதுமான என்ஜின்கள், வண்டிகள், வாகின்கள் கிடையா.

இந்த நிலைமையில் ரயில்வேயின் கடமை என்ன என்பதில் சந்தேகமே வேண்டாம். உணவுப் பொருள், துணிமணிகள், விறகு இவற்றிற்குத் தான் முதற் சலுகை. அவை மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. அவைகளில்லாவிடில் மக்கள் மடியவேண்டியதுதான்.

ஆகையால்தான் பிரயாணி வண்டிகளில் இவ்வளவு கூட்டம், நெருக்கடி. அதுவே சார்ஜுகள் அதிகரிப்புக்கும் காரணம். ஆகையால் நீங்கள் வீட்டைவிட்டு வெளியூருக்குக் கிளம்பக்கூடாது. அப்படி இருந்தால்தான் உங்களுக்கு வேண்டிய பொருள்களை கஷ்டமின்றிப்பெற வசதி யேற்படும்.

பிரயாணத்தைக் குறையுங்கள்.

RAA 681·TM

இந்தியத் தேயிலையில் மிகச்சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.



லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 G



பி.ஏ.ராஜு செட்டியார் & பிரதர்
வைரம், தங்கநகை வியாபாரிகள்
கோயமுத்தூர்

Regd. No. M. 4162 SHAKTI December 1944



Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan